பக்கங்கள்: 20
விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2047 | கார்த்திகை 23, வியாழக்கிழமை 08.12.2016 | கதிர் 33

## சித்திரவதை குறித்து விசாரணை செய்க!

இலங்கையில் விசாலமான பொலிஸ் அதிகாரத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகள் மீது சித்திரவதை, பாலியல் வல்லுறவு குற்றங்கள் புரியப்படுகின்றன என்று கூறப்படும் அறிக்கைகள் குறித்து இலங்கை விசாரணை செய்ய வேண்டும்.

சித்திரவதைக்கு எதிரான ஐ.நா. குழு இவ்வாறு நேற்றுக் கோரியிருக்கிறது.

# பாதுகாப்பு பலவீனமுற விடோம்!



## நாடாளுமன்றில் ஜனாதிபதி சூளுரை

கொழும்பு, டிசெ.8

நாட்டின் பாதுகாப்பு ஒருபோதும் அற்ப விடயமாகக் கருதப்பட மாட்டாது. பாதுகாப்பு பலவீனமுற இடமளிக்கவே மாட்டோம்.

- இவ்வாறு நேற்று நாடாளுமன்றத்தில் சூளுரைத்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

பாதுகாப்பு அமைச்சுக்குரிய வரவு - செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டின் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் கூறியவை வருமாறு:-

தேசிய பாதுகாப்பு தொடர்பில் இந்தசபையிலுள்ளஅனைவரும் சிறந்த புரிதலைக் கொண்டிருக்க வேண்டும். தேசிய பாதுகாப்பைப் பொறுத்த வரையில் சர்வதேச மட்டத்திலான ஒத்துழைப்பும்மற்

பக்கம் 20 »

## 48 பயணிகளுடன் பாக். விமானம் விழுந்து நொறுங்கியது

பாகிஸ்தான் விமானம் ஒன்று 48 பயணிகளுடன் விழுந்து நொறுங்கியதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பிகே.661 என்ற பாகிஸ்தான் விமானமே இவ்வாறு விபத்துக்குள்ளாகி உள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பாகிஸ்தானின் வடக்கு நகரமான சித்ராலிலிருந்து இஸ்லாமாபாத் நோக்கிச் சென்ற விமா

பக்கம் 20 »

## ரூ.2 கோடி பெறுமதி கொக்கேயினுடன் இருவர் கைது!

அவிசாவளை - தல்துவ பகுதியில் வைத்து நேற்று முன்தினம் இரவு இரண்டுகோடிரூபா பெறுமதியான கொக்கேயின் போதைப்பொருளுடன் இரு இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

# நவீனமாகிறது ராணுவம்!



## நாடாளுமன்றில் பிரதமர் அறிவிப்பு

**கொழும்பு, டிசெம்பர் 08**

**ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையிலான நல்லாட்சி அரசு யுத்த விமானங்கள் மற்றும் கப்பல்களைக் கொள்வனவு செய்கின்றது. இராணுவத்தை நவீனமயப்படுத்துகின்றது.**

**-இவ்வாறு நேற்று பெருமிதத்துடன் நாடாளுமன்றத்தில் அறிவித்தார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.**

பாதுகாப்பு அமைச்சு, மின்வலு புத்தாக்கம், கனிய வளம் உட்பட நான்கு அமைச்சுக்குரிய வரவு - செலவுத் திட்ட ஒதுக்கீடு குறித்து நேற்று நாடாளுமன்றில் இடம்பெற்ற குழு நிலை விவாதத்தின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

யுத்தம் செய்யும் போது நவீன

பக்கம் 19 »

# 5 பிரதம நீதியரசர்களுக்கு எதிராக 'நீதித்துறை ஊழல்' விசாரணை!

## லஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு ஆரம்பித்தது

கொழும்பு, டிசெ.08


தற்போதைய பிரதம நீதியரசர் உட்பட நாட்டில் பதவி வகித்த ஐந்து பிரதம நீதியரசர்களுக்கு எதிரான – நீதித்துறை ஊழல் குற்றச்சாட்டுகள் குறித்து - லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரிக்கும் ஆணைக்குழு தனது விசாரணைகளை ஆரம்பித்துள்ளது என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

நாகநந்த கொடிதுவக்கு என்ற சட்டத்தரணி கடந்த பெப்ரவரி 15 ஆம் திகதி எழுத்து மூலம் சமர்ப்பித்த முறைப்பாட்டின் அடிப்படையிலேயே இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தாம் சுயாதீனமாக நடத்திய விசாரணைகளின்போது சட்டத் துறையில் நாட்டின் மிக உயர்ந்த

பக்கம் 19 »

## சோ காலமானார்



இந்தியாவின் பிரபல பத்திரிகையாளரும், எழுத்தாளரும் திரைப்பட நடிகருமான 'சோ' நேற்று காலமானார். இறக்கும் போது அவருக்கு 84 வயது. உடல் நலக்குறைவு காரணமாகத் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த சோ.ராமசாமி (சோ) மாரடைப்பு காரணமாக நேற்றுக் காலை 5 மணியளவில் காலமானார.

பக்கம் 19 »
(மேலும் செய்தி 14ஆம் பக்கத்தில்)

## அளப்பு அருணாசலம்



அப்ப ஈழம்... இப்ப தீர்வு... எல்லாமே ஒரு நம்பிக்கைதான் பாருங்கோ...!

## புதிய அரசமைப்புக்குப் பொறுப்பான ஜயம்பதி எம்.பிக்கு அச்சுறுத்தல்!

கொழும்பு, டிசெ.08

புதிய அரசமைப்புத்தயாரிப்பு நடவடிக்கையில் மும்முரமாக ஈடுபட்டிருக்கும் அரசுத் தரப்பு எம்.பியான ஜயம்பதி விக்கிரமரட்ணவுக்கு தொலைபேசி மூலம் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிக்கின்றது.. இதனை அவரே நேற்று நாடாளுமன்றத்தில்வெளியிட்டார்.

புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் முக்கிய பிரமுகராக இவர் செயற்பட்டு வருகின்றார். அரசமைப்பு உருவாக்கத்துக்காக பிரதமர் நியமித்துள்ள நிபுணர் குழுவுக்கு இவரே தலைவர்.

தமக்கு நேர்ந்தவை குறித்து

பக்கம் 19 »

## சீன முதலீட்டாளர்களுக்கு எதிராக அம்பாந்தோட்டையில் போராட்டம்

கொழும்பு, டிசெ.08

அம்பாந்தோட்டை மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்துக்கு அருகில் உள்ள பகுதியைச் சீனாவின் முதலீட்டாளர்களுக்கு வழங்குவதற்கு நல்லாட்சி அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானத்துக்கு எதிராகத் துறைமுக ஊழியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

உடன் நடவடிக்கை எடுத்து அரசு இதனைத் தடுத்து நிறுத்தாவிட்டால் தொடர் போராட்டங்களை நடத்துவார்கள் என ஊழியர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்டம் நேற்றுப் பகல் அம்பாந்தோட்டை மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்துக்கு முன்பாக மேற்கொள்ளப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் ஏற்பட்ட பில்லியன் கணக்கான கடனைத் தீர்ப்பதற்காக அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைச் சார்ந்த பகுதிகளில் முதலிடுவதற்கு சீன அரசாங்கத்துக்கு வாய்ப்ப

பக்கம் 20 »

## குளத்தில் நீராடுவதற்குச் சென்ற சகோதரிகள் இருவர் மூழ்கிப் பலி!

### கிளிநொச்சியில் படகு கவிழ்ந்ததால் பரிதாபம்

கிளிநொச்சி, டிசெ.08

கிளிநொச்சி ஆனைவிழுந்தான் குளத்தில் நீராடச் சென்ற 17 மற்றும் 15 வயதுடைய இரு சகோதரிகள் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் ஆனைவிழுந்தான் பகுதியைச் சேர்ந்த ரகுநாதன் நிதர்சினி(வயது-17), ரகுநாதன் கவிப்பிரியா (வயது-15) ஆகிய சகோதரிகளே உயிரிழந்தவர்களாவர்.

இதில் நிதர்சினி என்ற சிறுமிக்கு கடந்த இரு மாதங்களுக்கு

பக்கம் 19 »

## யுத்தம் மீள வெடித்ததும் சம்பந்தன் 'ஈழம் கிட்டும்' எனக் கூறி மகிழ்ந்தார்



### கெஹலிய நாடாளுமன்றில் தகவல்



கொழும்பு, டிசெ.08

மாவிலாறு விவகாரத்தோடு யுத்தம் மீண்டும் வெடித்ததும் தமிழீழத்தைப் பெற்றுவிடுவோம் என்று கூறி சம்பந்தன் மகிழ்ந்தார்.

- இப்படி நேற்று நாடாளுமன்றத்தில் தகவல் வெளியிட்டார் கண்டி மாவட்டத்தின் எம்.பியும் கூட்டுஎதிரணியின் பிரமுகருமான கெஹலிய ரம்புக்வெல. அங்கு அவர் இது குறித்து மேலும் கூறியவை வருமாறு:

நான் தேசிய பாதுகாப்புக்கான

பக்கம் 19 »

காலைக்கதிர் Kalaikkathir



# இறுதி யுத்தத்தில் சரணடைந்த போராளிகளை சும்மா வெளியில் விட்டு விட்டு வடக்கிலிருக்கும் இராணுவத்தைக் குறைப்பதா?

## அந்த விடயத்தில் சமரசம் இல்லை என்கிறார் சமரசிங்க

இறுதி யுத்தத்தில்சரணடைந்த முன்னாள் போராளிகளுக்கு முறையான புனர்வாழ்வு அளிக்கப்படாமல் விடுவிக்கப்பட்ட நிலையில், வடக்கில் இருந்து இராணுவத்தினரை வெளியேற்றுவதை ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று முன்னாள் மனித உரிமைகள் அமைச்சரும், நல்லாட்சி அரசின் திறன் விருத்தி அமைச்சருமான மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

வடக்கிலிருந்து இராணுவத்தினரை வெளியேற்றவே முடியாது என்று குறிப்பிட்ட அவர், வடக்கிலும், கிழக்கிலும் எவ்வளவு படையினர் இருக்க வேண்டும் என்பதைப் பாதுகாப்புச் சபையைத் தவிர எவராலும் தீர்மானிக்க முடியாது என்றும் கூறினார்.

2017ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் குழுநிலை விவாதம் நாடாளுமன்றத்தில் நடைபெற்று வருகின்றது. இதற்கமைய இன்றைய தினம் பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் அமைச்சர் மஹிந்த சமரசிங்கவும் கலந்து கொண்டார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் அவர் கூறியவை வருமாறு:-

“வடக்கில் எத்தனை இராணுவம் உள்ளது என்றும், கிழக்கில் எவ்வளவு இராணுவம் இருக்க வேண்டும் என்பது பற்றியும் கருத்தைத் தெரிவித்துக் கொள்வதற்கு எவருக்கும் உரிமையில்லை. வடக்கிலும், கிழக்கிலும் எத்தனை இராணுவத்தினர் இருக்க வேண்டும் என்பதைப் பாதுகாப்புச் சபையே தீர்மானிக்கும். யுத்தம் முடிவடைந்த பின்னர் 12000 முன்னாள் போராளிகள் சரணடைந்தனர். பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா கூறியதைப்போன்று முன்னாள் போராளிகள் அனைவரையும் முன்னாள் அரசாங்கம் சரிவரப் புனர்வாழ்வுக்கு உட்படுத்தவில்லை. 'ஐ.ஓ.எம்' போன்ற சர்வதேச அமைப்புக்களைச் சம்பந்தப்படுத்தி, என்ன நடந்தது என்று தெரியாது. எவ்வாறாயினும் அத்தனை முன்னாள் போராளிகளையும் சமூகமயப்படுத்தினோம். இன்று அவர்கள் எங்கு இருக்கின்றார்கள்? என்ன செய்கின்றார்கள் என்பது குறித்துத் தகவல்கள் இல்லை. இவ்வாறான சூழ்நிலை இருக்கும் போது வடக்கிலிருந்து எவ்வாறு இராணுவத்தினரை வெளியேற்றுவது, நமது நாட்டின் பாதுகாப்பு உச்ச அளவில் இருப்பது அவசியமாகும். அதனை எப்போதும் குறைக்க முடியாது' – என்றார்.

# சட்டவிரோதமாக மணல் ஏற்றிச்சென்ற இரண்டு உழவியந்திரங்கள் சிக்கின

## சாரதிகள் இருவர் கைது!

அச்சுவேலி, டிசெ.08

கிளிநொச்சி பொலிஸ் பிராந்தியத்திற்கு உட்பட்ட இருவேறு இடங்களில் சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றிச்சென்ற இரண்டு உழவு இயந்திரங்களைக் கைப்பற்றிய கிளிநொச்சிப் பொலிஸார் அதன் சாரதிகளையும் கைது செய்தனர்.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை இரணைமடுப் பகுதியில் இருந்து கல்மடு நோக்கி உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றிச் செல்லப்பட்டது. இதன்போது இரணைமடு பாலத்தில் நின்ற விசேட குற்றத்தடுப்பு பொலிஸார் உழவு இயந்திரத்தை மறித்துச் சோதனையிட்டபோது சட்டவிரோதமாகமணல் அகழ்ந்து சென்றமை கண்டு பிடிக்கப்பட்டது.

அதேபோல், கிருஷ்ணபுரம் பகுதியில் இருந்து மலையாளபுரம் பகுதிக்கு மணல் ஏற்றிச் சென்ற உழவு இயந்திரம் சோதனையின்போது சிக்கியது. அதன் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-09)

# அனுமதியின்றி மதுபானம் விற்றவருக்கு மூன்று மாதகாலம் சிறைத்தண்டனை

அச்சுவேலி, டிசெ.08

சாவகச்சேரி பகுதியில் 180 மில்லிலீற்றர் கொள்ளளவு உடைய அரச மதுபானத்தை விற்பனை செய்த ஒருவரைக் கைதுசெய்த சாவகச்சேரி பொலிஸார் அவரை நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்ப் படுத்தினர்.

விசாரணைகளை மேற்கொண்ட சாவகச்சேரி நீதிமன்ற பதில் நீதிவான் செல்லையா கணபதிப்பிள்ளை, அவருக்கு 30 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

அந்த நபர் அபராதத் தொகையைச் செலுத்த முடியாத காரணத்தால் அவருக்கு மூன்று மாதகால சாதாரண சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (ம-09)

# நகையைத் திருப்பிக் கொடுக்காத நபர் ஒருவருக்கு விளக்கமறியல்

கைமாறாக வாங்கிய நகையை மீள ஒப்படைக்கத் தவறிய ஒருவரை எதிர்வரும் 20 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்ற பதில் நீதிவான் செல்லையா கணபதிபிள்ளை உத்தரவிட்டார்.

சாவகச்சேரி பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவரிடம் அதே இடத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் இரண்டரைப் பவுண் நகை மற்றும் ஒரு தொகைப் பணத்தைக் கைமாறாக வாங்கியிருந்தார். ஆனால், நீண்ட நாள்களாகியும் அதனைத் திருப்பிக் கொடுக்கவில்லை.

பாதிக்கப்பட்ட பெண் இது தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். இந்த முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சந்தேக நபரைக் கைது செய்து சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

அந்த நபர் கடந்த தவணையின்போது பணத்தை ஒப்படைத்தார். அடுத்த வழக்குத் தவணையின்போது நகையை ஒப்படைப்பதாக மன்றில் தெரிவித்தார்.

ஆனால், நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வழக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்ட போது அவர் நகையை ஒப்படைக்கத் தவறியிருந்தார். இதனால் அவரை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ம-09)

## ஹன்ரர் வாகனத்தின் சாகசம்

# வல்லை வெளியில் நேற்று விபத்து முதியவரின் நான்கு பற்கள் பறந்தன!

அச்சுவேலி, டிசெ.08

பருத்தித்துறை–யாழ்ப்பாணம் பிரதான வீதியின் வல்லை பாலத்துக்கு அண்மையில் இடம்பெற்ற விபத்தில் முதியவர் ஒருவரின் நான்கு பற்கள் உடைந்தன. அவர் காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவரது மனைவியும் காயமடைந்தார்.



விபத்தில் வீழ்ந்த பற்கள் வீதியில்



அடித்த வாகனத்தில் அடிபட்ட வாகனம் ஏற்றப்படும் காட்சி

இச்சம்பவம் நேற்று புதன் கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் இடம்பெற்றது. இதில், வரணி வடக்கைச் சேர்ந்த கணபதி தணிகாசலம் (வயது-68), அவரது மனைவியான த.சுசீலா (வயது-60) ஆகியோரே காயமடைந்தனர்.

மேற்படி முதியவரும் அவரது மனைவியும் யாழ்ப்பாணத்தில் இருந்து நெல்லியடி நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்தனர். அப்போது மழை பெய்யத் தொடங்கியதால் அவர்கள் வீதியோரமாக நின்று மழை அங்கியை அணிந்தனர்.

அவர்களுக்கு அண்மையில் முச்சக்கரவண்டி ஒன்றும் நிறுத்தப்பட்டு மழை நீர் உள்ளே புகாதவாறு தறப்பாள் சீர்செய்யப்பட்டது.

இந்தச் சந்தர்ப்பத்தில், அதே திசையில் மிக வேகமாகச் சென்ற ஹன்ரர் வாகனம் வேகக்கட்டுப்பாட்டை இழந்து முச்சக்கரவண்டி மீது மோதிய பின்னர் அருகில் நின்ற முதியவரையும் அவரது மனைவியையும் மோதியது.

இந்த விபத்தால் முதியவரும் மனைவியும் காயமடைந்ததுடன் முதியவரின் நான்கு பற்கள் உடைந்து வீதியில் வீழ்ந்து கிடந்தன. முச்சக்கரவண்டிச் சாரதியும் சிறுகாயமடைந்தார். இந்தவிபத்து தொடர்பாக நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-09-40)

# அமரர் ஜெயலலிதாவுக்கு மன்னாரில் நேற்று அஞ்சலி





தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் அமரர் ஜெயலலிதாவுக்கு நேற்று புதன்கிழமை மன்னாரில் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில், அதன் தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில் ஒன்றியத்தின் அலுவலகத்தில் நேற்று மாலை 4 மணிக்கு இந்த அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

இந்த அஞ்சலி நிகழ்வின் போது மதத் தலைவர்கள், பொது மக்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

அமரர் ஜெயலலிதாவின் திருவுருவப் படத்திற்கு சுடரேற்றி, மாலை அணிவிக்கப்பட்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. அஞ்சலி உரைகளும் இடம்பெற்றன. (ம)

# அருந்தவபாலன் விபத்தில் காயம்

சாவகச்சேரி, டிசெ. 08

சாவகச்சேரி, நுணாவில் மத்தியில் ஏ9 வீதியில் நடந்த விபத்தில் கூட்டமைப்பின் சாவகச்சேரி அமைப்பாளரும் முன்னாள் அதிபருமான க.அருந்தவபாலனும் அவரது மனைவியும் காயமடைந்தனர்.

சாவகச்சேரி பக்கமாக இருந்து மோட்டார் சைக்கிளில் மனைவியுடன் வந்த அருந்தவபாலன்,ஏ9 வீதியில் இருந்து தமது வீட்டுக்குச் செல்ல வேலாயுதம் வீதிக்குத் திரும்ப முற்பட்ட போது, பாண் விற்பனையில் ஈடுபடும் வாகனம் ஒன்றுடன் மோதிவிபத்து ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.சம்பவத்தில் அருந்தவபாலன் பலத்த காயமடைந்தார்.மனைவி சிறு காயங்களுக்கு இலக்கானார்.

இருவரும் நேற்றுப் பகல் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விபத்துக் குறித்து சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (இ-23)

# மீன் வியாபாரி போல நடித்து கசிப்பு விற்ற நபர் கைது

அச்சுவேலி, டிசெ.08

மீன் வியாபாரத்துக்குச் செல்வதுபோல பாசாங்கு செய்து, மீன் பெட்டிக்குள் 30 போத்தல் கசிப்பு கொண்டு சென்ற நபர் ஒருவரை கிளிநொச்சிப் பொலிஸார் கைது செய்தனர். தர்மபுரத்தைச் சேர்ந்த 36 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார்.

தர்மபுரம் பகுதியில் இருந்து சாந்தபுரம் பகுதிக்கு ஒருவர் மீன் பெட்டிக்குள் வைத்து கசிப்பு எடுத்துச் செல்கிறார் என கிளிநொச்சி மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு தகவல் கிடைத்தது.

அவரது தலைமையில் சென்ற பொலிஸ் குழுவினர் சாந்தபுரம் 5 ஆம் யுனிற் பகுதியில் வைத்து குறித்த நபரைக் கைது செய்தனர். அவரது மோட்டார் சைக்கிளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. (ம-09)

## கூட்டமைப்பினர் மீதான நாரந்தனைத் தாக்குதல்:

# நெப்போலியன், மதன், ஜீவனுக்கு இரட்டைத் தூக்கு! அத்துடன் 25 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை!!

### 15 வருடங்களுக்கு முந்திய வழக்கு 15 நாள்கள் விசாரணையில் முடிவு

கடந்த 2001ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28 ஆம் திகதி ஊர்காவற்றுறை நாரந்தனையில் தேர்தல் பரப்புரைக்குச் சென்ற தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் மீது தாக்குதல் நடத்தி இருவரைக் கொலை செய்து 18 பேருக்குக் காயம் ஏற்படுத்தியதாக ஈ.பி.டி.பி. கட்சியைச் சேர்ந்த 4 பேருக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்ட வழக்கில் 3 எதிரிகளுக்கு 25 ஆண்டுகள் இரட்டை மரண தண்டனையும் 25 ஆண்டுகள் கடூழியச்சிறைத்தண்டனையும் விதித்து யாழ்.மேல் நீதிமன்றம் புதன் கிழமையன்று தீர்ப்பளித்துள்ளது.

பதினைந்து வருடங்களின் பின்னர் இந்த வழக்கை யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் 15 நாள்கள் தொடர்ச்சியாக விசாரணை செய்ததன் பின்னர் இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளார்.

ஈ.பி.டி.பி. கட்சியின் முழுமையான கட்டுப்பாட்டில் இருந்த ஊர்காவற்றுறை பிரதேசத்தில் நாரந்தனை பகுதிக்குச் சென்ற தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் மீதுதாக்குதல் நடத்தினர் என ஈ.பி.டி.பி கட்சியின் தீவுப்பகுதி இராணுவ பொறுப்பாளராக இருந்த செபஸ்டியன் ரமேஸ் அல்லது நெப்போலியன், தீவுப்பகுதி ஈ.பி.டி.பி. கட்சியின் பிரதேச சபைத் தலைவர் நடராஜா மதனராஜா அல்லது மதன், ஈ.பி.டி.பி. கட்சியைச் சேர்ந்த அன்ரன் ஜீவராஜா அல்லது ஜீவன், வேலணை பிரதேச சபைத் தலைவர் நமசிவாயம்கருணாகர மூர்த்தி ஆகிய நான்கு பேருக்கும் எதிராக சட்ட மா அதிபரினால், யாழ்.மேல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் 2 கொலைக்குற்றச்சாட்டுக்களுடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த மாவை சேனாதிராசா, சிவாஜிலிங்கம் உள்ளிட்ட 18 பேருக்குக் கடும் காயம் விளைவித்தமை, 3 வாகனங்களைச் சேதப்படுத்தியமை, சட்டவிரோத கூட்டம்கூடி குற்றம் புரிந்தமை, பொது எண்ணத்துடன் குற்றம் புரிந்தமை உட்பட 47 குற்றச்சாட்டுக்கள் இந்த நான்கு எதிரிகள் மீது சுமத்தப்பட்டிருந்தன.

இந்த வழக்கில் முதலாம், இரண்டாம் எதிரிகளான நெப்போலியன் மற்றும் மதனராஜா ஆகிய இருவரும் வவுனியா மேல் நீதிமன்றத்தினால் பிணை வழங்கப்பட்டு பிணையில் இருந்த காலத்தில் தப்பியோடி பிரித்தானியா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இருப்பதாக யாழ்.மேல் நீதிமன்ற விசாரணையின்போது அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து, முதலாம், இரண்டாம் எதிரிகள் இல்லாமலேயே யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் முன்னிலையில் 15 நாள்கள் தொடர்ச்சியாக இந்த வழக்கு விசாரணைகள் நடைபெற்றன.

அரசசட்டவாதி நாகரட்ணம் நிசாந்தன் வழக்கை நெறிப்படுத்தினார். விசாரணைகளின் முடிவில் புதன்கிழமை திறந்த நீதிமன்றத்தில், நீதிபதி இளஞ்செழியன 140 பக்கம் கொண்ட தனது தீர்ப்பை வாசித்தார்.

அந்தத் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இந்த வழக்கின் நான்காவது எதிரியாகிய நமசிவாயம் கருணாகர மூர்த்திக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் எண்பிக்கப்படாதபடியால் அனைத்து குற்றச்சாட்டுக்களிலிருந்தும் அவர் விடுவிக்கப்படுகின்றார்.

ஏரம்பு பேரம்பலம், யோகசிங்கம் கமலஸ்டோன் ஆகிய இருவரையும் கொலை செய்த குற்றச்சாட்டில் முதலாம். இரண்டாம், மூன்றாம் எதிரிகளான நெப்போலியன், மதன், ஜீவன் ஆகிய மூவரும் குற்றவாளிகளாகக் காணப்பட்டு, மூவருக்கும் இரட்டை மரண தண்டனை விதிக்கப்படுகின்றது.

மாவை சேனாதிராசாவுக்குக் காயம் ஏற்படுத்திய குற்றச்சாட்டிலும் இவர்கள் மூவரும் குற்றவாளிகளாகக் காணப்பட்டு, 5 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனையும் 10 ஆயிரம் ரூபா தண்டமும் விதிக்கப்படுகின்றது. தண்டப் பணம் செலுத்தத் தவறினால் 6 மாதங்கள் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும்.

சிவாஜிலிங்கத்துக்குக் காயம் ஏற்படுத்திய குற்றச்சாட்டிலும் இவர்கள் மூவரும் குற்றவாளிகளாகக் காணப்பட்டுள்ளனர். இந்தக் குற்றத்துக்குத் தண்டனையாக 5 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனையும் 10 ஆயிரம் ரூபா தண்டமும் விதிக்கப்படுகின்றது. தண்டப் பணம் செலுத்தத் தவறினால், 6 மாதங்கள் கடூழியச் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும்.

இந்த இருவரையும் தவிர ஏனைய 16 பேருக்குக் காயம் ஏற்படுத்திய குற்றச்சாட்டிலும், 3 வாகனங்களுக்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டிலும் இந்த எதிரிகள் மூவரும் குற்றவாளிகளாகக் காணப்பட்டுள்ளனர். மாவை சேனாதிராஜா மற்றும் சிவாஜிலிங்கம் உள்ளிட்ட 18 பேருக்குக்காயம் விளைவித்த குற்றத்துக்காக மொத்தமாக 3 எதிரிகளுக்கும் 20 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனையும் ஒரு லட்சம் ரூபா தண்டப் பணமும் தண்டனையாக விதிக்கப்படு கின்றது. தண்டப்பணம் செலுத்தத் தவறினால் 5 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும். இப்படி தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

### தலைமறைவாகியுள்ள நெப்போலியனையும் மதனையும் தேடிக் கண்டுபிடிக்க சர்வதேச பிடிவிறாந்து உத்தரவு

இந்த வழக்கின் முதலாம் எதிரியாகிய நெப்போலியன் இங்கிலாந்திலும், இரண்டாம் எதிரியாகிய மதன் ஐரோப்பிய நாடு ஒன்றிலும், இங்கிருந்து தப்பி ஓடி வசிக்கின்றனர் என நீதிமன்றத்துக்குத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து, இங்கிலாந்தில் மறைந்து வாழ்பவரைக் கைது செய்து, அங்கிருந்து, இலங்கைக்கு நாடு கடத்துவதற்கு, இலங்கை ஜனாதிபதி இங்கிலாந்துப் பிரதமருடன் இராஜதந்திர ரீதியில் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று யாழ்.மேல் நீதிமன்றம் பரிந்துரைத்திருக்கின்றது.

அதேபோன்று இங்கிலாந்து வெளிவிவகார அமைச்சருடன், இலங்கை வெளிவிவகார அமைச்சர் இராஜதந்திர ரீதியில் தொடர்பு கொண்டு, அங்கு மறைந்து வாழ்பவரை, இலங்கைக்கு நாடு கடத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் யாழ். மேல் நீதிமன்றம் பரிந்துரை செய்திருக்கின்றது.

இதற்கிடையில் இங்கிலாந்தில் உள்ள இலங்கைக்கான தூதுவர், அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சருடன்தொடர்பு கொண்டு இந்த வழக்கின் முதலாம் இரண்டாம் எதிரிகளான நெப்போலியன் மற்றும் மதன் ஆகியோர் அங்கு வசிக்கின்றார்களா என்பதைக் கண்டறிந்து, அவர்களை அங்கிருந்து இலங்கைக்கு நாடு கடத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் நீதிமன்றம் பரிந்துரைத்துள்ளது.

இந்த வழக்கில் தேடப்படுகின்ற முதலாம், இரண்டாம் எதிரிகளை இலங்கைக்கு நாடு கடத்துவது தொடர்பில் எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் குறித்து நீதிமன்றத்துக்கு 3 மாத காலத்துக்குள் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று நீதிமன்றம் பொலிஸாருக்கு உத்தர விட்டுள்ளது.

அதேநேரம் தலைமறைவாகியுள்ள எதிரிகள் இருவரையும் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறும் சர்வதேச பிடிவிறாந்தும் நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## வடக்கு எதிர்க்கட்சித் தலைவர் நியமனம்: மீள் பரிசீலனை கோரி நிராகரிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.08

வடமாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவு தொடர்பில் எனக்கு உடன்பாடில்லை. அத்துடன் சபைக்குரிய நடைமுறையில் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவு இடம்பெறவில்லை. இதனால் இந்த முடிவை மீள பரிசீலனை செய்ய வேண்டும். -இவ்வாறு வடமாகாணசபையின் எதிர்க்கட்சி உறுப்பினர் வை.தவநாதன் அவைத்தலைவர் சி.வீ.கே.சிவஞானத்திடம் நேற்றைய அமர்வின்போது கோரிக்கை விடுத்தார்.

வடமாகாண சபையின் 67 ஆவது அமர்வு நேற்று புதன் கிழமை காலை அவைத்தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

இவ் விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடமாகாண சபைக்கான எதிர்க்கட்சித் தலைவர்கள் இரண்டு முறை தெரிவின் அடிப்படையில் நியமிக்கப்பட்டமையைப் போன்று இந்த முறையும் அப்பதவி நியமனம் இடம்பெற வேண்டும் என்று அவைத்தலைவரிடம் ஏற்கனவே கூறியிருந்தேன்.

இலங்கையிலுள்ள வேறு மாகாண சபைகளில் மேற்படி பதவிக்கு நியமனம் இடம்பெறும் முறைமையை மேற்கோள்காட்டி முதல் இரண்டு எதிர்க்கட்சி பதவி நியமனங்கள் வழங்கப்பட்ட முறைமையை மீறி இம்முறை புதியதொரு முறையில் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

முதல் இரண்டு சந்தர்ப்பங்களிலும் இப்பதவிக்கு உரியவர் தெரிவு செய்யப்பட்டமை போன்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் அவைத் தலைவருக்கு அனுப்பிய கடிதத்தின் அடிப்படையில் இம்முறையும் நியமனம் இடம்பெறுவதே சரியானது.

வேறு மாகாண சபையில் வேறுநடைமுறைகள் இருந்தாலும் இந்த மாகாண சபையில் வேறு மாகாண சபைகளைப் போன்ற நடைமுறைகள் இல்லை. அதனால் முதல் இரண்டு தெரிவுகளின் அடிப்படையில்தான் இந்த தெரிவும் அமைந்திருக்க வேண்டும். இந்த புதிய தெரிவு முறைமை தொடர்பாக வடமாகாண சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு முன்கூட்டியே ஏககாலத்தில் அவைத் தலைவர்கள் தெரியப்படுத்தியிருக்க வேண்டும்.

அவைத் தலைவர், எனக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்கப்படக்கூடாது என்ற எண்ணத்திலேயே இந்தப் புதிய நடைமுறையை பின்பற்றி இருக்கின்றார்.


ஆகவே, இந்த எதிர்க்கட்சித் தலைவர் தெரிவு தொடர்பாக அவைத்தலைவர் மீள் பரிசீலனை செய்யவேண்டும் என்று நான் கேட்கின்றேன்-என்றார்.

இதற்கு பதிலளித்த அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தெரிவித்தவை வருமாறு:-

எதிர்க்கட்சித் தலைவர் பதவி தொடர்பாக நான் ஏற்கனவே தெளிவாக பதிலளித்து விட்டேன் தனியாக இச் சபையின் நடைமுறையைப் பார்த்து இத் தெரிவினை மேற்கொள்ளவில்லை. நாடாளுமன்ற செயற்பாடு தொடர்பான நடவடிக்கை முன்மாதிரியையும் பார்த்துத்தான் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளேன்.

(19 ஆம் பக்கம் பார்க்க)


**யாழ்ப்பாணத்தில் தொழில்நுட்பத்துறையில் சாதனை படைத்து வரும் விஸ்டம் தொழில்நுட்பக் கல்லூரி**



யாழ்ப்பாணத்தில் க.பொ.த உயர்தரப் பிரிவு தொழில்நுட்பப் பாடங்களுக்கு சிறப்பாக இயங்கிவரும் தனியார் கல்வி நிறுவனமாக விஸ்டம் தொழில்நுட்பக் கல்லூரி இனங்காணப்பட்டுள்ளது. பொறியியல் தொழில்நுட்பம், உயிர் முறைமைகள், தொழில்நுட்பம் பாடங்களுக்கு மிகச்சிறந்த விரிவுரைகளும் செயல்முறை வகுப்புகளும் நடைபெற்று வருகின்றன. மாணவர்கள் இறுதிப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெறுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(C/096)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, editor@kalaikkathir.lk
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## வீட்டுப் பிரச்சினையும் நாட்டுப் பிரச்சினையும்

'கூரை ஏறி கோழி பிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைகுந்தம் போவேன் என்றானாம்....!'- என்றொரு முதுமொழி நம்மத்தியில் உண்டு.

இந்த நல்லாட்சி அரசுடன் உரையாடி, நீண்ட காலம் புரையோடிப் போயிருக்கும் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்போகிறோம் என்ற தமிழ்க் கூட்டமைப்பின் நம்பிக்கையை நோக்கும் போது, இந்தப் பழமொழிதான் நினைவுக்கு வருகிறது. அப்படி நினைவுக்கு வருவதில் நியாயமும் உண்டு.

சின்னச் சின்ன நியாயமான விடயங்களைக் கூட - வெளிப்படையாக நீதி, நியாயம் புலப்படுகின்ற அற்ப விவகாரங்களில் தன்னும் - இந்த அரசுடன் சேர்ந்து சரியானதைச் செய்ய முடியாமல் அல்லாடும் கூட்டமைப்பு, தேசிய இனப் பிரச்சினைக்கு இந்த அரசுடன் சேர்ந்து செயற்பட்டு தீர்வு காணப்போவது என்பது 'வானம் ஏறி வைகுந்தம் போகும்' கனவு போன்றுதான் தென்படுகின்றது.

யுத்தத்தினாலும், இடப்பெயர்வுகளினாலும் வீடு, வாசல்களை இழந்த வடக்கு, கிழக்குத் தமிழ் மக்களுக்காக 65 ஆயிரம் வீடுகளைக் கட்டுவது தொடர்பான விடயமும் அத்தகையவற்றில் ஒன்றே.

ஒவ்வொன்றும் சுமார் 21 லட்சம் ரூபாவில் ஸ்தாபிக்கப்படும் பொருத்து வீடுகளாக அமைக்கும் திட்டம் ஒன்றை மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் என்ற முறையில் அமைச்சர் சுவாமிநாதன் முன்வைத்தார். வெளிநாட்டுக் கடன் பெற்று, வெளிநாட்டு நிறுவனம் ஒன்றுக்கு ஒப்பந்தம் வழங்கி, இந்தத் திட்டத்தை முன்னெடுக்க அவர் முயற்சி எடுத்தார்.

தமிழ்க் கூட்டமைப்பினர் ஒட்டுமொத்தமாக- வெளிப்படையாக - இந்தத் திட்டத்தை கடுமையாக ஆட்சேபித்தனர்; தொடர்ந்தும் வலிமையாக எதிர்க்கின்றனர்.

★21 லட்சம் ரூபாவுக்கு பொருத்து வீடுகள் அமைப்பதற்குப் பதிலாக பத்து லட்சம் ரூபா செலவில் கட்டு வீடுகள் - கல் வீடுகள்- கட்ட முடியும் என்பதை ஒரு விவரமான திட்ட ஆதாரத்துடன் கூட்டமைப்பு முன்வைத்தது.

★பொருத்து வீடு ஒரு தலைமுறைக்குக் கூட தாக்குப் பிடிக்காது. ஆனால் கட்டு வீடுகள் நான்கு தலைமுறைகளையும் தாண்டக் கூடியவை.

★வெளிநாட்டுக் கடனில், வெளிநாட்டு ஒப்பந்தக்காரர் மூலம் பொருத்து வீடுகள் அமைக்கத் திட்டமிடப்படுகின்றது. ஆனால் கட்டு வீடுகளுக்கு நான்கு, ஐந்து உள்நாட்டு வங்கிகள் கடன் உதவி தந்துதவ முன்வந்துள்ளன. ஆகவே உள்நாட்டுக் கடனில் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வது சாலச்சிறந்தது.

★பொருத்து வீடுகளுக்கு ஒப்பந்தம் செய்திருக்கும் வெளிநாட்டு நிறுவனமான 'மிட்டல்' அமைப்பு, வெளிநாடுகளில் இது போன்ற ஒப்பந்தங்களில் தவறிழைத்தமையால் வெளிநாட்டு நீதிமன்றங்களினால் அபராதம் மற்றும் தண்டனைப் பணம் செலுத்தும் தீர்ப்பு உத்தரவுக்கு உள்ளானது. ஆனால் கட்டு வீடுகளோ உள்நாட்டில் - உள்ளூர் தொழிலாளிகள் மற்றும் முகவர் மூலம் - அமைக்கப்படுகின்றன. அதனால் உள்ளூரில் சுமார் 13 அல்லது 14 ஆயிரம் தொழிலாளர்களுக்கு பல வருடங்களுக்கு இதன்மூலம் வேலை வாய்ப்பு கிட்டும்.

-இப்படிப் பொருத்து வீட்டுக்குப் பாதகமாகவும் கட்டு வீட்டுக்குச் சாதகமாகவும் இருக்கும் அம்சங்களை பட்டியல் இட்ட கூட்டமைப்பினர் அதன் காரணமாக பொருத்து வீட்டுத் திட்டம் வேண்டவே வேண்டாம் என்றனர்.

கூட்டமைப்பின் 16 எம்.பிக்களும் இது சம்பந்தமாக ஒரு கடிதத்தை தாங்கள் அனைவரும் - ஒருவர் கூடத் தவறாமல் - சேர்ந்து ஒப்பமிட்டு ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்தனர்.

பின்னர் தாம் அனைவரும் ஒன்றாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்தபோதும் இது குறித்துப் பிரஸ்தாபித்து, தங்களது ஏக கருத்தை அவரிடம் வலியுறுத்தினர்.

கூட்டமைப்பின் தலைவர்கள் சிலர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து இவ் விடயத்தில் ஒட்டு மொத்த கூட்டமைப்புத் தலைவர்களின் - எம்.பிகளின் - நிலைப்பாட்டை பிரதமரிடம் எடுத்து விளக்கினார்கள்.

இவையெல்லாம் நடந்த பிறகும் -

பொருத்து வீடு பொருத்தமேயற்றது என்று அரசுத் தலைமைக்கு விளக்கமாக எடுத்துரைத்த பின்னரும் -

வடக்கு, கிழக்கு தமிழர் தாயகத்தின் பெரும்பாலான நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது நிலைப்பாட்டை வெளிப்படையாகவும், தெளிவாகவும் வெளிப்படுத்திய பின்பும் கூட -

பொருத்து வீடு என்ற முருங்கை மரத்தில் இருந்து இறங்க மறுக்கிறது அரசுத் தரப்பு. பொருத்து வீட்டைப் பொருத்தமானது என்று கூறி அந்த ஒப்பந்தத்தைச் செய்த வெளிநாட்டு நிறுவனத்துக்கு அத்திட்டத்தை தாரைவார்த்துக் கொடுக்க அது துடியாய்த் துடிக்கின்றது.

இப்படி தமிழர் தாயகப் பிரதேச நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஏகோபித்த எதிர்ப்புக்கு மத்தியிலும் பொருத்து வீட்டை கட்டி முடிப்பேன் என்று அமைச்சர் சுவாமிநாதன் ஒரேயடியாக அடம்பிடிப்பதற்கு சம்பந்தப்பட்ட வெளிநாட்டு நிறுவனத்துக்கு அந்த ஒப்பந்தத்தை வழங்கியதில் பெரும் ஊழல் இருப்பதே பிரதான காரணம் என கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன், நாடாளுமன்றத்தில் வெளிப்படையாக தெரிவித்தும் உள்ளார்.

இத்தனைக்கும் பின்னும் பொருத்து வீட்டில் உறுதியாக நிற்கிறது அரசு.

பொருத்து வீடா, கட்டு வீடா, எது பொருத்தமானது, எது கட்டுப்படியானது என்பதில் கூட தீர்வு காணமுடியாத தரப்புகள் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் என்று நம்புவது எங்ஙனம்?

# மீள்குடியேற்ற அமைச்சு மீதான தகுந்த விமர்சனம் ஆராயப்படும்

## மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.08

புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சு மீது முன்வைக்கப்படும் விமர்சனங்களில் நியாயமான விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்து எதிர்வரும் காலங்களில் அவற்றுக்குத் தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும் என்று புனர்வாழ்வு மற்றும் மீள் குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சு மீதான வரவு செலவு திட்ட நிதி ஒதுக்கீட்டு குழு நிலை விவாதம் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

''புனர்வாழ்வு மற்றும் மீள் குடியேற்ற அமைச்சு வடக்கு, கிழக்கு மாகாணங்களுடன் அதிக தொடர்புடைய முக்கிய அமைச்சாகும். போரால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு, கிழக்கு மக்களது வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தக்கூடிய அமைச்சு.

இந்த அமைச்சு தொடர்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற விவாதத்தில் ஏராளமான விமர்சனங்கள் - குறைகள் முன்வைக்கப்பட்டன.

அதிலுள்ள நியாயமான விமர்சனங்களை ஏற்றுக் கொண்டு எதிர்வருகின்ற காலங்களில் இந்த அமைச்சின் ஊடாக மக்களது குறைகளை நிவர்த்தி செய்ய நாங்கள் நடவடிக்கை எடுப்போம்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு எமது அமைச்சினால் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

அமைச்சர் சுவாமிநாதன் தலைமையில் அமைச்சின் அதிகாரிகள் இதற்கான பல்வேறுபட்ட முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர்.

ஆனால், அடிக்கடி ஏற்படுகின்ற தடைகள் மற்றும் நிர்வாக தாமதங்கள் காரணமாக குறிப்பிட்ட சில திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியாது போயுள்ளது.

குறிப்பாக, வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள வீடில்லா பிரச்சினை மிகமுக்கியமானது. இதற்குத் தீர்வு காணப்பட்டு அனைத்து வசதிகளும் கொண்ட நிரந்த வீடுகளை அமைத்துக் கொடுக்க வேண்டியது இந்த அரசின் பொறுப்பு. அரசு தனது அந்த கடமையை எமது அமைச்சுக்கு வழங்கியுள்ளது.

மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, சுயதொழில், கணவனை இழந்த பெண்களின் வாழ்வாதாரப் பிரச்சினை போன்ற வடகிழக்கில் உள்ள முக்கிய பிரச்சினைகள் தொடர்பில் எமது அமைச்சு தற்போது அதிக கவனம் செலுத்தியுள்ளது.''- என்றார். (எ)

# 'எட்கா' உடன்படிக்கையால் இந்தியாவுக்கு சாதகமில்லை

## அமைச்சர் திஸாநாயக்கா கூறுகிறார்

கொழும்பு, டிசெ.08

'எட்கா' உடன்படிக்கையால் இந்தியாவுக்கு சாதகமான நிலைமை இல்லை என்று அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்

பத்தரமுல்ல தியன உயன பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

'எட்கா' உடன்படிக்கையின் ஊடாக இந்தியா எவ்வித பொருளாதார நலன்களையும் எதிர்பார்க்கவில்லை.

'எட்கா' உடன்படிக்கையின் ஊடாக இலங்கைக்கே அதிகளவு நன்மைகள் கிடைக்கப்பெறும். பிராந்திய வலயத்தின் தலைமைத்துவத்தை இந்தியா உறுதி செய்து கொள்ள விரும்புகின்றது.

பிராந்தியத்தின் பாதுகாப்பை உறுதி செய்து கொள்ள இந்தியா 'எட்கா' உடன்படிக்கையின் ஊடாக எதிர்பார்க்கின்றது.''-என்றார். (எ)

# ரக்னா லங்கா பாதுகாப்பு நிறுவனத்தை கலைப்பதற்கு அமைச்சரவை அனுமதி

கொழும்பு, டிசெ.08

ரக்னா லங்கா பாதுகாப்பு நிறுவனத்தை கலைத்து, முடிவுறுத்துவதற்கான அனுமதியை அமைச்சரவை வழங்கியதாக அமைச்சரவை இணைப் பேச்சாளரான அமைச்சர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார். பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு, அமைச்சரவை அனுமதியளித்துள்ளது என்று மேலும் கூறினார்.

கடந்த காலத்தில் நிலவிய பாதுகாப்பு சூழ்நிலையின் கீழ் பொருளாதார கேந்திர நிலையங்கள், அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் உள்ளிட்ட முக்கிய இடங்களில் பாதுகாப்புக்காக ஈடுபட்டிருந்த ஆயுதம் ஏந்திய இராணுவத்தினரை அகற்றி-

நாட்டின் சட்டம் மற்றும் ஒழுங்கை பாதுகாப்பதன் நிமித்தம் அத்தகைய இடங்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்காக இந்த நிறுவனம் நிறுவப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், நாட்டில் தற்போது நிலவும் சமாதான சூழலில், அரசுடன் இணைந்து தனியார் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்றும் ஜனாதிபதியின் யோசனையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதற்கிணங்க, ரக்னா லங்கா பாதுகாப்பு நிறுவனம் தற்போது முன்னெடுத்துவரும் நடவடிக்கைகளை, சிவில் பாதுகாப்பு திணைக்களத்துக்கும், கரையோரப் பாதுகாப்பு தொடர்பான விவகாரங்களை கடற்படையினருக்கும் ஒப்படைக்கச் சட்டமா அதிபர் பரிந்துரைத்துள்ளதாக தெரியவந்துள்ளது. (எ)

### நாளை

09.12.2016
வெள்ளிக்கிழமை
திதி : தசமி மாலை 5.57 வரை
நட்சத்திரம்: ரேவதி
பின்னிரவு 4.52 மணி வரை
சுபநேரம் : 6.18 - 7.48
இராகுகாலம் : 10.48 - 12.18

JSAC
பெண்களுக்கெதிரான
வன்முறை ஒழிப்பு செயற்பாடு
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
மறக்காத மகளிர் தினத்தில் மட்டும் மறுக்கப்படும் பெண் சுதந்திரம் பற்றி பேசாமல், நித்தமும் அதனை உணர்வதற்கான சுதந்திர சூழலை உருவாக்குவோம்.
யாழ். சமூக செயற்பாட்டு மையம்
16
2016

# ஓய்வூதியத்தில் அதிக பயனாளிகள் இணைந்த மாவட்டம் கிளிநொச்சி!

### அரச அதிபர் அருமைநாயகம் தகவல்

கிளிநொச்சி,டிசெ.07

வடமாகாணத்தில் ஓய்வூதியத் திட்டத்தில் அதிக பயனாளிகளை இணைத்துக் கொண்ட மாவட்டமாக, அகில இலங்கை ரீதியாக முதன்மையான இடத்தைப் பெற்றுள்ளது கிளிநொச்சி மாவட்டம்.

இலங்கை பாதுகாப்புச் சபையின் ஓய்வூதியத் திட்டத்தில் அதிக பயனாளிகளை இணைத்த உத்தியோகத்தர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு ஒன்று கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

நிகழ்வின் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், முதன்மை உரையில் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கிளிநொச்சி மாவட்டத்தில் பொதுமக்களின் தேவைகள் அதிகளவிலே காணப் படுகின்றன. குறிப்பாகப் பிறப்புச் சான்றிதழ், மரணச் சான்றிதழ், காணிகள் எனப் பல்வேறு தேவைகளுடன் கூடிய மக்களே இங்கு வாழ்கிறார்கள்.

இவ்வாறான மக்களுக்கு சரியான பதில்களை வழங்க வேண்டிய விதத்தில் அரச உத்தியோகத்தர்களாகிய நாம் நியமிக்கப்பட்டுள்ளோம்.

எனவே இதனைத் தட்டிக்கழிக்காமல் மக்களுக்குச் சரியான பதிலை வழங்கும் பொறுப்புள்ளவர்களாக நாம் இருக்க வேண்டும்.

நிகழ்வில் இலங்கை பாதுகாப்புச் சபையின் ஓய்வூதியத் திட்டத்தின்வடபிராந்தியபணிப்பாளரின்ஏற்பாட்டில்கிளிநொச்சி மாவட்டத்தில் அதிக பயனாளிகளை இணைத்துக் கொண்ட கரைச்சி, கண்டாளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய நான்கு பிரதேச செயலர் பிரிவுகளில் கடமையாற்றும் கிராம அலுவலர்கள், வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர்கள் ஆகியோர் சான்றிதழ், நினைவுக் கேடயங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (ஐ-7)


# தையல், மனையியல் டிப்ளோமா கற்கைக்கு விண்ணப்பிக்கலாம்

வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் மண்டைதீவு மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் தையல் மனையியல் டிப்ளோமா பாடநெறி புதிய கல்வி யாண்டுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஒரு வருட பாடநெறியான மேற்படி கற்கைநெறியின் முடிவில் என்.வி.கியூ தர சான்றிதழ் திணைக்களத்தினால் வழங்கப்படும். மண்டைதீவு பிரதேசத்தைச் சேர்ந்த ஆர்வமுள்ள யுவதிகள் விண்ணப்பப்படிவங்களை ஐந்தாம் வட்டாரம், மண்டைதீவு எனும் முகவரியில் அமைந்துள்ள மேற்படி மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் பெற்று எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்பதாக விண்ணப்பிக்குமாறு வேலணை பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் கேட்டுக்கொண்டுள்ளார். (இ)

# அடைக்கலநாதன் எம்.பியின் தந்தைக்கு அரசியல்வாதிகள் பலரும் அஞ்சலி







மன்னார்,டிசெ.08

கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்ற குழுக்களின் பிரதி அவைத் தலைவருமான செல்வம் அடைக்கலநாதனின் தந்தை சித்த வைத்தியர் அடைக்கலம் அமிர்தநாதனின் பூதவுடலுக்கு நேற்று அரசியல்வாதிகள், பொதுக்கள் பலர் அஞ்சலி செலுத்தினர்.

பூதவுடல் மக்கள் அஞ்சலிக்காக மன்னார், தோட்டவெளி ஜோசப்வாஸ் நகரிலுள்ள அன்னாரின் இல்லத்தில் வைக்கப்பட்டிருந்தது.

நேற்று புதன்கிழமை காலை விசேட 'ஹெலி' மூலம் வந்த சபாநாயகர் ஜெயசூரிய, எதிர்க்கட்சித்தலைவர் இரா. சம்பந்தன் உள்ளிட்ட குழுவினர் அன்னாரின் இல்லத்துக்குச் சென்று அஞ்சலி செலுத்தினர்.

இவர்களுடன் அமைச்சர்களான ரவி கருணாநாயக்க, டி.எம் சுவாமிநாதன், கயந்த கருணாதிலக்க மற்றும் கூட்டமைப்பின் எம்.பிக்களான எம்.ஏ. சுமந்திரன், சி.சிறிதரன், சீ.யோகேஸ்வரன், எஸ். வியாழேந்திரன் ஆகியோரும் வடக்கு, கிழக்கு மாகாணசபை உறுப்பினர்களும் அஞ்சலி செலுத்தினர். (இ)

# நீரிழிவு 'கிளினிக்'கில் நிறைந்த நோயாளர்; வைத்தியர் வராததால் சலிப்பு, முணுமுணுப்பு!

### முற்பகல் 10 மணிக்குப் பின் சிகிச்சை ஆரம்பம்
### பருத்தித்துறை வைத்தியசாலையில் நேற்று

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் நேற்று புதன்கிழமை நீரிழிவு நோயாளர்களுக்கான 'கிளினிக்' நாள்.

நோயாளர்கள் காலைவேளையிலேயே வந்துவிட்டனர். சுமார் 300பேர்வரை அங்கு கூடியிருந்தனர். சிகிச்சை பெற்றுக் கொண்டு நேரகாலத்துக்கே வீடு போய்ச் சேர்ந்துவிடலாம் என்பதால் 'நான் முந்தி, நீ முந்தி' என்று இருக்கைகளைப் பிடித்து அமர்ந்திருந்தனர்.



ஆனால் வைத்தியர் எவரும் வரவில்லை. 'வைத்தியர் வருவார்', வருவார்' என்று ஏக்கத்துடன் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தனர். நேரம் ஒன்பது மணியையும் கடந்து ஓடிக் கொண்டிருந்தது. வைத்தியர் எவரும் வரவில்லை. சலித்துக் கொண்டனர் நோயாளர்கள். அவர்கள் முணுமுணுக்கத் தொடங்கினர். முற்பகல் 10 மணியளவில் வந்தார் வைத்தியர் ஒருவர். அதன் பின்னர் வைத்தியரிடம் ஒவ்வொருவராக நகர்ந்து சென்றனர். அங்கு நீண்ட நேரம் காத்திருந்த நோயாளர்கள் தெரிவித்ததாவது:-

''டாக்குத்தரிடம் காட்டி விட்டு நேரத்துக்குப் போகலாம் எண்டுதான் வந்தோம். ஆனால் மதியமாகிவிட்டதே'' என்றனர் சிலர்.

'' வயது போனதுகளை விட்டுப்போட்டு வந்தனாங்கள். சின்னஞ்சிறுசுகள் வீட்டில் கரைச்சல் குடுத்துக் கொண்டிருக்குங்கள். வீடு இரண்டுபட்டிருக்கும்'' என்று அங்கலாய்த்தார் மற்றொரு பெண்மணி.

நோயாளர்கள் நலன் கருதி சுகாதாரப் பகுதியினர், இது விடயத்தில் கூடிய கவனம் எடுக்கவேண்டும்என்று அங்கு கூடியிருந்தவர்கள் பலரும் தெரிவித்தனர். (இ-40)

# மனித உரிமைகள் தின நிகழ்வு நாளை

யாழ்ப்பாணம், டிசெ.08

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு ''ஏனையோரின் உரிமைகளுக்காக இன்றே எழுவோம்'' எனும் தொனிப் பொருளிலான அனுபவப் பகிர்வுகளை வெளிக்கொணரும் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிமுதல் பிற்பகல் 12.30 மணிவரை யாழ்.பிரதான வீதியிலுள்ள கலைத்தூது மண்டபத்தில் இடம்பெறும்.

இந்த நிகழ்வு இக்கால இளைஞர், யுவதிகள், மனித உரிமைச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான ஒரு களமாக அமைவதோடு அவர்கள் மனித உரிமைப் பாதுகாவலர்களாகச் செயற்படுவதைத் தூண்டுவதற்கான ஒரு களமாகவும் அமைவதனால் அனைத்து இளைஞர் யுவதிகளையும் கலந்து சிறப்பிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ-7)

## கூரையில் இருந்து தவறி வீழ்ந்து இளம் குடும்பஸ்தர் மரணம்



மட்டக்களப்பு,டிசெ,08

மட்டக்களப்பு, கல்குடா பிரதேசத்திலுள்ள தனியார் சுற்றுலா விடுதியொன்றில் கூரை வேலை செய்து கொண்டிருந்த ஒருவர், தவறிக் கீழே விழுந்ததில் உயிரிழந்தார்.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் வாழைச்சேனையைச் சேர்ந்த ந.நவசுமன் (வயது -26) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

தச்சு வேலை செய்யும் சக தொழிலாளர்களுடன் சேர்ந்து கூரை வேலை செய்துகொண்டிருந்தபோதே, இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ச)

## காலாவதியான உணவுகளை விற்றவர்களுக்கு அபராதம்

திருகோணமலை,டிசெ,08

திருகோணமலை சேருவில பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பகுதியில் காலாவதியான உணவுகளை விற்பனைக்கு வைத்திருந்த 7 வர்த்தகர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

மூதூர் நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஐ.மீ.றிஸ்வான், நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இந்த அபராதத்தை விதித்தார்.

கடந்த வாரம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் செல்வநகர், சேருநுவர, சேருவில ஆகிய பிரதேசங்களிலுள்ள உணவகங்களில் சோதனை மேற்கொண்டனர். இதன்போதே மேற்படி குற்றச்சாட்டுகளில் 7 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. (ச)

# மட்டக்களப்பில் நெற்பயிர்கள் கருகும் அபாயம்

## மழைவேண்டி மக்கள் பிரார்த்தனை!





மட்டக்களப்பு,டிசெ,08

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர்ப்பற்று பிரதேசத்தின் பதுளை வீதியை அண்டிய வயல் பகுதிகளில் மழை வேண்டி நேற்று புதன்கிழமை பிரார்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இந்தமுறை பருவ மழை குறைவாகக் கிடைத்துள்ளது. இதனால் நெற்பயிர்கள் வறட்சி காரணமாக கருக ஆரம்பித்துள்ளன.

இதனை முன்னிட்டே இலுப்படிச்சேனை, வெப்பவெட்டுவான், கொம்பர்சேனை, பண்டாரியாக்கட்டு பகுதி விவசாயிகள் மழை வேண்டி விசேட வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஷிப்லி பாறூக், இந்த விசேட வழிபாடுகளில் கலந்து கொண்டு வறட்சியினால் பாதிப்புக்குள்ளான விவசாயிகளின் பிரச்சினைகளைக் கேட்டறிந்தார்.

உறுகாமம் குளத்தின் வாய்க்கால்கள் மூலமாக இந்த வயல் நிலங்களுக்கு நீர்ப்பாய்ச்சக் கூடிய வசதிகள் முன்னர் இருந்த போதும், தற்போது அந்த வாய்க்கால்கள் முற்றாகதூர்ந்துபோய் மூடப்பட்டுள்ளதால் நீரைப்பெற்றுக்கொள்ள முடியாமல் இருக்கிறது என்று மாகாண சபை உறுப்பினரிடம் விவசாயிகள் தெரிவித்தனர். (ச)

## பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிப்பதற்கு கையெழுத்து வேட்டை

'பெண்களுக்கு எதிரான அனைத்து வன்முறைகளையும் இல்லாது ஒழிப்போம்' என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதிக்கு, ஆயிரத்து 500 தபாலட்டைகளை அனுப்பும் வகையில் கையெழுத்து வேட்டை திருகோணமலை -அநுராதபுரம் சந்தியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

திருகோணமலை மாவட்டப்பெண்கள் அமைப்பு ஒன்றின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தக் கையெழுத்து வேட்டையில் பலர் கலந்துகொண்டனர். (ச)

## டெங்கு பரவும் சூழல்; 41 பேருக்கு அபராதம்

நிந்தவூர் பிரதேசத்தில் கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது, நுளம்புகள் பெருகக்கூடிய வகையில் இடங்களை வைத்திருந்த 41 பேருக்கு எதிராக சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று புதன்கிழமை வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இவ்வாறு கல்முனைப் பொதுச் சுகாதார மேற்பார்வை பரிசோதகர் பி. பேரின்பம் நேற்று புதன்கிழமை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நிந்தவூர் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் பொலிஸார் ஆகியோர் மேற்கொண்ட பரிசோதனையின் போது டெங்கு நுளம்புகள் பெருகக் கூடிய வகையில் இடங்களை வைத்திருந்த 41 நபர்கள் இனங்காணப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

# பிற மதத்தவர்களின் கலாசார உரிமைகளை மதிக்கத் தவறுபவர்கள் தண்டிக்கப்படுவர்

## எச்சரிக்கிறார் முதலமைச்சர்



மட்டக்களப்பு,டிசெ.08

கிழக்கு மாகாணத்தில் பிற மதங்களின் கலாசார உரிமைகளை மதிக்காத வகையில் செயற்படும் எவராக இருந்தாலும் அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

-இவ்வாறு கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் தெரிவித்தார்.

திருகோணமலையில் முஸ்லிம் மாணவிகள் சிலரின் உரிமைகளை மறுக்கும் வகையில் பரீட்சை மேற்பார்வையாளர்கள் நடந்து கொண்டுள்ளனர். இதனை அடுத்து இந்த விடயம் தொடர்பில் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட்டிடம் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

திருகோணமலையில் உள்ள இராஜகிரிய பாடசாலை மற்றும் முள்ளிப்பொத்தானை சிங்கள வித்தியாலயத்தில் முஸ்லிம் மாணவிகள் பர்தா, ஹிஜாப் அணியக்கூடாது என்று பரீட்சை மேற்பார்வையாளர்கள் சிலர் அச்சுறுத்தியுள்ளனர். அதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது .

ஒவ்வொருவருக்கும் அவர்களின் மத அடையாளங்களை பிரதிபலிக்கும் வகையிலான ஆடைகளை அணிவதற்கும் மத கலாசாரங்களை பின்பற்றுவதற்கும் உரிமையுள்ளது. இதனை இலங்கை அரசமைப்பும் உறுதிப் படுத்தி உள்ளது. எனவே அரசமைப்புக்கு முரணாக நடந்து கொண்டால் அவர்கள் மீது சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் .நேற்றுமுன்தினம் திருகோணமலை பாடசாலைகளில் இடம்பெற்ற சம்பவம் எனது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. இந்த விடயம் தொடர்பில் கல்வித் திணைக்கள அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. இனிமேல் இவ்வாறான சம்பவங்கள் இடம் பெற்றால் சம்பந்தப்பட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கைஎடுக்கப்படும். கிழக்கில் இனவாத செயற்பாடுகளுக்கு ஒரு போதும் இடமளிக்க முடியாது. -என்றார். (ச)

## வெளிமாவட்டங்களில் சேவையாற்றும் ஆசிரியர்களுக்கான ஒன்றுகூடல்

மட்டக்களப்பு,டிசெ,08


கிழக்கு மாகாணத்தை வதிவிடமாகக் கொண்டு தற்போது ஏனைய மாவட்டங்களில் சேவையாற்றிக் கொண்டிருக்கும் ஆசிரியர்களுக்கான ஒன்றுகூடல் எதிர்வரும்11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில், மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரத்தியேக கலைப்பிரிவு நிலையமான ஸ்ராண்டட் கல்வி நிலையத்தில் இடம்பெறும் என்று ஒழுங்கமைப்புக்குழு இணைப்பாளர் எஸ்.கோபிநாத் தெரிவித்தார்.

பட்டதாரி ஆசிரியர்கள், தேசிய கல்வியற் கல்லூரி ஆசிரியர்கள், ஆசிரியர் கலாசாலை பயிற்சி ஆசிரியர்கள் மற்றும் உதவி ஆசிரியர்கள், தேசிய உயர் கல்வி டிப்ளோமா ஆசிரியர்கள் உள்ளிட்ட அனைவரும் இதில் கலந்து கொள்ளலாம்.

இதன்போது வெளி மாகாண ஆசிரியர்கள் சங்கம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ளது. இது தொடர்பான மேலதிக தகவல்களுக்கு 0772827611 என்ற தொலைபேசி மூலமாக தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)





மட்டக்களப்பு வாழைச்சேனை கிண்ணையடி சமூக அபிவிருத்தி சங்கத்தின் ஏற்பாட்டில் பல சங்கங்களின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. கிண்ணையடி பலநோக்கு(நியாப்) கட்டடத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு சமூக அபிவிருத்தி சங்கத்தின் தலைவர் எஸ். செந்தில்குமார் தலைமை தாங்கினார். இந்நிகழ்வில் கிரமத்தின் கல்வி வளர்ச்சி மற்றும் மாணவர்களின் கல்விக்கு வறுமை தடையாக அமையக் கூடாது போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. இதில் கல்குடா வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் தினகரன் ரவி, ஆரம்ப கல்வி சேவைக் கால பயிற்சி ஆலோசகர் செள.அருளேந்திரன் மற்றும் சமூக அபிவிருத்தி சங்கத்தின் செயலாளர் சிவதர்ஷன், பொருளாளர் ஏ.வினோத் மற்றும் நலன்விரும்பிகள் பலரும் கலந்துகொண்டனர்.

காலைக்கதிர்
Kalaikkathir



## பஸில் ராஜபக்ஷவுக்கு எதிராக மீண்டும் குற்றப்பத்திரிகை தாக்கல்



அனுராதபுரம், டிசெ.08


திவிநெகும திணைக்கள நிதியை முறைகேடாக பயன்படுத்தியமை தொடர்பில் முன்னாள் பொருளாதார அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்கு எதிராக புதிதாக மீண்டும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டிருந்த குற்றப்பத்திரிகையில் சில தொழில்நுட்ப ரீதியான விடயங்களில் தவறுகள் காணப்படுகின்றன எனத் தெரிவித்து அதனை சட்டமா அதிபர் வாபஸ் பெற்றிருந்தார்.

இந்த நிலையில் அந்த தொழில் நுட்பத் தவறுகள் திருத்தப்பட்டு மீண்டும் பஸில் ராஜபக்ஷவுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

திவிநெகும திணைக்களத்திற்குச் சொந்தமான 29 மில்லியன் ரூபாவை பயன்படுத்தி 5 மில்லியன் புதுவருட நாள் காட்டிகளை அச்சிட்டு விநியோகித்தமை தொடர்பாக இவர்களுக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

## தாஜுதீனின் உறவினர், நண்பர்கள் ஆர்ப்பாட்டம்!




கொழும்பு, டிசெ.08

ரக்பி வீரர் வசீம் தாஜுதீனின் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் இணைந்து, கொழும்பு மேல் நீதிமன்றத்துக்கு முன்னால் நேற்றைய தினம் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

வசீம் தாஜூதீன் கொலையில் சந்தேகநபரான முன்னாள் சட்ட வைத்திய அதிகாரி ஆனந்த சமரசேகரவுக்கு முன்பிணை வழங்கக்கூடாது என்றும் அவர் கைது செய்யப்பட வேண்டும் என்றும் இந்த ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

முன்னாள் சட்ட வைத்திய அதிகாரி ஆனந்த சமரசேகர தனக்கு முன்பிணை வழங்கக்கோரி நேற்று கொழும்பு மேல் நீதிமன்றத்துக்கு சென்றிருந்தார். இதன்போதே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

## கொழும்பு அமெரிக்க தூதரகத்தை விரிவாக்கும் நடவடிக்கை ஆரம்பம்





கொழும்பு, டிசெ.08

இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் புதிதாக 5.7 ஏக்கர் நிலத்தில் விரிவாக கட்டப்படவுள்ளது. இதற்கான ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் அமெரிக்கத் தூதரக வளாகத்தில் இடம்பெற்றது.

தற்போதுள்ள அமெரிக்கத் தூதரகத்தை ஒட்டியதாக வாங்கப்பட்ட காணியை உள்ளடக்கியதாக பெரிய தூதரக கட்டடத் தொகுதியை அமெரிக்கா அமைக்கவுள்ளது.


வொஷிங்டனில் இருந்து வந்திருந்த அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத் தின், கடல்கடந்த நிர்மாண செயற்பாடுகள் பிரிவின் முதன்மைப் பிரதிப் பணிப்பாளர் வில்லியம் மோசர் மற்றும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் மற்றும் அதிகாரிகள் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆரம்பநிகழ்வில் பங்கேற்றனர்.

தற்போதுள்ள கட்டடத் தொகுதியை உள்ளடக்கியதாக, புதிதாக அமைக்கப்படவுள்ள தூதரக வளாகம், தூதரகப் பணியகம், மரைன் காவல் படைக்கான வதிவிடம், உதவி கட்டடங்கள், மற்றும் தூதரக சமூகத்துக்கான வசதிகளைக் கொண்டதாக இருக்கும்.

இந்த புதிய தூதரக வளாகம், தூதரகப் பணியாளர்களின் பாதுகாப்பான, நிலையான, உறுதித்தன்மையான,, நவீன பணியிடமாக இருக்கும் என்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

வொஷிங்டனில் உள்ள நிறுவனம் ஒன்றினால் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த தூதரக வளாகத் தொகுதியின் கட்டுமானப் பணிகளை அமெரிக்க நிறுவனம் ஒன்றே மேற்கொள்ளவுள்ளது.

## கருணா அம்மான் பிணையில் விடுதலை



கொழும்பு, டிசெ.08

கருணா அம்மான் என்று அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று முன்னிலையாகிய நிலையில் அவருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் கிழக்கு மாகாண சிறப்புத் தளபதியாக இருந்த கருணா, அந்த அமைப்பிலிருந்து விலகி மஹிந்த அரசாங்கத்துடன் இணைந்து கொண்டார்.

இந்நிலையில், கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் அரசுக்கு சொந்தமான வாகனங்களை முறைகேடாகப் பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டு கருணாமீது சுமத்தப்பட்டது.

இந்தக் குற்றச்சாட்டுக்கு அமைய பொலிஸ் நிதிமோசடிப் பிரிவினால் கடந்த நவம்பர் மாதம் 30 ஆம் திகதி கைது செய்யப்பட்ட கருணா, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், விநாயகமூர்த்தி முரளிதரனால் கடந்த திங்கட்கிழமை தாக்கல் செய்த பிணை மனுக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டிருந்த நிலையில், நேற்று பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

## சாரதி அனுமதிப்பத்திரத்தை புதுப்பிப்போருக்கு முன்னுரிமை

### *மருத்துவ அறிக்கை வழங்கும்போது*

கொழும்பு, டிசெ.08


சாரதி அனுமதிப்பத்திரத்தை புதுப்பிப்போருக்கு மருத்துவ அறிக்கை வழங்கும் போது முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

சாரதி அனுமதிப் பத்திரங்களை புதுப்பிக்காத சாரதிகளுக்கு அபராதம் விதிக்கப்படும் என நுகேகொட தேசிய போக்குவரத்து மருத்துவ நிலையத்தின் தலைவர் வைத்தியர் ரோஹன புஷ்பகுமார மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மருத்துவ அறிக்கையை பெற்றுக் கொள்வதற்கு நாள் ஒன்றுக்கு ஆயிரத்திற்கும் அதிகமான சாரதிகள் வருகை தருகின்றனர் என்றும், அவர்களில் சாரதி அனுமதிப் பத்திரத்தை புதுப்பிப் போருக்கே முன்னுரிமை வழங் கப்படுகிறது என்றும் தேசிய போக்குவரத்து மருத்துவ நிலையத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

புதிதாக சாரதி அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்ள விண்ணப்பிப்போருக்கும் தாமதம் இன்றி அவற்றை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## உலகிலேயே உயரமான கிறிஸ்மஸ் மரத்தின் நிர்மாணப் பணிகள் இடைநிறுத்தம்



கொழும்பு, டிசெ.08

கொழும்பு, காலிமுகத்திடலில் நிர்மாணிக்கப்பட்டு வந்த உலகில் மிக உயரமான கிறிஸ்மஸ் மரத்தின் நிர்மாண பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

துறைமுக பிரதி அமைச்சர் நிஷாந்த முதுஹெட்டிகம இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கொழும்பு பேராயர் மல்கம் ரஞ்சித் கர்தினால் இந்த கிறிஸ்மஸ் மரம் தொடர்பாக விமர்சித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அதிபர்களுக்கு எதிரான முறைப்பாடுகள் அதிகரிப்பு

கொழும்பு, டிசெ.08

பாடசாலை அதிபர்களுக்கு எதிராக அதிக முறைப்பாடுகள் கிடைத்து வருகின்றன என்று லஞ்சஊழல் ஆணைக்குழு தெரி வித்துள்ளது.

அடுத்த வருடத்திற்கு முதலாம் தரத்திற்கு மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கு அதிபர்கள் லஞ்சம் பெற்றுக் கொள்வது தொடர்பில் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று ஆணைக்குழுவின் உயர் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

லஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பில் தற்போது விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஆனையிறவில் நேற்று பெரும் ஆர்ப்பாட்டம்

## இரு உப்பளங்களையும் தனியார்துறைக்கு வழங்குவதை எதிர்த்து

கிளிநொச்சி, டிசெ.08

ஆனையிறவு மற்றும் குறிஞ்சாத்தீவு உப்பளங்களை தனியார் மயமாக்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று புதன்கிழமை மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆனையிறவு உப்பளத்துக்கு முன்பாக நேற்றுக் காலை 9 மணியளவில் ஆனை யிறவு, குறிஞ்சாத்தீவு உப்பளப்பகுதிகளிலுள்ள கிராம மக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் ''ஆனையிறவு உப்பளத்தின் அடையாளத்தை அளிக்காதே!, உப்புக்கூட்டுத்தாபனத்தை தனியார் மயமாக்க வேண்டாம், கூட்டாக உழைப்போம் - தனியார் மயமாக்கலை எதிர்ப்போம், எங்கள் வளத்தில் நாங்கள் வாழ்வோம், எங்கள் வளங்களைத் தனியாருக்கு விற்க அனுமதியோம், பிரதேச வளங்களில் பிரதேச மக்களுக்கே முன்னுரிமை. இது எங்கள் உப்பளம், உப்பளத்தை விற்காதே! நம் உழைப்பை அழிக்காதே,'' போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளையும் ஏந்தியிருந்தனர்.

இதன்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் அமைப்புகளால் தங்களது கோரிக்கைகள் அடங்கிய மனுவின் பிரதிகள் ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன், நிதி அமைச்சர், வடமாகாண முதலமைச்சர், அமைச்சர் ரிஷாத் பதியூதீன், வடக்கு மாகாண எதிர்க் கட்சி தலைவர், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டன கண்டாவளை உதவித் திட்டமிடல் பணிப் பாளர் ம.பிரதீப் மற்றும் ஆனையிறவு உப்பள முகாமையாளர் ஏ.கிசோதரன் ஆகியோருக்கு நேரடியாகக் கையளிக்கப்பட்டன.

அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

''ஆனையிறவு மற்றும் குறிஞ்சாத்தீவு உப்பளங்கள் தனியாரிடம் கையளிக்கப்படுவதற்கான ஆரம்பக் கட்ட நடவடிக்கைகள் நடைபெறுவதை அவதானிக்க முடிகிறது.

1938 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட இந்த உப்பளங்கள், 1990 வரை மிகுந்த வினைத்திறனோடு அதிக வருமானத்தை ஈட்டியுள்ளன. ஆனையிறவு உப்பளத்தின் ஆண்டுக்கான உற்பத்தி 30 ஆயிரம் மெற்றிக் தொன்னாகவும் குறிஞ்சாத்தீவு உப்பளத்தின் ஆண்டுக்கான உற்பத்தி 40 ஆயிரம் மெற்றிக் தொன்னாகவும் இருந்துள்ளது.

ஆனால், 2016 இல் ஆயிரத்து 100 மெற்றிக்தொன் உப்பு மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டது. இவ்விரு உப்பளங்களின் புனரமைப்புக்குப் போதுமான நிதி ஒதுக்கப்படாமையே இதற்கான காரணமாகும்.

நிதி அமைச்சரின் நடப்பாண்டுக்கான பாதீட்டு உரையில் 'எமது நாடு கடலால் சூழப் பட்டிருக்கின்ற போதும் உப்பை இறக்குமதி செய்வது விந்தையான ஒன்றாகும்' என்று குறிப்பிட்டிருந்தார். எனவே, 1990 க்கு முன்பு, நாட்டுக்குத் தேவையான உப்புக்கு மேலதிகமாகப் பிறநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்ட காலம் ஒன்றிருந்தது.

அதேவேளை இந்த உப்பளங்களின் அயற் கிராமங்களின் மக்களுக்கான வாழ்வாதாரத்தை இந்த உப்பளங்களே பெரும் பாலும் வழங்கி வந்தன.

எனவே இந்த உப்பளங்களைத் தொடர்ந்தும் அரச கூட்டுத்தாபனமாக இயக்குவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து, அதிக உற்பத்தியை மேற்கொள் ளக்கூடிய நிதி ஒதுக்கீட்டை ஏற்படுத்தி, இந்தப் பிரதேச மக்களின் வாழ்வாதாரத்துக்கும், அதிக உற்பத்திக்கும் சாதகமான நிலைமைகளை உருவாக்கித் தருமாறு மிகத்தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்'' -என்றுள்ளது.

இதேவேளை இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட சமத்துவம், சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் அமைப்பாளர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்ததாவது:-

''ஆனையிறவு மற்றும் குறிஞ்சாத்தீவு உப்பளங்களைத் தனியார் மயமாக்குவது இந்தப் பிரதேச மக்களுக்குச் செய்யும் பெரிய அநீதி.

அதனை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இந்தப் பிரதேச மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப் படும் வகையில் இந்த உப்பளங்கள் தனியார் மயமாக்கும் முயற்சி கண்டிக்கத்தக்க விடயம். எனவே இந்த விடயத்தில் அரசியலுக்கு அப்பால் மக்களின் நலன்சார்ந்து நாம் அனைவரும் உப்பளங்கள் தனியார் மயமாக்குவதற்கு எதிராகச் செயற்பட வேண்டும். இது மக்களின் வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட விடயம். எனவே அரசின் தனியார் மயமாக்கல் விடயத்தை இந்த மக்களின் சார்பாக ஏற்றுக்கொள்ள முடியாது'' என்றார். (எ-70)







அபிவிருத்தி அலுவலர் மீதான தாக்குதல்:

## நெடுங்கேணி பிரதேச செயலக ஊழியர்கள் பணிப் புறக்கணிப்பு

வவுனியா, டிசெ.08

வவுனியா வடக்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட புளியங்குளம் தெற்கு கிராம அலுவலர் பிரிவில் கடமையாற்றுகின்ற அபிவிருத்தி உத்தியோகத்தர் கடந்த வெள்ளிக்கிழமை கிராமவாசி ஒருவரால் தாக்கப்பட்டதைக் கண்டித்தும், தாக்குதலை மேற்கொண்டவர் மீது சட்டநடவடிக்கை எடுக்கக் கோரியும் நெடுங்கேணி பிரதேச செயலக ஊழியர்கள் நேற்று பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

காலை 8.30 மணி தொடக்கம் நெடுங்கேணி பிரதேச செயலாளர் கா.பரந்தாமன் தலைமையில் பணிப் புறக்கணிப்பு முன்னெடுக்கப்பட்டது. பிரதேசசெயலகத்தின் வாயில் மூடப்பட்டு இந்தப் பணிப் புறக்கணிப்பு நடத்தப்பட்டது.

பணிப் புறக்கணிப்பை கைவிடுமாறு நெடுங்கேணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதேச செயலாளருடன் பேச்சு மேற்கொண்ட போதும் ஊழியர்களின் எதிர்ப்பை அடுத்து பொலிஸாரின் கோரிக்கை கைவிடப்பட்டது.

இதேவேளை பிரதேச செயலகத்துக்கு பல்வேறு தேவைகள் கருதி வந்திருந்த பொதுமக்கள் பணிப் புறக்கணிப்பு காரணமாக சேவைகள் நடைபெறாமையால் சிரமங்களை எதிர்கொண்டனர்.

இந்தநிலையில், தாக்குதல் நடத்திய நபரை கைது செய்த புளியங்குளம் பொலிஸார் அவரை நீதிமன்றில் முற்படுத்தாது விடுதலை செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-100)

## பர்தா அணிந்து பரீட்சை எழுத அனுமதி மறுப்பு

பெற்றோர் விசனம்

முல்லைத்தீவு, டிசெ.08

முல்லைத்தீவு வலயக் கல்வி அலுவலகத்துக்கு உட்பட்ட தண்ணீரூற்று முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றிய முஸ்லிம் மாணவிகள் பர்தா அணிந்து பரீட்சை எழுதுவதற்குத் தடை விதிக்கப் பட்டுள்ளது. இது பெற்றோர் மத்தியில் கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவம் பற்றி அறிந்துகொண்ட தண்ணீரூற்று முஸ்லிம் மகா வித்தியாலய அதிபர் இதுதொடர்பில் முல்லைத்தீவு வலயக் கல்வி அலுவலக பதில் கல்விப் பணிப்பாளருடன் தொடர்புகொண்டு நிலைமையை கூறியுள்ளார்.

இதனையடுத்து, நேற்றுமுதல் பரீட்சை எழுத வருகை தரும் முஸ்லிம் மாணவிகளை பெண் பரிசோதகர் ஒருவர் மூலம் பரிசோதனை செய்த பின்னர் பரீட்சை எழுதுவதற்கு அனுமதிப்பதாக முல்லைத்தீவு வலயக் கல்வி அலுவலகப் பதில் கல்விப் பணிப்பாளர் வாக்குறுதி அளித்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான ரிசாத் பதியுதீன், நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான், ஐக்கிய தேசியக் கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட அமைப்பாளர் ஜமால்தின் ரிசாம் ஆகியோருக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பெற்றோர்கள் குறிப்பிட்டனர்.

இதேவேளை, இந்தச் சம்பவம் பற்றி அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் முல்லைத்தீவுக் கிளையின் செயலாளர், பரீட்சை திணைக்களத்தின் பிரதி ஆணையாளரிடம் முறையிட்டுள்ளார். (எ)

## பிரம்படிக் கிராமத்துக்கு மின்சார வசதி கிடைக்குமா?

முல்லைத்தீவு, டிசெ.08

முல்லைத்தீவு, கேப்பாப்புலவு பிரம்படிக் கிராமத்தில் மீளக் குடியமர்ந்துள்ள மக்களுக்கு மின்சார வசதியை ஏற்படுத்தித் தருமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

2012 ஆம் ஆண்டில் நலன்புரி முகாம்களிலிருந்து அழைத்து வரப்பட்ட கேப்பாப்புலவு மக்களைச் சொந்த இடங்களில் குடியமர்த்தாமல் சூரிபுரம் காட்டுப்பகுதியில் இராணுவம் உருவாக்கிய மாதிரிக் கிராமத்தில் தங்க வைக்கப்பட்டனர்.

இந்தநிலையில், இந்த மாதிரிக் கிராமத்திலிருந்து 15 வரையான குடும்பங்கள் கேப்பாப்புலவு பிரம்படிப் பகுதியில் குடியேறின.

கேப்பாப்புலவு மாதிரிக் கிராமத்துக்கும் கேப்பாப்புலவு இராணுவ முகாம்களுக்கும் மின்சாரம் செல்லும் நிலையில் பிரம்படியிலுள்ள தமது வீடுகளுக்கும் மின்சாரத்தை வழங்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வற்றாப்பளை சந்தி வரை வந்து செல்லும் பஸ்களை கேப்பாப்புலவு கிராமத்துக்கும் வந்து செல்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறும் அந்தப் பகுதி மக்கள் கோரியுள்ளனர். (எ)






யாழ்ப்பாணம் கல்வி வலயத்தின் சிறப்புக் கல்விப் பிரிவினரால் மாற்றுத் திறனாளிகள் தினம் நல்லூர் சொர்ணாம்பிகை மண்டபத்தில் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ந.தேய்வேந்திரராஜா தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி.பி.செல்வின் கலந்து சிறப்பித்தார்.

மாற்றுவலுவுடைய சிறுவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

மாற்றுவலுவுடைய சிறுவர்களை முதன்மைப்படுத்திய பல கலை நிகழ்வுகள் அங்கு இடம்பெற்றன. (இ-12)









யாழ்ப்பாணம் அரங்கக் கலைக் கழகத்தின் ஏற்பாட்டில் வாரம் தோறும் நடைபெற்று வரும் ஞாயிறு நிகழ்வில் 'மாவில் அப்பிள்' கோமாளி நகைச்சுவை ஆற்றுகை கடந்தவாரம் அரங்கக் கலைக் கழகத்தில் அரங்கேற்றறப்பட்டது.

இரு கோமாளிகள் பல்வேறுபட்ட பொருள்களைப் பயன்படுத்தியும் ஒத்திசைவான அசைவுகளை வெளிப்படுத்தியும் நகைச்சுவையான ஆற்றுகை செய்திருந்தனர்.

இந்த ஆற்றுகையில் ம.சுலக்ஷன் மற்றும் இ.மகிந்தன் ஆகியோர் நடிந்திருந்தனர். ஆற்றுகைக்கான அரங்க உத விகளை இ.மகிந்தன், த.கஜன், ம.சுலக்ஷன் ஆகியோர் இணைந்து மேற்கொண்டனர். தி.தர்மலிங்கம் நெறியாள்கை செய்தார். (ஐ-30)




கருவி மாற்றுத்திறாணாளிகள் சமூகவள நிலையத்தில் ஏற்பாட்டில் சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினம் ராஜா கிறீம் ஹவுஸ் சரஸ்வதி மண்டபத்தில் கொண்டாடப்பட்டது.

விருந்தினராக வட மாகாண அமைச்சர் பொ.ஐங்கரநேசனும், சிறப்பு விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனும் கலந்து கொண்டனர்.

இதில் அங்கத்தவர்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப் பட்டன.

மாற்றுத் திறனாளிகளின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ஐ-12)







கரவெட்டி பிரதேச சபையின் வதிரி முன்பள்ளி சிவர் தினம் கரவெட்டி தச்சை ஐங்கரன் அறிநெறிப் பாடசாலை மண்டபத்தில் 04.12.2016 அன்று நடைபெற்றது.

வரவேற்பு நடனத்தையும், மாணவர் ஒருவர் கௌரவிப்பதையும் பரிசில் பெற்ற மாணவர்கள் விருந்தினரர்களுடன் நிற்பதையும் படங்களில் காணலாம். (ஐ-40)







வாழ்வின் எழுச்சி சமூக அபிவிருத்தி மன்றத்தின் சிசுதிரிய புலமைச்சரிசில் வழங்கலும், உத்தியோகத்தர் கௌரவிப்பும் கடந்த வெள்ளிக்கிழமை கரணவாய் மூத்த விநாயகர் ஆலய திருமண மண்டபத்தில் நடைபெற்றன.

பிரதம விருந்திரனரான அரச அதிபர் நா.வேதநாயகன் உத்தியோகத்தர் ஒருவரை கௌரவிப்பதையும் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் மங்கல விளக்கு ஏற்றுவதையும் காணலாம்.


பொன்.வேணு கிருஷ்ணா

# “ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?”

24

## அமெரிக்க-சீன உறவு சீர்திருந்துமா? சீரழியுமா?

ஜப்பானில் கடந்த மே 2016இல், ஜி7 உச்சிமாநாட்டில் ஒன்றோடொன்று பிணைந்த இரண்டு பிரச்சினைகளான உலக முதலாளித்துவத்தின் ஆழமடைந்துவரும் நெருக்கடியும் மற்றும் குறிப்பாகத் தென் சீனக் கடலில் சீனா மற்றும் அமெரிக்காவுக்கு இடையே அதிகரித்து வரும் ஒரு மோதல் அபாயத்துடன் தொடர்புபட்ட போர் முனைப்பும் மேலோங்கி இருந்தன. பொருளாதார நிலைமுறிவுக்கு மிகச் சிறியளவிலான தீர்வைக் கூட வழங்க திராணியற்ற பிரதான சக்திகள், தேசிய விரோதங்களுக்கு எரியூட்டி, மோதலை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றன.



Chinese construction teams work on the disputed Spratly Islands. Armed Forces Of The Philippines via The New York Times

சீனா உரிமைகோரிய தீவுத்திட்டுக்களைச் சுற்றி 12 கடல்மைல் எல்லைக்குள் அமெரிக்க இராணுவ ஊடுருவல்களுடன் ஆத்திரமூட்டலை அதிகரிப்பதை நியாயப்படுத்தும் விதமாக, சீனாவை விமர்சிக்கும் பலமான அறிக்கை ஒன்றுக்காக அமெரிக்காவும் ஜப்பானும் ஜி7 கூட்டத்தில் கடுமையாக அழுத்தமளித்தன. ஆரம்பத்தில், அமெரிக்க கடற்படை தென் சீனக்கடலில் Fiery Cross குன்றுக்கு அருகே மூன்றாவது முறையாக ‘‘கடற்போக்குவரத்து சுதந்திரம்’’ என்று கூறப்படும் நடவடிக்கையை மேற்கொண்டது. இது பீஜிங்கிடமிருந்து ஒரு கோபமான எதிர்வினையை உருவாக்கியதுடன், அப்பகுதியில் அதன் பாதுகாப்புகளை அது பலப்படுத்தும் என்ற அறிவிப்புகளையும் அப்போது கொண்டு வந்தது.

## அணுஆயுத மோதல் அபாயம் உள்ளதா?

அதிகரித்து வரும் அணுஆயுத மோதல் அபாயம் குறித்து மக்களின் நனவை மழுங்கடிக்கும் நோக்கில், அப்போது அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளர் தேர்தலிலும் மற்றும் ஆஸ்திரேலிய மத்திய தேர்தலிலும் நடந்து வந்த பிரசாரங்களில், போர் தயாரிப்புகள் மீது ஒரு மௌனமான சூழ்ச்சி நடந்து வருவது போல் தெரிந்தது. அணுஆயுதமேந்திய இரண்டு சக்திகள் தென் சீனக் கடலில் மட்டும் எதிரெதிராக நிற்கவில்லை, மாறாக வடகொரியா மற்றும் தாய்வான் போன்ற ஏனைய அபாயகரமான வெடிப்புப் புள்ளிகளிலும் அவ்வாறே உள்ளன. இவ்விரண்டு பகுதிகளும் வாஷிங்டனின் ‘‘ஆசியாவை நோக்கிய முன்னிலை’’ மற்றும் அப்பிராந்தியத்தில் அதன் இராணுவ ஆக்கிரமிப்புக் கட்டமைப்பால் பிரமாண்டமான ஆபத்தாக தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

ஓர் ஆயுதப் போட்டி நடந்து கொண்டிருக்கிறது. இது அணுஆயுதங்கள், அவற்றைச் செலுத்தும் முறைகள் மற்றும் அது தொடர்புபட்ட தொழில்நுட்பக் களத்தில் அதன் மிகவும் துல்லியமான வெளிப்பாடுகளைக் கண்டு வருகிறது. ஆசியா மற்றும் உலகெங்கிலுமான அதன் மேலாதிக்கத்தைப் பேணுவதற்குத் தீர்மானகரமாக உள்ள அமெரிக்கா, அடுத்த மூன்று தசாப்தங்களில் பல வகைப்பட்ட அதிநவீன அணுஆயுதங்களையும் மற்றும் அவற்றை அவற்றின் இலக்குகளுக்கும் அனுப்பும் முறைகளையும் அபிவிருத்தி செய்ய 1 ட்ரில்லியன் டொலர் செலவிடத் திட்டமிட்டு வருகிறது.

ஏதாவது அவசர நிலைமைகள் வெடித்தால் சீனாவின் அணுஆயுதக் கிடங்குகளைத் துடைத்தழிப்பதற்கான வழிவகைகளையும்மற்றும்அவ்விதத்தில் ஓர் எதிர்தாக்குதலை நடத்தத் தனது ஆற்றலை அதிகரித்துக் கொள்வதன் மூலமாக அணுஆயுத முன்னிலையைப் பாதுகாத்துக் கொள்வதுமே பெண்டகனின் அறிவிக்கப்படாத நோக்கமாகும்.

அதேயளவுக்குப் பிற்போக்குத்தனமாக, சீனாவோ அமெரிக்காவில் பத்து மில்லியன் கணக்கானவர்களைக் கொல்லும் விதத்தில் திருப்பித் தாக்கும் ஆற்றலை அது தக்கவைத்திருப்பதை உறுதிப் படுத்துவதே அதன் பிரதிபலிப்பாக உள்ளது.

அமெரிக்காவைத் தளமாகக் கொண்டுள்ள Union of Concerned Scientists (UCS) வெளியிட்ட அறிக்கை ஒன்றால், இத்தகைய அபாயங்களது யதார்த்தம் எடுத்துக் காட்டப்பட்டது. அது அச்சுறுத்தும் வகையில் பின்வருமாறு எச்சரித்தது-

அமெரிக்க மற்றும் சீன மக்கள் குடியரசின் அரசுகள், ஒரு நாளின் இருபத்தி நான்கு மணி நேரமும், ஓராண்டின் 365 நாள்களும் வேகமாகத் தீவிரமடைந்து அணுஆயுதப் பரிமாற்றங்களில் போய் முடியக்கூடிய ஒரு போரைத் தொடங்குவதற்கான முடிவுகளில் இருந்து வெகு குறைந்த தூரத்திலேயே நிற்கின்றன. போருக்கான சாத்தியக்கூறு மற்றும் அதன் விளைவாக அணு ஆயுதங்களைப் பிரயோகிக்கக் கூடிய சாத்தியக்கூறு ஆகிய இரண்டு தவறான பொருத்தமுள்ள கருதுகோள்களும் அதிகரித்து வருகின்றன. தவறான செய்திப் பரிமாற்றங்களோ அல்லது தவறான புரிதலோ ஒரு மோதலைத் தூண்டிவிட்டு விடும், அதை நிறுத்த முடியாத அளவுக்கு அவ்விரு அரசாங்கங்களும் சிரமத்தைக் காணக்கூடும். - என்று அது குறிப்பிட்டது.

மோதலைத் தவிர்க்க, அபாயங்களை ஒப்புக்கொண்டு இரு தரப்பும் இராஜாங்க முயற்சிகளை அதிகரிக்குமாறு UCS பகுப்பாய்வு அழைப்புவிட்ட போதிலும், அத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதன் மீது அது வெகு குறைவான நம்பிக்கையையே வெளியிட்டது. அந்த அறிக்கை கவலையுடன் பின் வருமாறு அறிவித்தது:

அமெரிக்க -சீன கருத்து முரண்பாடுகள் விட்டுக்கொடுப்பின்றி இருக்கின்றன என்ற அதிகரித்து வரும் உணர்வும் மற்றும் பரஸ்பர நம்பிக்கையின்மையும், அவ்விரு அரசாங்கங்களையும் தொடர்ந்து இராணுவத் தீர்வுகளைக் காண - அதாவது இன்னும் அதிகமாகத் தங்களது பாதுகாப்பை உணர உதவும் வகையில் அச்சுறுத்தலின் புதிய வழிவகைகளைக் காண-நாட்டம் கொள்கின்றன. அவ்விரு அரசாங்கங்களும் நம்பிக்கையின்மை மிக்க ஒரு நடவடிக்கையாக தொழில்நுட்ப ரீதியில் அனைத்து முயற்சிகளையும் எடுத்து நிற்க ஒவ்வொரு முயற்சியும், ஏறத்தாழ 70 ஆண்டுகளாக அமெரிக்க மற்றும் சீன மக்கள் கட்சியின் தலைவர்களைத் தொந்தரவுக்கு உள்ளாக்கி உள்ள உடன்பாடின்மைகள், பகையுணர்ச்சிகள் மற்றும் ஐயுறவுகளுக்கு இராஜாங்க ரீதியிலான தீர்வுகள் மீது நம்பிக்கையை நிலைநிறுத்துவதற்கு அவசியமான பொறுப்புகளை ஸ்தாபிப்பது முற்றிலும் சிக்கலாக உள்ளது, என்று அது குறிப்பிட்டது.

தீவிரமடைந்து வரும் இராணுவப் போட்டி ஒன்றுடன் ஒன்று பொருத்தமற்றதாகும். இது போர் பதற்றங்கள் மற்றும் அபாயங்கள் அதிகரிக்க மட்டுமே செய்யும். அணுஆயுதத் தளவாடங்களைப் பொறுத்த வரையில், சீனா அதன் எண்ணிக்கையிலும் தொழில் நுட்பரீதியிலும் பின்தங்கி




உள்ளது. சீன இராணுவம் இதை ஈடு செய்துகொள்ளப் பெரும் பிரயத்தன முயற்சியில் இருந்தாலும், அதன் ஆயுத தகைமையில் பல தலைமுறைகள் பின்னோக்கி உள்ளது, மேலும் அமெரிக்கா சுமார் 7,000 அணுவாயுதக் குண்டுகளைக் கொண்டிருப்பதுடன் ஒப்பிடுகையில் சீனா 260 குண்டுகளையே வைத்திருப்பதாக மதிப்பிடப்படுகிறது. ஒரு நம்பகமான அணுஆயுத அச்சத்தை உறுதிப்படுத்தினால், அமெரிக்காவின் முதல் தாக்குதலில் இருந்து பிழைத்துக் கொள்ளலாம் என்பதே சீனத் தலைமையின் பிரதான நோக்கமாக உள்ளது. ஆனால் பீஜிங் போலன்றி, வொஷிங்டன் முதலில் அணு ஆயுதம் பிரயோகிப்பது என்பதை ஒரு போதும் நிராகரிக்கவில்லை.

## அணுஆயுதமேந்திய நீர்மூழ்கி கப்பல்களை அனுப்பும் சீனா

சீனா முதல்முறையாக பசிபிக் பகுதி ரோந்து நடவடிக்கையில் அணுஆயுதமேந்திய நீர்மூழ்கிக் கப்பல்களை அனுப்ப இருக்கிறது என்று கடந்த மே(2016) மாதம் கார்டியன் அறிவித்தது, அத்தகைய ஒரு நகர்வு, போர்த் தளவாடங்களும் ஏவுகணைகளும் பிரத்தியேகமாக உயர் மட்டத் தலைமையின் கடுமையான கட்டுப்பாட்டின் கீழ் வைக்கப்படும் என்ற தற்போதைய கொள்கையை முறித்துக் கொள்வதைச் சமிக்ஞை காட்டுவதாகும். போர் சமயத்தில் அமெரிக்க கண்டத்துக்கு எதிராக அணுஆயுதமேந்திய ஏவுகணைகளை உடனடியாக ஏவுவதற்கு உதவியாக அணுஆயுதமேந்திய நீர்மூழ்கிக் கப்பல்களில் அவை இப்போது நிரப்பப்படும்.

வடகிழக்கு ஆசியாவில் அமெரிக்க இராணுவக் கட்டமைப்பால், குறிப்பாக சீனாவின் தகைமைக்கு ஈடுகொடுத்து திருப்பித் தாக்கும் நோக்கில், தொலைதூர ஏவுகணை எதிர்ப்பு உபகரணங்களை நிலைநிறுத்தியமை, சீனத் தலைமையை அத்தகைய நடவடிக்கைகள் எடுக்க உந்தி உள்ளது. எவ்வாறிருப்பினும் சீனாவின் அணுஆயுத நீர்மூழ்கிக் கப்பல்கள் ஒப்பீட்டளவில் இரைச்சல் அதிகமுள்ளவை, இது அமெரிக்க தாக்குதல் நீர்மூழ்கி கப்பல்களால் அவற்றைக் கண்டறிந்து அழிப்பதைச் சுலபமாக்குகிறது. பதற்றமடையும் ஒரு சீனத் தளபதி உத்தரவைத் தவறாகப் புரிந்து கொண்டு, உடனடியாக ஏற்படக்கூடிய தாக்குதலுக்கு அஞ்சி, முன்-தீர்மானிக்கப்பட்ட இலக்குகளுக்கு எதிராக நீர்மூழ்கிக்கப்பல் ஏவுகணையைச் செலுத்தும் ஒரு புதிய சூழலும் ஏற்படலாம்.

அணுஆயுதப் போரை பிரதான சக்திகளுக்கு இடையிலான இராஜாங்க நடவடிக்கைகளைக் கொண்டு தடுக்க முடியாது, சர்வதேச அணுஆயுதக் குறைப்பைக் காட்டுவது அல்லது அணுஆயுதப் போர் என்பது மிகவும் பயங்கரமானது என்பதால் அது கருத்தில் எடுக்கப்படாது என்ற வெற்று நம்பிக்கை ஆகியவை மதிப்பற்றவையாகும். அணுஆயுத மூலோபாயவாதிகள் ஒரு அரை நூற்றாண்டு காலமாக ‘‘சிந்திக்க முடியாததைச் சிந்தித்து’’ வருகிறார்கள்.

கடந்த உலகப் போரில் ஹிரோஷிமா மற்றும் நாகசாகி மீது அணுகுண்டு வீசப்பட்டு, சுமார் 2 லட்சம் பேர் கொல்லப்பட்டதுடன் அது முடிவுக்கு வந்தது. ஜனாதிபதி பராக் ஒபாமா கடந்த மே மாதம் ஹிரோஷிமாவில், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கொடூரமான குற்றங்களுக்கு மன்னிப்பு கேட்க மறுத்தமை, புதிய ஒன்றுக்குத் தயாரிப்புச் செய்யப்பட்டு வருகிறதுஎன்பதற்கான ஒரு நிச்சயமான அறிகுறியாகுமா என அப்போது ஐயம்எழுந்தது.

அணுஆயுதமேந்திய விரோதிகளுக்கு இடையே ஒரு புதிய உலகப் போரை நோக்கிய இடையறாத இந்த உந்துதல், முதலாளித்துவ நெருக்கடி மற்றும் அதன் தீர்க்கவியலாத முரண்பாடுகளில் இருந்து எழுகிறது. இந்த லாபகர அமைப்புமுறை மற்றும் அதன் காலங்கடந்த தேசிய அரசு அமைப்பு முறையை முடிவுக்குக் கொண்டு வருவதன் மூலமாக, தொழிலாள வர்க்கம் மட்டுமே போர் அபாயத்தை முடிவுக்குக் கொண்டு வர முடியும்.

(கேள்வி தொடரும்...)

காலைக்கதிர் Kalaikkathir



# அதிகாரத்தின் அரூப கரங்கள்




> மனிதர்களது சுதந்திரத்தைப் பறித்து, அவர்களது சமூக வாழ்வைத் துண்டித்து, நான்கு சுவர்களுக்கு மத்தியில் அவர்களை தடுத்துவைத்து, அவர்களது நடத்தை மீது ஒழுங்கை விதித்து, கட்டுப்பாடுகளை திணித்து, அவர்களை கண்காணிக்கும் தண்டனை முறையால் குற்றங்கள் ஒழியவில்லை. குற்றவாளிகளும் குறையவில்லை. மாறாகக்குற்றங்கள் பெருகிவருகின்றன. குற்றவாளிகளும் பெருகிவருகிறார்கள்.

சிறைகளில் கட்டுப்பாட்டை நிறுவுவதற்கு கண்காணிப்பு முக்கியமானது. இது ஒழுங்கு முறையின் மறுமுகம் என்கிறார் பூக்கோ. இங்கு கண்காணிப்பு என்பது மற்றவர்களுக்குத் தெரியாதவாறு மற்றவர்களை அவதானிக்கும் நடைமுறையைக் குறிக்கிறது. ஒவ்வொரு மனிதனும் எப்படி நடந்துகொள்கிறான், மற்றவர்களுடன் எப்படி உறவு கொள்கிறான் என்பதைக் கூர்மையாக அவதானித்து ஒவ்வொருவரது போக்கையும், நடத்தையையும், ஆளுமையையும் மதிப்பீடு செய்ய இந்த மேற்பார்வை அவசியமானது. ஒழுங்கு விதிகள் பேணப்படுகின்றனவா அன்றி மீறப்படுகின்றனவா என்பதை அறிந்து கொள்வதற்குச் சிறை நிர்வாகத்தினருக்கு இது தேவையானது. இந்த நோக்கில் சிறைக் கட்டட அமைப்புகளும் உருவாகின. ஒரே இடத்திலிருந்து சகலரையும் கண்காணிக்கும் நோக்கத்துடன் வட்ட கோணவடிவான (Panopticon) சிறைக் கூடங்கள் அக்காலத்தில் கட்டப்பட்டன என்கிறார் பூக்கோ. கைதிகளின் வசதிக்காக இக் கட்டடங்கள் எழுப்பப்படவில்லை. இவை அதிகார நுண்நோக்கின் குறியீட்டு வடிவங்கள் என்கிறார் பூக்கோ.

இந்த ஒழுங்கு விதிகள், கட்டுப்பாடுகள், கால அட்டவணைகள், கண்காணிப்புகள் எல்லாம் சிறையுலகத்து சடங்குகள் மட்டுமல்ல. இவை அதிகார உலகத்தின் அரூப கரங்கள் என்பதால் அவை பல்வேறு சமூக நிறுவனங்களிலும் ஊடுருவி நிற்கின்றன. கால நிரல் தொடங்கி கண்காணிப்புவரை கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகள் பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், தொழிற்சாலைகள், மருத்துவமனைகள், படைத்துறை முகாம்களாகப் பல்வேறு பொது நிறுவனங்களில் நடைமுறையில் உள்ளன. இவற்றின் தன்மைகள், இயல்புகள் வேறுபட்டாலும், எங்கும் எல்லா இடங்களிலும் அதிகாரத்தின் அகட்சியாக ஒழுங்கும், கட்டுப்பாடும் சமூக உலகத்தை ஆட்கொண்டு நிற்கின்றன என்கிறார் பூக்கோ.

அதிகார மேலாதிக்கத்தைப் பேணுவதற்குச் சமூக ஒழுங்கு அவசியமானது. இதனால் இன்று உலகின் எல்லா ஆட்சியமைப்புகளும் சமூக ஒழுங்குக்கு முதன்மை கொடுக்கின்றன. ஆயினும் ஒழுங்கமைவான சமூகம் என்ற கருத்துருவம் மேற்கு ஐரோப்பிய முதலாளியத்துடன் தோற்றம் கொண்டதாகச் சொல்கிறார் பூக்கோ. பிரபுத்துவ ஆட்சி முறையானது அப்பட்டமான வன்முறையைப் பிரயோகித்து சமூக ஒழுங்கை நிறுவ முனைந்தது. ஆனால் முடியவில்லை. பிரபுத்துவத்தின் வன்முறையை, மக்கள் வன்முறையால் எதிர்கொண்டனர். இதனால் சமூக ஒழுங்கு சிதைந்தது. பிரபுத்துவம் வீழ்ந்தது.

ஆனால் முதலாளியம், மிகவும் சூட்சுமமான முறையில், மிகவும் நுணுக்கமான ஆதிக்க உத்திகளைப் பிரயோகித்து சமூக ஒழுங்கை நிலைநாட்டியது. கால அட்டவணை, கட்டுப்பாடு, கண்காணிப்பு என்ற ரீதியில், இறுக்கமான ஒழுங்கு முறையை தொழிற்சாலைகளில் செயற்படுத்தியது. உற்பத்தி முறையை மட்டுமன்றி, சமூக உலகையும் படிப்படியாக இயந்திரமயமாக்கியது. சனநாயகம், மக்களாட்சி, பிரதிநிதித்துவ அரசு என்ற கருத்துருவத் திரையின் பின்னால், முதலாளியத்தின் 'அடக்குமுறைத் தொழில்நுட்பம்' சூசகமாக செயல்படுகிறது. ஒரு சீரான, ஒழுங்கமைவான, கட்டுப்பாடான சமூகமும் ஒரு நிலையாகப் பலமான ஆட்சியும் முதலாளியத்தின் வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் இன்றியமையாதவை.

'ஒழுங்கும் தண்டனையும்' என்ற பூக்கோவினது நூலின் கடைசிப் பக்கங்கள் குற்றமும் சிறையும் பற்றிய கோட்பாடுகளைக் கடுமையாக விமர்சிக்க முனைகிறது.

மனிதர்களது சுதந்திரத்தைப் பறித்து, அவர்களது சமூக வாழ்வை துண்டித்து, நான்கு சுவர்களுக்கு மத்தியில் அவர்களை தடுத்துவைத்து, அவர்களது நடத்தை மீது ஒழுங்கை விதித்து, கட்டுப்பாடுகளை திணித்து, அவர்களை கண்காணிக்கும் தண்டனை முறையால் குற்றங்கள் ஒழியவில்லை. குற்றவாளிகளும் குறையவில்லை. மாறாகக் குற்றங்கள் பெருகி வருகின்றன. குற்றவாளிகளும் பெருகி வருகிறார்கள். சிறைகளும் பெருகி வருகின்றன. சிறை முறையைச் சீர்திருத்தம் செய்வது பற்றி காலம் காலமாக விவாதங்கள் நடக்கின்றன. விசாரணைகள் நடக்கின்றன. விஞ்ஞான ஆய்வுகளும் நடக்கின்றன. ஆனால் சிறை முறையை ஒழித்துக் கட்டுவது பற்றி யாருமே சிந்திப்பதில்லை. அன்று தொட்டு இன்று வரை சிறைகள் இருக்கவே செய்கின்றன. கட்டட அமைப்புகளும் கட்டுப்பாடுகளும் மாற்றம் கண்ட போதும், மனிதர்களை சிறை வைக்கும் கோட்பாட்டில் மாற்றம் எதுவும் நிகழவில்லை. அறிவியல் நிபுணர்களும், 'ஆன்ம வைத்தியர்களான' மன இயல் நிபுணர்களும் குற்றவியல் துறைக்குப் புதிய வெளிச்சத்தைக் காட்டியிருக்கிறார்கள். குற்றவாளிகளின் மனக் குகை மர்மங்களை துலக்கியிருக்கிறார்கள். சமூக பின்புலத்தை ஆய்வு செய்திருக்கிறார்கள். இந்த வெளிச்சத்தால் குற்றங்கள் பல வகைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. குற்றவாளிகளும் பல ரகத்தினராக வகுக்கப்பட்டுள்ளனர். குற்றங்கள் பற்றிய அறிவு வளர்ந்திருக்கிறது. ஆனால் குற்றங்களை ஒடுக்கும் மார்க்கங்கள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. குற்றமானது ஒரு சமூக நோய் என கூறப்படுகிறது. இது ஓர் வர்க்கத்தைச் சார்ந்த நோய் எனவும் சொல்லப்படுகிறது. சமூகத்தின் அடிமட்டத்திலிருந்தே இந்த நோய் மேற்கிளம்புவதாகவும் சில ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். மேற்றட்டு வர்க்கத்தினர் சதி முயற்சியாகவும் குற்றத்துக்கு விளக்கம் கொடுக்கப்படுகிறது. இது அதிகார வர்க்கத்தின் பயத்திலிருந்து பிறக்கும் விசித்திரமான கண்டுபிடிப்பு. அதிகார வர்க்கத்தின் இந்தப் பயம்தான் சிறை என்ற நிறுவனத்தைக் கட்டிக்காத்து வருகிறது என்கிறார் பூக்கோ.

'பைத்தியமும் நாகரிகமும்' (Madness and Civilisation) என்றதலைப்பில் பூக்கோ எழுதிய ஆய்வு நூல் மிகவும் சுவாரஸ்யமானது. மன மருத்துவத்தின் வரலாற்று வளர்ச்சியை இந்நூல் அகழாய்வு செய்கிறது.

அன்றொரு காலத்தில் ஐரோப்பிய நாகரிகம் பைத்திய மனிதனை ஒரு மனிதப் பிறவியாகப் பார்க்கவில்லை. அவனை ஒரு விபரீதமான விலங்காகவே கண்டது. நாகரிக மனிதர்களுக்கு, அதாவது பகுத்தறிவு பிறழாத மனிதர்களுக்கு அவன் ஓர் அச்சுறுத்தலாகவே காணப்பட்டான். பைத்தியம் ஒரு மனோவியாதியாக முற்காலத்தில் கருதப்படவில்லை. அதனைக் குணப்படுத்த மருத்துவ முறைகளும் இருக்கவில்லை. பைத்தியக்காரன் நோயின் உபாதையால் புலம்பும்போது, ஆவேசம் அடைந்து கதறும்போது, குழப்பத்தில் பிதற்றும்போது, பித்தலாட்டம் ஆடும்போது, அவனது நடத்தையை விபரீதமான விலங்காடித்தனமாகவே அன்றைய சமூகம் கருதியது. மனிதமற்ற மனிதப் பண்புகள் செத்துப்போன ஓர் ஆபத்தான பிராணியாகவே மற்றவர்கள் அவனைக் கண்டனர். ஐரோப்பிய ஆளும் வர்க்கம் பைத்தியக்காரனை கண்டு பயந்தது. அவனை நாகரிக சமூகத்திலிருந்து ஒதுக்கி வைக்க விரும்பியது. அதனால் அவன் மிருகம் போல வேட்டையாடிப் பிடிக்கப்பட்டான். வைத்திய இல்லங்களில் அடைத்து வைக்கப்பட்டான். இருண்ட பாதாள அறைகளில், சங்கிலியால் விலங்கிடப்பட்டு தனிமையில் ஒதுக்கப்பட்டான். அவன் ஒரு மிருகமாக கருதப்பட்டதால் உடையோ, உணவோ, உறங்கும் வசதிகளோ அவனுக்கு வழங்கப்படவில்லை. நிர்வாணமாக, பசியின் உபாதையுடன், குளிரில் நடுங்கியபடி சுவரோடு கட்டுண்டு கிடந்து மௌனமாக கண்ணீர் வடித்த அந்த அப்பாவி மனிதனின் ஆழமான துன்பத்தை அன்றைய நாகரிக மனிதர்கள் கண்டுகொள்ளவில்லை. பைத்திய மனிதன் ஒரு சபிக்கப்பட்ட மனிதனாகவே கருதப்பட்டான்.

இன்றைய நாகரிக உலகம், பைத்தியத்தை ஒரு மனநோயாக கண்டுபிடித்த போதும், பண்டைய அணுகுமுறையிலேயே இந்நோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுவதாகக் குற்றம் சுமத்துகிறார் பூக்கோ. அன்றுபோலவே இன்றும் பைத்திய நோயால் பீடிக்கப்பட்ட மனிதர்கள் மன நோயாளர் காப்பு மனைகளில் அடைத்து வைக்கப்படுகிறார்கள். அன்றைய சமூகம் பைத்தியக்காரனை ஒரு மிருகமாகவும் அவனது நடத்தையை மிருகத்தனமாகவும் கருதியது. இன்றைய மருத்துவமும் நோயின் மூலத்தை மனித இயல்பின் பிறழ்ச்சியால் ஏற்படும் மனக் கோளாறாக கருதி வருவதாகக் கூறுகிறார் பூக்கோ.

*(முற்றும்)*

## தேச விடுதலையுடன் மானிடத்தின் விடுதலை குறித்தும் ஆழமாகச் சிந்தித்த தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கம்



*ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றிய சிந்தனைப் புரட்சியை முன்வைத்தவர் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம்.*

*அவர் வெறும் அரசியல் மதியுரைஞர் மட்டுமல்லர். அதையும் தாண்டி ஒரு தத்துவாசிரியர். ஓரினத்தின் தேச விடுதலையையும் தாண்டி மனித விடுதலை பற்றியும் ஆழமான ஆத்ம விசாரணைகளைச் செய்த ஓர் ஆய்வறிஞர்.*

*'விடுதலை' என்ற தமது நூலிலே அரசியலுக்கு அப்பால், மேலும் பல்துறை சார்ந்த தமது சிந்தனைத் தெறிப்புக்களை அவர் முன்வைத்துள்ளார்.*

*அரசியல், சமூகவியல், உளவியல், பொருளியல், மெய்யியல், வரலாற்றியல், மானிடவியல் போன்ற அறிவியல் பரப்புகளை ஊடுருவி நிற்கும் அர்த்தம் பொதிந்த கட்டுரைகள் அதில் அடங்கியுள்ளன.*

*இந்த விசாரணைகள் அனைத்துக்கும் மூலப் பொருளாக விளங்குபவன் மனிதன். ஆகவே, மனிதன் பற்றியும், மனித வாழ்வு மற்றும் வரலாறு பற்றியும், மனித விடுதலை பற்றியும் ஆழமான விசாரணைகள் செய்த சிந்தனையாளர்கள் சிலரின் புதுமையான, புரட்சிகரமான பார்வைகளை இக்கட்டுரைகள் வாயிலாக அறிமுகம் செய்துவைக்கிறார் 'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கம்.*

# சீனி, உப்பு வரி அதிகாரிக்கப்படும்; புற்றுநோயைக் கட்டுப்படுத்த ஔடதம்

## நாடாளுமன்றில் சுகாதார அமைச்சர் ராஜித

கொழும்பு, டிசெ.08

தொற்றா நோயைக் கட்டுப் படுத்தும் நோக்கில் சீனி, உப்பு ஆகியவற்றின் வரியை அதி கரிப்போம். மேலும் எதிர்வரும் ஜனவரி மாதம் தொடக்கம் இரத் தப் பரிசோதனை அரச வைத்தி யசாலைகளில் ஆரம்பிக்கப்படும் என்று சுகாதார சுதேச வைத்திய அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

புதிய வீதி ஒழுங்கு முறை வெற்றி அளித்துள்ளமையால் 25 ஆயிரம் ரூபா தண்டப் பணத்தை நீக்க வேண்டாம் என்று ஜனாதி தியிடம் நான் வலியுறுத்தினேன். அத்துடன் டெங்கு நோயாளர் களின் எண்ணிக்கை 48 ஆயி ரமாக அதிகரித்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் திங்கட் கிழமை வரவு - செலவுத் திட்டத் தின் சுதேச வைத்திய, சுகாதார, போசனத்துறை அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தின் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு:

"நாட்டின் சுகாதாரச் சேவையை மேம்படுத்தும் நோக்குடன் குடும்ப வைத்திய முறைமையை மேம் படுத்தத் திட்ட மிட்டுள்ளோம். இதன் பிரகாரம் 50 ஆயிரம் பேருக்கு ஒரு வைத்தியர் என்று நியமிக்கவுள்ளோம். இதன்போது வீட்டுக்கு வீடு சென்று வைத்திய சேவையை முன்னெடுக்கவுள் ளோம்.

மேலும் ஜனவரி மாதம் தொடக்கம் அரச வைத்தியசா லைகளிலேயே இரத்தப் பரிசோ தனை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள் ளோம். தற்போது நாட்டில் ஔடத பற்றாக்குறை முழுமையாக நீக் கப்பட்டுள்ளது.

சர்வதேச அளவில் இலங்கை சுகாதார சேவை முன்னிலை வகிக்கிறது. தொற்றும் நோய் களை பெருமளவில் கட்டுப்ப டுத்தி உள்ளோம். மலேரியா, நோய் நீக்கப்பட்டுள்ளது. எனி னும் டெங்கு, எயிட்ஸ் நோய் மாத்திரமே மீதமுள்ளது. இவற் றில் எயிட்ஸ் நோய் பெருமளவில் குறைவடைந்தது. எனினும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டதன் காரணமாக டெங்கு நோய்த் தாக் கத்துக்கு உள்ளானோர் தொகை 48 ஆயிரமாக அதிகரித்துள்ளது. இதேவேளை, புற்று நோயைக் கட்டுப்படுத்த விசேட ஔடதம் கொள்வனவு செய்யப்படுகிறது. இதற்கு 90 லட்சம் ஒதுக்க வேண்டியுள்ளது. அத்துடன் ஔடத பற்றாக்குறை தற்போது நாட்டில் இல்லை. இந்தப் பற் றாக்குறையை நீக்க விசேடமென் பொருள் கட்டமைப்பின் ஊடாக ஒன்லைன் திட்டம் மூலம் ஔட தங்களை வைத்தியசாலைகளில் பெற்றுக் கொள்ள முடியும்.

இதேவேளை, தனியார் வைத்தி யசாலைகளில் எல்லை மீறிய கட்டணம் சேவைகளுக்குப் பெறப் படுகிறது. இதன் காரணமாக தனியார் வைத்தியசாலைகளில் சேவைகளுக்கு கட்டுப்பாட்டு கட்டணத்தை விதிக்கத் தீர்மா னித்துள்ளோம்.

இதேவேளை, தொற்றா நோயைக் கட்டுப்படுத்தும் நோக் குடன் சீனி, உப்பு ஆகியவை மீதான வரியை அதிகரிக்கவேண் டும் என்று 2015 ஆம் ஆண்டு வலியுறுத்தினேன். அப்போது ஊடகங்கள் விமர்சனம் செய்தன. ஆனால் பிரிட்டனில் 2014 இல் இம்முறைமை நடை முறைக்கு வந்துள்ளது. எனவே சீனி, உப்பு என்பவற்றின் வரியை அதிகரிக் கவுள்ளோம். - என்றார். (எ)

## மாற்றுத்திறனாளிகள் தின விழா

யாழ்ப்பாணம், டிசெ.08

யாழ். விழிப்புலனற்றோர் சங்கம் நடத்தும் சர்வதேச மாற் றுத்திறனாளிகள் தின நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியில் சங்கத்தின் உபதலைவர் ஆ.மகேந் திரன் தலைமையில் இடம் பெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந் தினராக யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் பா.செந்தில்நந் தனனும், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கலைப்பீட, சமூகவியல்துறை சிரேஷ்ட விரி வுரையாளர் கலாநிதி திருமதி பகீரதி ஜீவேஸ்வரராசனும், கௌரவ விருந்தினராக சமூகப் பொருளாதார சூழல் அபிவிருத் தியாளர், முகாமையணிப் பிரதி நிதி திருமதி வாசுகி இராஜேந்திரா ஆகியோர் கலந்து கொள்வர். (இ-7)

## புலமைப்பரிசில் சித்தியடைந்த மாணவர் கௌரவிப்பு

வேலணை, டிசெ.08

தீவக அரிமாக் கழகத்தின் ஏற்பாட்டில் இந்த ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக் கான கௌரவிப்பு விழா 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்ப கல் 10 மணிக்கு, வேலணைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும்.

தீவக அரிமாக் கழகத் தலை வர் லயன் செ.சதீஸ்குமார் தலை மையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தி னராக வைத்திய கலாநிதி வை.தியாகராஜாவும், சிறப்பு விருந்தினராக வேலணைப் பிர தேச செயலர் திருமதி எஸ்.தெய் வேந்திரமும் கலந்து கொள்வர். (இ-7)

## தினசரி ராசி பலன் 08.12.2016

| | |
|---|---|
| சுபநேரம் | : காலை : 10.45 – 11.45 |
| | மாலை : 12.15 – 1.15 |
| ராகு காலம் | : 1.30 – 3.00 |
| குளிகன் | : 9.00 – 10.30 |
| எமகண்டம் | : 6.00 – 7.30 |

ஜோதிட ஜோதி P.ராமன் பட்டாச்சாரியார் ஸ்ரீ ஜெய மாருதி ஜோதிட நிலையம் கும்பகோணம், தமிழ்நாடு. (maruthi_jaya2063@yahoo.co.in)

சுபமுகூர்த்த நாள் – மேல்நோக்கு நாள்

**மேஷம்:** லாபம் - அதிஷ்டங்கள் மறைமுக வரவுகளாக வளம் நல்கும்.

**ரிஷபம்:** சாந்தம் - மனக் குழப்பங்கள் குறைந்து வாழ்வில் சாந்தம் காண்பீர்கள்.

**மிதுனம்:** உயர்வு - அனைத்துக் காரியத்திலும் முயற்சியுடன் செயற்பட்டால் உயர்வு ஏற்படும்.

**கடகம்:** ஆக்கம் - இன்று உங்களுடைய செயலில் நல்ல முன்னேற்றம் ஏற்படும்.

**சிம்மம்:** ஆர்வம் - இன்று உங்களுக்கு சந்திராஷ்டமம் என்பதால் செய்யும் செயல்களில் மிகுந்த ஆர்வம் ஏற்படும்.
சந்திராஷ்டமம் : உத்திரம் 1ஆம் பாதம்.

**கன்னி:** ஓய்வு - இன்று உங்களுக்கு சந்திராஷ்டமம் என்பதால் வீண் அலைச்சலைக் குறைத்து ஓய்வு எடுக்க வேண்டிய நாள்.
சந்திராஷ்டமம் : உத்திரம் 2,3,4ஆம் பாதங்கள்.

**துலாம்:** அமைதி - மனக் குழப்பங்கள் குறைந்து நிம்மதி, அமைதி ஏற்படும்.

**விருச்சிகம்:** தாமதம் - எண்ணிய எண்ணங்கள் யாவும் தாமதமாகவே நிறைவேறும்.

**தனுசு:** பொறுமை - நிதானத்தைக் கடைப்பிடித்து நிம்மதியை நாடுவீர்கள்.

**மகரம்:** பரிசு - எதிர்பாராத பரிசுப் பொருள் சேர்க்கை தரும். நீண்ட நாளைய நண்பர்களைச் சந்திக்கும் நாள்.

**கும்பம்:** சினம் - வீண் கோபத்தால் அனைவரிடத்திலும் உள்ள மதிப்பு குறையும்.

**மீனம்:** மேன்மை - உறவுகளையும் நட்புகளையும் அரவணைத்து நினைத்ததைச் சாதிப்பீர்கள்.

## மத அடிப்படைவாதத்தை ஒழிக்க மதத் தலைவர்கள் ஒன்று திரள்க

### ராகுல தேரர் வேண்டுகோள்

கொழும்பு, டிசெ.08

நாட்டிற்குள் காணப்படும் மத அடிப்படைவாத செயற்பா டுகளைத் தடுப்பதற்கு சகல மதத் தலைவர்களும் உடனடியாக ஒன்றுகூடிக் கலந்துரையாட வேண்டும் என்று ராகுல தேரர் தெரிவித்தார்.

தம்புள்ள செயலக அலுவல கத்தில் இடம்பெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக் கையிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டிலுள்ள பௌத்த விகா ரைகளைப் பாதுகாப்பதற்கு கூடிய கவனம் செலுத்தப்பட வேண் டும். இதற்காக காத்திரமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட வேண்டும்.

நான் இது தொடர்பில் நாட் டுத் தலைவர்களை அறிவுறுத்த நடவடிக்கை எடுத்த போதிலும், அது பயனளிக்கவில்லை என் றும் ஊடகங்கள் இது தொடர் பில் மக்களை அறிவூட்ட வேண் டும் என்றும் தேரர் வேண்டு கோள் விடுத்துள்ளார். (எ)

## கஞ்சா பயிரிடும் இடங்களை ஆளில்லா விமானமூலம் அழிக்கலாம்

### ஆலோசனை கூறுகிறார் ஐ.தே.க. எம்.பி

கொழும்பு, டிசெ.08

கஞ்சா பயிரிடும் இடங்களை ஆளில்லா விமானங்கள் மூலம் இனங் கண்டு இல்லாதொழிக் குமாறு ஐ.தே.க. நாடாளு மன்ற உறுப்பினர் புத்திக்க பத்திரண ஆலோசனை வழங்கினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற வாய் மூல வினாவுக்கான நேரத்தின் போது மேலதிக கேள்வி எழுப்பும் போதே சட்டம், ஒழுங்கு அமைச் சர் சாகலரத்நாயக்கவிடம் இந்த ஆலோசனையை வழங்கி னார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யுத்தத்தின் போது ஆளில்லா விமானங்கள் மூலமே புலிகள் இருந்த இடத்தை இனங்கண்டு இயக்கம் அழித்தொழிக்கப்பட் டமை அனைவருக்கும் தெரி யும்.

எனவே அதுபோல் இலங் கையில் கஞ்சா பயிரிடும் இடங் களை ஆளில்லா விமானங்கள் மூலம் இனங்கண்டு முழுமை யாக இல்லாதொழிக்க முடியும் என்று ஆலோசனை வழங்கி னார். (எ)

## பாடசாலைக்கு புத்தக 'றாக்கை'கள்

பருத்தித்துறை, டிசெ.08

பருத்தித்துறை சித்தி விநாய கர் வித்தியாலய ஆரம்பப் பிரிவு வகுப்புகளுக்கான புத்தக றாக் கைகளை வடக்கு மாகாண சபை உறுப்பினர் க.தர்மலிங்கம் வழங் கினார்.

மாகாண சபையில் ஒதுக்கப் பட்ட நிதியிலிருந்து 50 ஆயிரம் ரூபாவை பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலய ஆரம்பப் பிரிவு வகுப்புகளுக்கான புத்தக றாக்கைகள் கொள்வனவு செய் வதற்கு மாகாண சபை உறுப்பி னர் வழங்கியுள்ளார்.

றாக்கைகள் பாடசாலை அதி பரிடம் கையளிக்கப்படவுள் ளன. (இ-31)

## நாட்டில் ஒருவித வைரஸ் தொற்று பரவும் அபாயம்

கொழும்பு, டிசெ.08

நாடு முழுவதும் ஒரு வித வைரஸ் தொற்று பரவி வருகின் றமையால் மிகவும் அவதானமாக இருக்குமாறு குழந்தைகள் தொடர்பான சிறப்பு நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

ஒரு சில தினங்களுக்கு காய்ச் சல் காணப்படுகின்ற நிலையில் அது குணமாகியதும் ஒரு சில வாரங்களுக்கு வைரஸ் தொற்று பரவுவதாகவும், அந்த வைரஸ் தொற்றின் காரணமாக உலர் அல்லது சளியுடனான இருமல் காணப்படும் என்று அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

சிறு பிள்ளைகளிடையே இந்த வைரஸ் அதிகமாகப் பரவு வதால் மக்கள் கூட்டம் அதிகம் உள்ள இடங்களுக்குச் சிறுவர் களை அழைத்துச் செல்வதைத் தவிர்க்குமாறு வைத்தியர் குறிப் பிட்டுள்ளார். உலர் அல்லது சளியுடனான இருமல் ஒரு சில வாரங்கள் தொடர்ந்தால் அது நுமோனியா ஆபத்தை ஏற்படுத்தக் கூடும் என்பதால் உடனடியாக வைத்திய சிகிச்சை பெற்றுக் கொள்ளுமாறு வைத்தியர் சுட்டிக் காட்டியுள்ளார். (எ)

# கொடிகாமத்தில் வீதி ஒழுங்கு விழிப்புணர்வு பேரணி






யாழ்ப்பாணம், டிசெ.08

வீதி ஒழுங்கு பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு தென்மராட்சி கொடிகாமம் பகுதியில் விழிப்புணர்வு பேரணி ஒன்று நேற்று நடைபெற்றது.

பேரணியில் கொடிகாமம் பகுதி சாரதிகள், வியாபாரிகள் மற்றும் பொது மக்களும் கலந்து கொண்டனர்.

ஏ 9 வீதி கொடிகாமம் ரயில் நிலையத்திற்கு முன்பாக ஆரம்பமான வீதி ஒழுங்கு தொடர்பான இந்த விழிப்புணர்வுப் பேரணி கொடிகாமம் பேருந்து நிலையத்தைச் சென்றடைந்து அங்கு வீதிப் போக்குவரத்து தொடர்பான வழிமுறைகள் குறித்தும் விளக்கம் அளிக்கப்பட்டது. பேரணியில் கலந்துகொண்டவர்கள் ''வீதியைக் கடக்கும் போது கவனித்து நடக்கவும்'', ''வாகனங்களைச் செலுத்தும்போது தொலைபேசி பயன்படுத்த வேண்டாம்'', ''தவறான விதத்தில் திருப்ப வேண்டாம்'' சீற்பெல்ட் அணியாமல் வாகனம் செலுத்த வேண்டாம்'' ''வேகமாக வாகனங்களை செலுத்த வேண்டாம்'' போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை தாங்கிச் சென்றனர். (இ-23)

# மானிப்பாயில் 3 வீதிகள் மிக மோசமாகச் சேதம்

## போக்குவரத்துக்கு பெரும் இடைஞ்சல்

மானிப்பாய், டிசெ.08

மானிப்பாய் பட்டினத்திலுள்ள முக்கியமான மூன்று வீதிகள் பல மாதங்களாகப் படுமோசமான நிலையில் சேதமடைந்துள்ளன. இவ்வீதிகள் ஊடாக வாகனங்களின் போக்குவரத்துக்கு மட்டுமல்ல மாணவர்கள், பொது மக்களின் நடமாட்டத்திற்கும் இடையூறாக இருக்கின்றன.

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் மான்னிப்பாய் பட்டினத்தில் மிக முக்கியமான வீதிகளாகக் கருதப்படும் கனகசபை வீதி, சங்கரப்பிள்ளை வீதி, லோட்டன் வீதி ஆகிய மூன்று வீதிகளுமே வாகனங்கள் செல்ல முடியாதவாறும் மக்கள் நடமாட முடியாதவாறும் காடசியளிக்கின்றன. சங்கரப்பிள்ளை வீதியில் வங்கியும் பிரபல்யமான மானிப்பாய் இந்துக்கல்லூரியும், கனகசபை வீதியில் செல்லமுத்து விளையாட்டு மைதானமும், லோட்டன் வீதியில் பிரபல்யமான ஆலயமும் அமைந்துள்ளன. இந்த வீதிகளின் மோசமான நிலை குறித்து விசனம் தெரிவித்துள்ள பிரதேச மக்கள் மூன்று வீதிகளையும் விரைவாகத் திருத்தியமைக்குமாறு சம்பந்தப்பட்ட திணைக்களங்களைக் கோரியுள்ளனர். (இ-59)

# மண்டைதீவு விவசாயிகளுக்கு உர மானியமாக 5000 ரூபா

## இயற்கைப் பசளை பாவனைக்கு ஊக்குவிப்பு

மண்டைதீவு, டிசெ.08

மண்டைதீவு விவசாயிகளுக்கான உரமானியம் வழங்கப்பட்டுள்ளது. மண்டைதீவில் நெல்விதைப்பில் ஈடுபட்டவர்களுக்கே வேலணை கமநல திணைக்கள போதானாசிரியரின் சிபார்சின் அடிப்படையில் வழங்கப்பட்டது.

விவசாயிகள் விதைத்த நெல் வயல்களுக்கு ஏக்கருக்கு ஐயாயிரம் ரூபா வீதம் காசோலை மூலம் கொடுப்பனவு வழங்கப் பட்டது.

ஏறக்குறையாக 50 வரையான பயனாளிகள் இதனால் பயன் அடைந்துள்ளனர் என்று விவசாயிகள் தெரிவித்தனர். தில்லைகுடா, கம்பன் புலம், சாத்தாவாரி 'கிராஞ்சி' குளவயல் பயிற்செய்கையாளருக்கும் கடந்த காலங்களில் உரமாக மானியம் வழங்கப்பட்டது. தற்பொழுது இயற்கைப் பசளைப் பாவனையை ஊக்குவிப்பதற்காகவே உரமானியம் பணமாக வழங்கப்படுவதாக மேலும் தெரிவிக்கபடுகிறது. (இ-30)

# மண்டைதீவில் கடல் அரிப்பு; கிழக்குக் கரையோரம் பாதிப்பு

நல்லூர், டிசெ.08

அண்மையில் ஏற்பட்ட காலநிலை மாற்றத்தால் மண்டைதீவின் கிழக்குக் கரையோரம் மோசமான கடல் அரிப்புக்குள்ளாகி வருவதாகப் பிரதேச வாசிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

மண்டைதீவு கிழக்குக் கடற்கரையில் இறங்கு துறை உண்டு.

கரையில் இருந்து கடலுக்குள் ஆழமான பகுதி வரை அமைக்கப்பட்டுள்ள நீட்சிப்(வீதி) பகுதியின் தெற்குப் பகுதியே கடல் அரிப்பால் பாதிக்கப்பட்டு அள்ளுப்படுகிறது.

இறங்குதுறை அமைக்கப்பட்ட காலத்தில் தெற்குப் பகுதியில் பல ஏக்கர் கடல் பகுதி மணலால் நிரப்பப்பட்டு தரையாகி பாதையாக மாறியது.

ஆனால் அண்மையில் ஏற்பட்ட கடும் காற்று, மழை நீரோட்டம் போன்ற காரணங்களால் பல வருடங்களாக இருந்த மணல் மேடும் அதனை அடுத்த கடற்கரையும், இராமன் குண்டுத்துறையும் முழுதாக அள்ளப்பட்டு போகுமோ என அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக மீனவர்களும் பிரதேச ஆர்வலர்களும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தனர் என்றும் அதையடுத்து யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் உடன்நட்வடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த துறைமுகம் கடற்படையினரால் விடுவிக்கப்பட்டபொழுதும் மீனவரின் பாவனையும், துறையும் கடற்படையினரின் தீவிரமான கண்காணிப்பிலேயே இருந்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-20)

# அறநெறிப் பாடசாலை மாணவருக்கான திருக்குறள் மனனப் போட்டிகள்

## இணுவில் திருக்குறள் மன்றம் நடத்துகிறது

சுன்னாகம், டிசெ.08

இணுவில் திருக்குறள் மன்றம் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான திருக்குறள் மனனப் போட்டியை நடத்தவுள்ளது. உடுவில், சண்டிலிப்பாய், சங்கானை, தெல்லிப்பழை, கோப்பாய் மற்றும் நல்லூர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட அறநெறிப்பாடசாலை மாணவர்கள் இந்த மனனப் போட்டியில் பங்குபற்றமுடியும்.

பிரிவு ஒன்றில் தரம் 3 முதல் 5 வரையான மாணவர்கள் உள்ளடக்கப்படுகின்றார்கள். இம்மாணவர்கள் முதல் ஐந்து அதிகாரங்களையும் மனனம் செய்ய வேண்டும். பிரிவு இரண்டில் தரம் 6 முதல் 8 வரையான மாணவர்கள் உள்ளடங்குகின்றார்கள். இவர்கள் முதல் பத்து அதிகாரங்களையும் மனனஞ் செய்தல் வேண்டும். பிரிவு மூன்றில் தரம் 9 முதல் 11 வரையான மாணவ்ர்களும் பிரிவு நான்கில் தரம் 12, 13 மாணவர்களும் உளள்டக்கப் படுவார்கள். இவர்கள் முதல் பதினைந்து அதிகாரங்களையும் மனனம் செய்தல் வேண்டும். இந்த மனனப் போட்டியில் விரும்புகின்ற அறநெறிப் பாடசாலைகள் பதிவுகளை மேற்கொள்ள முடியும். விண்ணப்பங்களை எதிர் வரும் 25 ஆம் திகதிக்கு முன்பாக செயலாளர், திருக்குறள் மன்றம், இணுவில் அறிவாலயம், கோவில் வாசல், இணுவில் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு திருக்குறள் மன்றம் அறிவுறுத்தியுள்ளது. (இ-54-7)

# யாழ் நகரப் பகுதி வீதிகளில் நடைபாதை அமைக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், டிசெ.08

யாழ். நகரப் பகுதியில் போக்குவரத்து நெரிசலை இலகுபடுத்தும் முக மாக நகரப்பகுதி வீதிகள் அனைத்திற்கும் நடை பாதைகள் அமைக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. முதற்கட்டமாக யாழ். ஸ்ரான்லி வீதியில் நடைபாதை அமைப்பதற்கு முடிவாக இருப்பதாகத் தெரியவந்தது.

இது தொடர்பில் யாழ். ஸ்ரான்லி வீதியிலுள்ள வர்த்தகர்களிடம் தரவுகள் பெறப்பட்டுள் ளன என்று அங்கு பணியாற்றும் ஊழியர்கள் தெரிவித்தனர்.

யாழ்.நகரப்பகுதியில் அதிகரித்துள்ள போக்குவரத்து நெருக்கடியைக் குறைக்கும் வகையிலும், பாதசாரிகள் நடைபாதைகளை பாவிப்பதை ஊக்கப்படுத்துவதன் மூலமும் விபத்துக்களைத் தடுக்கவே இந்த நடவடிக்கை மேற்கொள் ளப்படுகிறது. (இ-20)

# கலைஞர் விவரம் சேகரிக்கப் படிவம்

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் பிரதேச கலைஞர்களின் விவரம் அறியும் பொருட்டு பிரதேச செயலகங்கள் மூலம் சுயவிவரப் படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.


யாழ். பிரதேச செயலகம் சகல கிராம அலுவலர்கள் மூலம் படிவங்களை வழங்கியுள்ளன. சகல கலைஞர்களும் படி வங்களைப் பூரணப்படுத்தி கிராம அலுவலர்களிடம் கையளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-19)

# தயா மாஸ்ரர் மீதான வழக்கு; முடிவுறுத்தப்பட்டது விசாரணை

கொழும்பு, டிசெ.08

தமிழிழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் உத்தியோகப் பூர்வ பேச்சாளர் தயா மாஸ்ரர் (தயாநிதி) மீது நடத்தப்பட்டு வந்த வழக்கு விசாரணை முடிவுறுத்தப்பட்டது.

சட்டமா அதிபரின் உத்தரவுக்கு இணைங்க கொழும்பு பிரதம நீதிவான் ஜிகான் பலப்பிற்றிய, இதற்கான அறிவிப்பை நேற்று முன்தினம் உத்தியோக பூர்வமாக நீதிமன்றில் தெரியப்படுத்தினார்.



தயா மாஸ்ரருடன் கைது செய்யப்பட்ட மொழி பெயர்ப்பாளர் ஜோர்ஜ் மாஸ்ரர், சட்டமா அதிபரின் உத்தரவின் பேரில் ஏற்கனவே விடுவிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (அ)

# மணிமேகலை பிரசுரத்தின் நூல்கள் வெளியீட்டு விழா

கொழும்பு, டிசெ.08

மணிமேகலை பிரசுரத்தின் ஏற்பாட்டில் இலங்கை- தமிழக எழுத்தாளர்களின் 22 நூல்களின் வெளியீட்டு விழாவும், புத்தக விற்பனைக் கண்காட்சியும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு கொழும்பு வெள்ளவத்தை தமிழ்ச் சங்கத்தில் தொழிலதிபர் தே.ஈஸ்வரன் தலைமையில் நடைபெறவிருக்கின்றன.

இந் நிகழ்வில் சிங்கப்பூரிலிருந்து தமிழ் மொழி ஆய்வாளர் முனைவர் மு.சுகுமார், டுபாயிலிருந்து மனோதத்துவ நிபுணர் திருமதி பஜிலா ஆசாத், தமிழகத்திலிருந்து கவியரசு கண்ணதாசனின் மகள் கவிதாயினி விசாலி கண்ணதாசன், இதய நோய் நிபுணர் டாக்டர் பாஸ்கரபாண்டியன், திருமதி வசந்தி பாஸ்கரபாண்டியன், திருமதி காந்திமதி, ப.உதயகுமார், கணினி நிபுணர் எஸ்.பாஸ்கர் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன், 'தாயக ஒலி' சஞ்சிகை ஆசிரியர் தம்பு சிவா ஆகியோர் முன்னிலையில் இந்த நிகழ்வு நடைபெறும். இந்த நிகழ்வில் சட்டத்தரணி இராஜகுலேந்திரா, எழுத்தாளர் எஸ் சதீஷ்குமார், நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், ஞாயிறு 'விரகேசரி' வெளியீட்டின் ஆசிரியர் ஆர்.பிரபாகன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வி தங்கேஸ்வரி ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர். (உ)

# அந்தமானில் சிக்கிய 800 பயணிகள் மீட்பு

டில்லி, டிசெ.08

வங்கக் கடலில் புயல் சின்னம் உருவாக உள்ளதால், அந்தமான் நிகோபார் தீவுகளில் கனமழை பெய்து வருகிறது. இதன் காரணமாக, அந்தமான் தீவில் சிக்கிய, 800 பயணிகளை கடற்படைக் கப்பல்கள் மீட்டுள்ளன.

இது தொடர்பில் இந்திய வானிலை ஆய்வு மையம் கூறுகையில்,

''விசாகப்பட்டினத்துக்கு தெற்கே, தென் கிழக்குப் பகுதியில், ஆயிரத்து 260 கி.மீ., தூரத்தில் குறைந்த காற்று அழுத்தத் தாழ்வுநிலை மையம் கொண்டுள்ளது.

இது அடுத்த 24 மணி நேரத்தில் குறைந்த காற்று அழுத்த தாழ்வு மண்டலமாகவும், அதற்கு அடுத்த 24 மணி நேரத்தில் புயல் சின்னமாகவும் மாற வாய்ப்பு உள்ளது. இதன் காரணமாக, அந்தமான் நிகோபார் தீவுகளில் அடுத்த இரண்டு நாள்களுக்கு கனமழை பெய்யும்'' என்று தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக, அந்தமான் தலைநகர் போர்ட்பிளேயரில் இருந்து 41 கி.மீ., தொலைவில் உள்ள ஹேவ்லாக் தீவில் சிக்கியுள்ள, 800 பயணிகள் அங்கிருந்து வெளியேற முடியாமல் தவித்தனர். அவர்கள் கடற்படைக் கப்பல்கள் மூலம் மீட்கப்பட்டனர். (எ)

# உள்ளூராட்சித் தேர்தல் ரத்துக்கு எதிரான மேன்முறையீட்டு மனு ஒத்திவைப்பு

சென்னை, டிசெ.08

உள்ளூராட்சித் தேர்தல் ரத்துச் செய்வது தொடர்பாக சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடரப்பட்ட மேன்முறையீட்டு வழக்கு விசாரணையை எதிர்வரும் ஜனவரி மாதம் இறுதி வாரத்துக்குத் தள்ளி வைத்து நீதிபதிகள் உத்தரவிட்டார்கள்.

தமிழகத்தில் உள்ள உள்ளூராட்சிச் தேர்தல் கடந்த ஒக்ரோபர் மாதம் நடைபெற இருந்தது. இந்தத் தேர்தல் தொடர்பாக தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் அறிவிப்பை வெளியிட்டது.

இந்தத் தேர்தலில், எஸ்.டி. பிரிவினருக்கு போதிய இட ஒதுக்கீடு வழங்கப்படவில்லை என்று சென்னை உயர்நீதி மன்றத்தில், தி.மு.க. தரப்பில்வழக்குத் தொடரப்பட்டது.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி கே.கிருபாகரன், எஸ்.டி.பிரிவினருக்குப் போதிய இட ஒதுக்கீடு வழங்கப்படவில்லை என்ற கோரிக்கையை ஏற்க முடியுாது. அதேநேரம், இந்த தேர்தல் அறிவிப்பு அவசர கதியில் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பஞ்சாயத்து சட்ட விதிகளை முறையாகப் பின்பற்றி இந்த அறிவிப்பு வெளியாகவில்லை. எனவே, இந்தத் தேர்தலை ரத்து செய்கிறேன். உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவது குறித்து புதிய அறிவிப்பை வெளியிட வேண்டும். இந்தத் தேர்தல் எதிர்வரும் 31 ஆம் திகதிக்குள் நடத்தி முடிக்க வேண்டும் என்று கூறியிருந்தார்.

இந்தத்தீர்ப்பை எதிர்த்து தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் சென்னை உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்தது. இந்த மேன்முறையீட்டு மனுவை நீதிபதிகள் ஹூலு வாடி ஜி.ரமேஷ், பார்த்திபன் ஆகியோர் விசாரித்தனர்.

இதன்போது தனி நீதிபதி என்.கிருபாகரனின் தீர்ப்புக்குத் தடை விதிக்க மறுத்து விட்டனர். இந்த நிலையில் இந்த வழக்கு நீதிபதிகள் முன்பு ஒன்று மீண்டும் விசாரணைக்கு வந்தது.

அப்போது, இந்த வழக்கை பொங்கல் விடுமுறைக்குப் பின்னர் விசாரிப்பதாகக் கூறி, ஜனவரி மாதம் இறுதி வாரத்துக்கு தள்ளி வைத்து நீதிபதிகள் உத்தரவிட்டார்கள். (ஏ)

# மறைந்த ஜெயலலிதாவுக்கு உருவச்சிலையுடன் நினைவிடம்

சென்னை, டிசெ.08

மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் உடல் நல்லடக்கம் செய் யப்பட்ட இடத்தில் அவரின் முழு உருவச் சிலையுடன் நினைவிடம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னை மெரீனாக் கடற்கரையில் எந்த ஒரு கட்டடமும் அமைக்கக் கூடாது என்று கடற்கரை ஒழுங்குமுறை சட்டப்படி தடை விதிக்கப்பட்டுள்ளது.


மெரீனா கடற்கரையில் உள்ள அண்ணா, எம்.ஜி.ஆர். நினைவிடங்களை தமிழக அரசின் செய்தித் துறை பராமரித்தாலும், பொதுப் பணித்துறை கட்டுப்பாட்டில்தான் உள்ளன.

எம்.ஜி.ஆர். நினைவிட வளாகத்தில் ஜெயலலிதாவின் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே கட்டப்பட்டுள்ள நினைவிடத்தில் ஜெயலலிதாவின் உடலை நல்லடக்கம் செய்யத் தமிழக அரசு அனுமதி அளித்துள்ளது. ஆனால் ஜெயலலிதாவுக்கு நினைவிடம் அமைப்பதற்கு மத்திய அரசிடம் அனுமதி கேட்கத்திட்டமிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் அ.தி.மு.க. நிர்வாகி ஒருவர் கூறியதாவது:

''ஜெயலலிதாவுக்கு முழு உருவச்சிலையுடன் நினைவிடம் அமைக்கப்படும். எதிர்வரும் பெப்ரவரி 24 ஆம் திகதி ஜெயலலிதாவின் பிறந்த நாளையொட்டி சிலை வைக்கப்படும்'' -என்றார். (எ)

# புவியைக் கண்காணிக்கும் செயற்கைக்கோள் வெற்றிகரமாக விண்ணில் பாய்ந்தது நேற்று




ஹைதராபாத், டிசெ.08

புவியைக் கண்காணிக்கும் ரிசோர்ஸ் சாட்-2 ஏ செயற்கைக்கோள், பி.எஸ்.எல்.வி சி-36 ரொக்கெட் மூலம் சதீஸ் தவான் விண்வெளி நிலையத்தின் முதலாவது ஏவுதளத்தில் இருந்து நேற்றுக் காலை விண்ணில் பாய்ந்தது.

2003ஆம் ஆண்டு ரிசோர்ஸ் சாட்-1 செயற்கைக்கோளையும், 2011 ஆம் ஆண்டு ரிசோர்ஸ் சாட்-2 செயற்கைக் கோளையும் இஸ்ரோ விண்ணில் ஏவியது.

இதையடுத்து ரிசோர்ஸ் சாட்-2 ஏ செயற்கைக் கோளை ஏவ இஸ்ரோ திட்டமிட்டது. இதனை 1,235 கிலோ எடையில், புவியைக் கண்காணிக்க மற்றும் தொலை உணர்வுக்காகத் தயாரித்துள்ளது.

இந்தச் செயற்கைக் கோள் பி.எஸ்.எல்.வி சி-36 ரொக்கெட் மூலம் ஸ்ரீஹரிக் கோட்டாவில் உள்ள சதீஸ்தவான் விண்வெளி நிலையத்தின் முதலாவது ஏவுதளத்தில் இருந்து, நேற்றுக் காலை விண்ணில் செலுத்தப்பட்டது. இதற்கான 36 மணி நேர கவுண்ட்டவுன் நேற்று முன்தினம் இரவு 10.25க்கு ஆரம்பித்தது.

இந்தச் செயற்கைக் கோள் புவியில் இருந்து 817 கி.மீ தூரத்தில் சுற்று வட்டப் பாதையில் நிலை நிறுத்தப் படும். 5 ஆண்டுகள் ஆயுள்காலம் கொண்ட இந்தச் செயற்கைக்கோள் மூலம், புவியில் உள்ள இயற்கை வளங்களைத் துல்லியமாகப் படம்பிடிக்க முடியும். 1994 மற்றும் 2016 க்கும் இடையில், பி.எஸ்.எல்.வி. 121 செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்திச் சாதனை படைத்துள்ளது, இதில், 79 செயற்கைக் கோள்கள் வெளிநாடுகளில் இருந்தும் 42 செயற்கைக் கோள்கள் இந்தியாவில் இருந்தும் செலுத்தியுள்ளது. (எ)


# கண்ணியில் சிக்கி இரு பொலிஸார் பலி!

அரண்பூர், டிசெ.08

இந்தியாவின் சத்தீஷ்கர் மாநிலத்தில் அரண்பூர்க் காட்டுப் பகுதியில் இடம்பெற்ற தேடுதல் நடவடிக்கையின் போது வீதியில் மாவோ யிஸ்ட்டுகள் புதைத்து வைத்திருந்த கண்ணிவெடியை வெடிக்கச் செய்ததில் 2 பொலிஸார் உயிரிழந்தனர். மேலும் இருவர் காயமடைந்தனர்.

காயமடைந்த இருவரும் விமானம் மூலமாக வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். அதைத் தொடர்ந்து மாவோயிஸ்ட்டுகளைத் தேடும் பணி இடம்பெற்றுவருவதாகத் தெரிவிக்கப் படுகின்றது. (எ)

# மறைந்த மூத்த பத்திரிகையாளர் சோவுக்கு மோடி உட்பட பிரபலங்கள் பலரும் இரங்கல்







சென்னை, டிசெ.08

மறைந்த மூத்த பத்திரிகையாளர் சோ. ராமசாமிக்கு திரைத்துறை பிரபலங்கள், அரசியல் தலைவர்கள், பத்திரிகையாளர்கள், பொது மக்கள் உள்ளிட்ட ஏராள மானவர்கள் அஞ்சலி செலுத்தினர். அத்துடன் தங்களின் இரங்கலையும் தெரிவித்தனர்.

'சோ' மறைவுக்கு பிரதமர் மோடி தனது டுவிட்டர் பக்கத்தில் இரங்கல் செய்தி வெளியிட்டுள்ளார் அதில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

வெளிப்படை தன்மையுடன் பழகக்கூடியவர் என்றும், சிறந்த அறிவாளி என்றும் குறிப்பிட்டுள்ளார். அவர் சிறந்த தேசியவாதி, பன்முகத் தன்மை கொண்டவர், அச்சமின்றிப் பேசக் கூடியவர் என்றும் புகழாரம் சூட்டியுள்ளார்.

எல்லாவற்றுக்கும் மேலாக, சோ.ராமசாமி தனது நெருங்கிய நண்பர் என்றும் கூறியுள்ளார். சோவை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், துக்ளக் வாசகர்களுக்கும் ஆழ்ந்த இரங்கல் தெரிவித் துள்ளார்.

## ரஜினிகாந்த் இரங்கல்

இதேவேளை மறைந்த மூத்த பத்திரிகையாளர் சோ உடலுக்கு நடிகர் ரஜினிகாந்த் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார். அதன்பின்னர் அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

''என் நெருங்கிய நண்பர் சோ.பத்திரிகைத்துறையின் ஜாம்பவான். யாருக்கும் பயப்படாதவர். எனக்குத் தெரிந்து அவர் பொய் சொல்லியதாக நான் கேள்விப்பட்டதும் இல்லை, பார்த்ததும் இல்லை. தமிழகம் மட்டுமல்லாமல் டில்லி வரை தனது தொடர்பை பரவலாக்கிக் கொண்டவர்.

மொரார்ஜி தேசாய், சந்திரசேகர், வாஜ்பாய், மோடி உட்பட பல பிரதமர்களுடன் நெருங்கிப்பழகியவர். அவரது இலக்கு சாதாரண மான ஒன்று இல்லை. யாருக்கும் பயந்து பேசவும் மாட்டார், எழுதவும் மாட்டார். அவரை இழந்து தவிக்கும் உறவினர்கள் மற்றும் வாசகர்களுக்கு எனது இரங்கல்களை தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று கூறினார். (எ)

### இந்தோனேசியாவில் அதிகாலைவேளை பயங்கரம்:

# அதிர்ந்து குலுங்கியது சுமத்திராவின் 'அச்சே'

## 54 பேர் பலி; இடிபாடுகளில் பலர் சிக்கி ஓலம்; தவிப்பு!!







ஜகார்த்தா, டிசெ.08

இந்தோனேசியாவின் சுமத்ராதீவை நேற்று மீண்டும் சக்திவாய்ந்த நிலநடுக்கம் தாக்கியது. இதில் 54 பேர் பலியாகினர். இடிபாடுகளுக்குள் சிக்கித் தவிக்கும் பலரை மீட்கும் பணி முழுவீச்சில் நடைபெறுகிறது.

சுமத்ராதீவில் அமைந் துள்ள அச்சே பகுதியை நேற்று அதிகாலை சக்தி வாய்ந்த நிலநடுக்கம் தாக்கியது. ரிச்டர் அளவு கோலில் 6.5 அலகுகளாக பதிவான நேற்றைய நில நடுக்கத்தால் பல வீடுகள் இடிந்து விழுந்தன. இடிபாடுகளுக்குள் சிக்கிக் கொண்ட மக்கள் மரண பீதியில் ஓலமிட்டனர்.

பெரும்பாலான இஸ்லாமிய மக்கள் வாழும் நாடான இந்தோனேசியாவில் நேற்று அதிகாலை தொழுகைக்காக பலர் தயாராகிக் கொண்டிருந்தனர். இதன்போது இந்த நிலநடுக்கம் ஏற்பட்டதால் பலர் தங்களது வீடுகளைவிட்டு வெளியில் ஓடி, வீதிகளில் தஞ்சம் அடைந்தனர். சுனாமி தாக்கலாம் என்ற அச்சத்தில் தங்களது வீடுகளுக்கு திரும்பிச் செல்ல பலர் தயக்கம் காட்டின.

அடுத்தடுத்து, ஐந்து முறை நில அதிர்வுகளும் ஏற்பட்டன. இதனால் வீடுகள் மட்டுமின்றி, கடைகள், மசூதிகள் உள்ளிட்ட பல கட்டடங்கள் மண் மேடாகிப் போயின. இடிபாடுகளுக்குள் சிக்கித் தவிக்கும் பலரை மீட்கும் பணி முழுவீச்சில் நடைபெறுகிறது.

நேற்றுக் காலை வெளியான தகவல்களின் படி, 18 சடலங்கள் கண் டெடுக்கப்பட்டன என்று தெரியவந்தது. காயம டைந்தவர்கள் அம்புலன்ஸ் மூலம் ஆஸ்பத்திரிகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்றுவரும் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் சாவு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என்று அஞ்சப்பட்டது.

எனினும் இந்த நில நடுக்கத்தால் 54 பேர் உயிரிழந்தனர் என்று உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை 2004 ஆம் ஆண்டில், 9.2 என்ற அளவில் தாக்கிய மிகவும் சக்திவாய்ந்த ஒரு நில நடுக்கத்தால் ஏற்பட்ட பேரழிவால் அச்சே மாகாணம் கடுமையாகப் பாதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ)



### 2016 ஆம் ஆண்டின் சிறந்த மனிதராக மோடி தெரிவு

வொஷிங்டன், டிசெ.08

2016 ஆம் ஆண்டின் சிறந்த மனிதராகப் பிரதமர் நரேந்திர மோடி, அமெரிக்காவின் 'ரைம்ஸ்' பத்திரிகை நடத்திய வாக்கெடுப்பில் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அந்தப் பத்திரிகையின் இணையத்தள வாசகர்கள் மத்தியில் இந்த வாக் கெடுப்பு நடத்தப்பட்டது. இந்த வாக்கெடுப்பில் கலந்து கொண்ட வாசகர்களில், 18 சத வீதமானோரின் வாக்குகளைப் பெற்று பிரதமர் நரேந்திர மோடி முதலிடத்தில் உள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், அமெரிக்க புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டிருக்கும் டிரம்ப், விக்கி லீக்ஸ் நிறுவுநர் ஜூலியன் அசாங்கே ஆகியோருக்கு 7 சதவீத வாக்குகளே கிடைத்தன.

முகநூல் நிறுவுநர் மார்க்பெக், அமெரிக்க முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சர் ஹிலாரி கிளிண் டன் ஆகியோருக்கு 2 சதவீத வாக்குகளே கிடைத்தன.

எனினும், நடப்பாண்டின் சிறந்த மனிதர் யார் என்பது குறித்து 'ரைம்ஸ்' நாளிதழ் ஆசிரியர்கள் இந்தவார இறுதியில் கூடி முடிவு எடுக்கவுள்ளனர். அதே நேரத்தில், இணையத்தள வாசகர்கள் மத்தியில் மோடியின் செல்வாக்கு அதிகரித்திருப்பதையே இந்த வாக் கெடுப்பு வெளிப்படுத்துகிறது. (எ)

## இஸ்ரேலில் சர்ச்சைக்குரிய சட்டம் அனுமதியளித்த நாடாளுமன்றம்

சர்ச்சைக்குரிய சட்டம் ஒன்றுக்கு இஸ்ரேல் நாடாளுமன்றம் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பலஸ்தீனப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் நிர்மாணிக்கப்பட்ட இஸ்ரேல் குடியிருப்புக்களுக்குச் சட்ட ரீதியான அங்கீகாரம் வழங்கும் வகையில் இந்தச் சட்டம் அமைந்துள்ளது.

மேற்குக் கரைப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இஸ்ரேல் குடியிருப்புக்களை சட்ட ரீதியானதாக்கும் வகையில் இந்தச் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல் அரசாங்கத்தின் இந்த சட்டத்துக்கு ஏற்கனவே சர்வதேச ரீதியில் கண்டணங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இஸ்ரேலின் இந்த உத்தேசச் சட்டம் காணிகளை அபகரிக்கும் வகையிலானது என்றும் இதனால் இரு நாடுகளுக்கும் இடையிலான பிரச்சினைகளை மேலும் வலுக்கச்செய்யும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனினும் இந்தச் சட்டம் இன்னமும் முழுமையான அள வில் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

## ஈரானுக்கு உளவு பார்த்ததால் 15 பேருக்கு தூக்குத் தண்டனை

டுபாய், டிசெ.08

ஈரானுக்காக உளவு பார்த்தார்கள் என்ற குற்றச்சாட்டில் 15 பேருக்கு சவூதி அரேபியா நீதிமன்றம் நேற்றுமுன் தினம் தூக்குத் தண்டனை விதித்தது.

ஈரான் நாட்டுக்காக உளவு பார்த்ததாக 30 பேரை சவூதி அரேபியா பொலிஸார் கைது செய்தனர். மேலும், ஒரு ஈரான், ஒரு ஆப்கன் நாட்டைச் சேர்ந்தவர்களும் இதே குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருந்தனர். இந்த வழக்கின் விசாரணை சவூதி அரேபியாவில் உள்ள நீதிமன்றம் ஒன்றில் நடைபெற்று வந்தது. 10 மாதங்களாக சுமார் 160 முறை விசாரணை நடைபெற்றது.

இந்த வழக்கில், ஈரானுக்காக உளவு பார்த்த குற்றச்சாட்டில் 15 பேருக்கு தூக்குத் தண்டனை விதித்துச் சவூதி அரேபியாநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

மீதமுள்ள 17 பேர் மீதுள்ள குற்றச்சாட்டு குறித்து நீதிமன்றம் இன்னும் எந்தவொரு கருத்தும் தெரிவிக்கவில்லை. அரச தரப்பு வழக்கறிஞர்கள் குற்றவாளிகளுக்கு எதிரான ஆதாரங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பித்ததைத் தொடர்ந்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (எ)

## மெக்சிக்கோவில் மோதல்; 14 பேர் சுட்டுக்கொலை

மெக்சிக்கோ, டிசெ.08

மெக்சிக்கோ நாட்டில் பொலிஸாருக்கும் ஆயுதம் ஏந்திய நபர்களுக்கும் இடையே நடைபெற்ற மோதலில் ஆயுதம் ஏந்திய நபர்கள் 14 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். மெக்சிக்கோவில் போதைப் பொருள் கடத்தல், வழிப்பறி, உள்ளிட்ட வன்செயல்களால் அதிக பாதிப்புக்குள்ளான வெராகுருஸ் மாகாணத்தில் நேற்று முன்தினம் பொலிஸாருக்கும் ஆயுதம் ஏந்திய நபர்களுக்கும் இடையே கடும் மோதல் இடம்பெற்றது.

ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மீது ஆயுதம் ஏந்திய நபர்கள் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து, பொலிஸார் அவர்களுக்குத்தக்க பதிலடி கொடுத்தனர். பொலிஸாருக்கு ஆதரவாக கடற் படை வீரர் களும் போரிட்டனர். இருதரப்புக்கும் இடையே நீண்ட நேரம் துப்பாக்கிச் சண்டை நடைபெற்றது. இதில் ஆயுதம் ஏந்திய நபர்கள் 14 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

பொலிஸாரின் தாக்குதலுக்கு ஈடு கொடுக்க முடியாமல் பலர் அருகில் உள்ள மலைப் பகுதிக்குள் தப்பி ஓடி விட்டனர். அவர்களைப் பிடிப்பதற்கான தேடுதல் வேட்டை முடுக்கிவிடப்பட்டு உள்ளது. (எ)

# கண்டாவளையில் மீள்குடியேறிய பகுதிகளை பார்வையிட்டனர் ஜப்பான் பிரதிநிதிகள்!

கிளிநொச்சி, டிசெ.08

கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜப்பானிய பிரதிநிதிகள் அடங்கிய குழுவினர் கண்டாவளை பிரதேசத்தில் கண்ணி வெடிகள் அகற்றப்பட்டு மக்கள் மீள்குடியேறியுள்ள பகுதிகளுக்குச் சென்று பார்வையிட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் டாஸ் கண்ணி வெடி அகற்றும் நிறுவனத்தால் பல்வேறு சர்வதேச நிறுவனங்களின் நிதியுதவியுடன் நிலக்கண்ணி வெடிகள் அகற்றப்பட்டு வருகின்றன.

2010 ஆம் ஆண்டு ஜப்பானிய அரசின் நிதியுதவியுடன் கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள மயில்வாகனபுரம் பிரமந்தனாறு பெரியகுளம் புளியம்பொக்கணை ஆகிய பகுதிகளில் பயிர்ச் செய்கை நிலங்கள் மற்றும் குடியிருப்பு காணிகள் என்பவற்றில் வெடி பொருள்கள் அகற்றப்பட்டு மக்களின் பயிர்ச் செய்கைகளுக்கு மீள்குடியேற்றத்துக்கும் கையளிக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில் கிளிநொச்சி விஜயம் செய்துள்ள இலங்கைக்கான ஜப்பானிய பிரதிநிதி மிசா கோ தகாயமா தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் முற்பகல் 11.30 மணிக்கு மயில்வாகனபுரம் பிரமந்தனாறு குளக்கட்டு ஆகிய பகுதிகளுக்குச் சென்று பார்வையிட்டு மக்களுடன் கலந்துரையாடினர். தொடர்ந்து மயில்வாகனபுரம் பாடசாலை பெரியகுளம் புளியம்பொக்கணை ஆகிய பகுதிகளுக்கும் விஜயம் செய்து நிலைமைகளை பார்வையிட்டதுடன் பொது மக்களுடனும் கலந்துரையாடியுள்ளனர். (எ)



## விபத்தில் சிக்கிய முதியவர் சாவு

யாழ்ப்பாணம், டிசெ.08

நல்லூர்ப்பின் வீதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் காயங்களுக்குள்ளான முதியவர் யாழ் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் இரவு உயிரிழந்தார்.

கலாசாலை வீதி, திருநெல்வேலியைச் சேர்ந்த முத்தையா சண்முகராஜா (வயது 78) என்ற முதியவரே சிகிச்சை பலனின்றி உயிரிழந்தவராவார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நல்லூரில் இருந்து வீட்டுக்கு செல்லும்போது விபத்து இடம்பெற்றது.

வீதியைக் கடப்பதற்கு மத்திய வீதியில் காத்திருந்த போது எதிர்த்திசையில் இருந்து வந்த மோட்டார் சைக்கிள் இவரை சடுதியாக மோதியது. வயோதிபர் மோட்டார் சைக்கிளுடன் 50 மீற்றர் தூரத்திற்கு இழுத்து செல்லப்பட்ட நிலையில் தலையில் காயங்களுக்கு உள்ளாகியிருந்தார். யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் இரவு உயிரிழந்துவிட்டார். இறப்பு விசாரணைகளை வைத்தியசாலையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனையின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (இ-9)

## வேம்பிராய் ஞானகோட்டத்தில் திருவருட்பா ஓதுதல்

மீசாலை, டிசெ.08

உலகில் அமைதியும், சாந்தியும், சமாதானமும் ஏற்படும் பொருட்டு திருவருட்பா ஓதுதலும், திருவாசகம் முற்றும் ஓதுதலும் எதிர்வரும் 16ஆம் திகதி முதல் ஜனவரி மாதம் 13ஆம் திகதி வரையும் அதிகாலை 4.30 மணி முதல் காலை 7 மணி வரை மீசாலை வடக்கு வேம்பிராயில் உள்ள சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞானக் கோட்டத்தில் இடம் பெறும்.

இந்தத் திருவாசகம் ஓதுதலில் கலந்து கொள்பவர்களுக்கு பசியாற்றுவித்தலும், தங்குமிட வசதியும், இதர ஒழுங்குகளும் செய்து தரப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தைப்பூச விழாவை முன்னிட்டு இந்த உலகத்தில் போதைப் பொருளுக்கும் மது மாமிசத்துக்கும் அடிமைகளாகி உள்ள அனைவருக்கும் விழிப்புணர்வை ஊட்டும் முகமாக எதிர்வரும் பெப்ரவரி மாதம் 8,9,10 ஆகிய திகதிகளில் வாழ்வியற்பயிற்சி முகாமும் சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞானக் கோட்டத்தில் இடம்பெறவுள்ளன. (இ-7)

# எட்டரை லட்சம் லீற்றர் கள்ளை மண்டித் தீர்த்த 'பெருங்குடி'கள்

## வவுனியாவில் 10 மாதங்களில் மட்டும்

வவுனியா, டிசெ.08

வவுனியாவில் கடந்த ஜனவரி தொடக்கம் ஒக்ரோபர் வரையிலான 10 மாத காலப் பகுதியில் 8 இலட்சத்து 41 ஆயிரத்து 507 லீற்றர் கள்ளு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

லொறி லொறியாக வந்திறங்கும் போத்தல் கள்ளு விற்பனை தொடர்பில் கேட்டபோதே திணைக்களத்தினர் இதனைத் தெரிவித்தனர்.

வவுனியா மாவட்டத்தில் போத்தலில் அடைக்கப்பட்ட கள்ளு விற்பனை ஜூன், ஜூலை, ஓகஸ்ட், செப்ரெம்பர் காலப் பகுதிகளில் அதிகளவு விற்பனை செய்யப்பட்டுள்ளதாகவும், இதன்படி கடந்த ஜனவரி தொடக்கம் செப்ரெம்பர் வரையிலான 9 மாத காலப்பகுதியில் 3 இலட்சத்து 59 ஆயிரத்து 926 லீற்றர் போத்தல் கள்ளு விற்பனையாகியுள்ளது.

இதுதவிர, உடன் கள்ளு கடந்த ஜனவரி தொடக்கம் ஒக்டோபர் வரையிலான 10 மாத காலப்பகுதியில் 4 இலட்சத்து 81 ஆயிரத்து 581 லீற்றர் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இதன்படி வவுனியா மாவட்டத்தில் இவ்வாண்டின் முதல் 10 மாதங்களில் 8 இலட்சத்து 41 ஆயிரத்து 507 லீற்றர் கள்ளு விற்பனையாகியிருக்கிறது எனவும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இவ்வாண்டின் முதல் 10 மாதங்களில் வவுனியாவில் 13 இலட்சத்து 28 ஆயிரத்து 505 லீற்றர் மதுபானம் விற்பனையாகியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (இ-100)

# மாளிகாவத்தை மையவாடிக் காணி அபகரிப்புக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

கொழும்பு. டிசெ.08

மாளிகாவத்தை மைய வாடிக் காணியை தனியார் நிறுவனம் ஒன்றுக்கு ஆக்கிரமிப்புச் செய்து கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்படுவது தொடர்பாக கொழும்பு மாநகரசபை ஆணையாளருக்கு எதிராக எதிர்வரும் 16 ஆம் திகதி மாநகரசபை கட்டடத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

அன்றையதினம் ஜும்ஆ தொழுகையை அடுத்து நடைபெறவுள்ள இந்த ஆர்ப்பாட்டத்தை இலங்கை முஸ்லிம் மத உரிமைகள் சங்கம் மற்றும் மாளிகாவத்தை மஸ்ஜித் சம்மேளனம் என்பன ஏற்பாடு செய்துள்ளன.

கொழும்பைச் சேர்ந்த ஏனைய பள்ளிவாசல்களின் ஜமா அத்தார்களும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளனர்.

மாளிகாவத்தை மைய வாடி காணி தனியார் ஒருவரால் ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டுள்ளதற்கு எதிராக 2016 ஏப்ரல் மாதம் அப்போதைய மாநகரசபை முதல்வர் முஸம்மிலினால் மாவட்ட நீதிமன்றில் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டு விசாரணைகள் இடம் பெற்றன.

இந்த வழக்கின் தீர்ப்பு வழங்குவதற்கு திகதி குறிப்பிடப்பட்டிருந்த நிலையில் மாநகர சபையின் ஆணையாளர் வழக்கை வாபஸ் பெற்றிருந்தார்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் இடம்பெறவுள்ளதுடன், தற்போது மையவாடிக் காணிக்கு அருகில் உள்ள மின்மாற்றி ஒன்றை இலங்கை மின்சாரசபை அகற்றி மையவாடி காணிக்குள் நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் மாநகரசபை ஆணையாளர் வி.கே.ஏ. அநுரவுக்கு எதிராக இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ)

# மன்னாரில் நேற்று நடைபெற்ற எயிட்ஸ் விழிப்புணர்வுப் பேரணி




மன்னார், டிசெ.08

இலங்கையில் எயிட்ஸ் இல்லாதொழிக்க அணி திரள்வோம் என்ற தொனிப் பொருளில் மன்னாரில் நேற்று விழிப்புணர்வுப் பேரணி நடைபெற்றது.

மாவட்ட பாலியல் நோய் மற்றும் எயிட்ஸ் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இந்த விழிப்புணர்வுப் பேரணி இடம்பெற்றது. இந்தப் பேரணி மன்னார் சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையிலிருந்து புறப்பட்டு மன்னார் நகரூடாக வலம் வந்து மீண்டும் புறப்பட்ட இடத்தை அடைந்தது.

மன்னார் பொது வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி றஜனி அன்ரன் சிசில், வைத்திய கலாநிதிகள் எஸ்.ஈ. பிரியதர்சன், ஏ.ஏ.சிசில், றோய் பீரிஸ், வட மாகாண சபை உறுப்பினர் ரிவ்கான் பதியுதீன் ஆகியோர் உட்பட முந்நூறுக்கும் மேற்பட்ட சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள், பணியாளர்கள், இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் ஆகியோரும் இதில் கலந்து கொண்டு விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக பதாகைகளையும் ஏந்திச் சென்றனர். (எ-112)

# ஐக்கிய 'பி' அணியை வீழ்த்தி இரண்டாவது அணியாக அரையிறுதிக்குள் நுழைந்தது முனை சென். தோமஸ் அணி



பருத்தித்துறை, டிசெ.08

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் கபடிச் சுற்றுத் தொடரில், முனை சென். தோமஸ் 'பி' அணி ஐக்கியம் 'ஏ' அணியை வீழ்த்தி அரை இறுதிக்குள் நுழைந்துள்ளது.

வடமராட்சி கபடி சங்கத்தின் அனுமதியுடன் பருத்தித்துறை நகர அபிவிருத்தி சங்கம் - சுவிஸ் அனுசரணையில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் கபடிச் சுற்றுப் போட்டித் தொடரை நடத்தி வருகிறது.

மின்னொளியில் லீக் முறையில் நடாத்தும் கபடிச் சுற்றுப்போட்டித் தொடர் கடந்த மாதம் 09 ஆம் திகதி ஆரம்பமாகியது. இப்போட்டியில் 'ஏ' பிரிவில் ஐந்து கழகங்களும் 'பி' பிரிவில் ஐந்து கழகங்களும் போட்டியிடுகின்றன.

இந்தக் கபடிச் சுற்றுத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற போட்டி ஒன்றில், முனை சென். தோமஸ் 'பி' அணியும் பருத்தித்துறை ஐக்கிய 'ஏ'அணியும் மோதிக் கொண்டன.

அரையிறுதிப் போட்டிக்குள் நுழையும் அணியைத் தீர்மானிக்கும் போட்டியாக இது அமைந்திருந்தது. விறுவிறுப்பாக ஆரம்பித்த போட்டியில் இரு அணிகளும் ஆரம்பத்தில் தற்காப்பு ஆட்டத்தை வலுப்படுத்திக் கொண்டு நகர்ந்தன.

பின்னர் இரண்டு புள்ளிகளைப் பெற்று ஐக்கிய 'ஏ' அணி விளையாட்டைச் சூடு பிடிக்கச் செய்தது.

அதற்குப் பதிலடிகொடுக்கும் முகமாக சென்.தோமஸ் 'பி'அணியும் உடனடியாக இரண்டு புள்ளிகளை, பெற்றுச் சமப்படுத்தியது.

ஆயினும் ஐக்கியம் 'ஏ' அணி தங்கள் ஆதிக்கத்தை வலுப்படுத்தி முதல்பாதி ஆட்டத்தைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் 10:09 என்ற புள்ளி அடிப்படையில் வைத்து முடிவு செய்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் சென். தோமஸ் 'பி' அணி, விளையாட்டை தம்பக்கம் இழுக்கும் என்று எதிர்பார்த்த ரசிகர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

ஐக்கிய 'ஏ''அணியின் பக்கமே பலம் ஓங்கிக் கொண்டிருந்தது. இதனால் ஐக்கிய 'ஏ' 22 புள்ளிகளை பெற்று மேலும் முன்னேறியது.

இருப்பினும் சென். தோமஸ் 'பி' அணி சோர்வடையாது நிலமைகளை நன்கு அவதானித்து தன் விளையாட்டு நுட்பத்தை திடீரென மாற்றிக் கொண்டது. இறுதியாகப் போட்டி முடிவுக்குவரும் போது இரு அணிகளும் 25 :25 என்ற புள்ளிகள் பெற்றுக் கொண்டதனால் சென்.தோமஸ் 'பி' அணி இரண்டாமிடத்துடன் அரை இறுதிக்குள் நுழைய ஐக்கியம் 'ஏ' மூன்றாமிடத்துடன் அரை இறுதிக்குள் நுழைந்தது.

இந்தக் கபடிப் போட்டியின் சிறந்து விளையாட்டு வீரராக சென். தோமஸ் 'பி' அணியின் வீரர் அ. அஜித் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

## ஆசிரியர்களுக்கு இடையிலான பூப்பந்தாட்டப் போட்டி முடிவுகள்

சுன்னாகம், டிசெ.08

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் 200 ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு ஆசிரியர்களுக்கிடையில் தேசிய ரீதியில் நடத்தப்பட்ட பூப்பந்தாட்டத் தொடரின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

ஆண்களுக்கான ஒற்றையர் ஆட்டத்தில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த அருட்சகோதரர் மனோரஞ்சிதன் முதலாமிடத்தினையும், அதே மாவட்டத்தின் அருண் இரண்டாமிடத்தினையும், யாழ். மாவட்டத்தின் ஜெ.மோகன் மூன்றாமிடத்தினையும் பெற்றுள்ளனர்.

பெண்களுக்கான ஒற்றையர் ஆட்டத்தில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி ஹரிகரன் முதலாமிடத்தினையும், சிறி மைதிலி இரண்டாமிடத்தினையும், திருமதி சுரேந்திரன் மூன்றாமிடத்தினையும் பெற்றுக்கொண்டனர்.

ஆண்களுக்கான இரட்டையர் ஆட்டத்தில் அருட்சகோதரர் மனோரஞ்சிதன் - அருண் இணை முதலாமிடத்தினையும், மோகன் - கிங்ஸ்லி இணை இரண்டாமிடத்தினையும், யாழ்நிதி - ஜெகன் இணை மூன்றாமிடத்தினையும் பெற்றுக் கொண்டார்கள்.

பெண்களுக்கான இரட்டையர் ஆட்டத்தில் சிறி மைதிலி - திருமதி ஹரிகரன் இணை முதலாமிடத்தினையும், திருமதி பிறேமலதா - திருமதி சுரேந்திரன் இணை இரண்டாவது இடத்தினையும், பெற்றுக் கொண்டனர்.

கலப்பு இரட்டையர் ஆட்டத்தில் ஜெ.மோகன் - திருமதி ஹரிகரன் இணை முதலாமிடத்தினையும் அருட்சகோதரன் மனோரஞ்சிதன் - சிறி மைதிலி இணை இரண்டாமிடத்தினையும் யாழ்நிதி - பிறேமலதா இணை மூன்றாமிடத்தினையும் பெற்றுக்கொண்டனர்.

(க-54)

## யாழ். மாவட்ட துடுப்பாட்ட அணி தெரிவு

யாழ்ப்பாணம், டிசெ.08

யாழ். மாவட்டத்தின் துடுப்பாட்ட அணியைத் தெரிவு செய்வதற்கான பயிற்சிப் போட்டிகள் எதிர்வரும் சனிக்கிழமை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்குப் பதிவு செய்யப்பட்ட வீரர்கள் அனைவரும் காலை8.30 மணிக்கு யாழ்ப்பாணக் கல்லூரிக்குச் சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

பதிவு செய்யாத வீரர்கள் அன்றைய தினம் பதிவுகளை மேற்கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மன்னார் எவர் கிறீன் கபடிக் கிண்ணத்தை முனை சென். தோமஸ் 'ஏ' அணி வென்றது!





மன்னார், டிசெ.08

மன்னார் எவர் கிறீன் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியில் நடாத்திய மாபெரும் கபடிப் சுற்றுப் பாட்டியில் பருத்தித் துறை முனை - சென். தோமஸ் 'ஏ' அணி வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது.

இக் கபடிச் சுற்றுப் போட்டி நேற்று முன்தினம் கடந்த மன்னார் பொது விளையாட்டரங்கில் நடைபெற்றது. இப்போட்டியில் மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாண போன்ற மாவட்டங்களிலிருந்து இருந்து 15 கழகங்கள் பங்குபற்றின.

இக் கபடிச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி பருத்தித்துறை - முனை சென். தோமஸ்'ஏ' அணிக்கும் பருத்தித்துறை - முனை சென். தோமஸ் 'பி' அணிக்கும் இடையில் நடைபெற்றது.

இப் போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண அமைச்சர் பாலசுப்பிரமணியம் டெனிஸ்வரன் கலந்து கொண்டார்.

ரசிகர்களின் கரகோசங்களுடனும் ஆதரவுகளுடன் களமிறங்கிய இரு அணிகளும் ஒன்றுக் கொன்று கடுமையாகப் போட்டியிட்டன.


இறுதியாகப் போட்டி முடிவுக்கு வரும் போது சென். தோமஸ் 'ஏ' அணி 20:16 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

எனவே, சென். தோமஸ் 'ஏ' அணி முதலாமிடத்துக்கான கிண்ணத்தை வெல்ல, சென். தோமஸ் 'பி' அணி இரண்டாமிடத்துக்கான கிண்ணத்தை வென்றது.

இப்போட்டியின் சிறந்த எதிர் ஆக்கிரமிப்பாளராக சென். தோமஸ் 'ஏ' அணியின் தலைவர் யூட் சுலக்சனும். சிறந்த ஆக்கிரமிப்பாளராக அருண் ராஜனும் தெரிவு செய்யப்பட்டனர்.

# இங்கிலாந்துக்கு எதிரான 4 ஆவது டெஸ்ட் இன்று:

# இந்தியா ஹட்ரிக் வெற்றி பெறுமா?



மும்பை, டிசெ.08

விராட் கோஹ்லி தலைமையிலான இந்திய அணி இங்கிலாந்துக்கு எதிராக இன்று இடம்பெறும் 4 ஆவது டெஸ்ட் போட்டியில் ஹட்ரிக் வெற்றி பெறுமா? என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அலஸ்டர் குக் தலைமையிலான இங்கிலாந்து கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. 5 போட்டி கொண்ட டெஸ்ட் தொடரில் 3 போட்டிகள் நடந்து முடிந்துள்ளன.

ராஜ்கோட்டில் இடம் பெற்றமுதல் டெஸ்ட் போட்டி சமநிலையில் முடிவடைந்தது. விசாகப்பட்டினத் தில் இடம்பெற்ற 2 ஆவது டெஸ்டிலும், மொகாலியில் நடந்த 3 ஆவது டெஸ்டிலும் இந்தியா வெற்றி பெற்றது. இதனால் இந்தியா 2-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

4 ஆவது டெஸ்ட் போட்டி மும்பை வான்கடே மைதானத்தில் இன்று தொடங்குகிறது.

விராட் கோஹ்லி தலைமையிலான இந்திய அணி கடந்த போட்டிகளில் சிறப்பாக விளையாடியது. துடுப்பாட்டத்தில் கோஹ்லி, பார்த்தீப் பட்டேல், புஜாரா ஆகியோர் நல்ல நிலையில் உள்ளனர். முதல் டெஸ்டில் சதம் அடித்த முரளி விஜய் அடுத்த 2 டெஸ்டில் ஓட்டங்களைக் குவிக்கவில்லை. இதுபோல் ரகானேவின் ஆட்டமும் சிறப்பாக இல்லை. இதனால் இருவரும் திறமையை நிரூபிக்கும் கட்டாயத்தில் உள்ளனர்.

பந்து வீச்சைப் பொறுத்தவரை சுழற்பந்து வீச்சாளர் அஸ்வின் முதுகெலும்பாக திகழ்கிறார். மேலும், ரவீந்திர ஜடேஜா, ஜெயந்த் யாதவ், வேகப்பந்து வீச்சாளர்கள் முகமது சமி, உமேஷ் யாதவ் ஆகியோர் நல்ல நிலையில் உள்ளனர். துடுப்பாட்டம், பந்து வீச்சு இரண்டிலும் இந்திய அணி சம பலத்துடன் திகழ்கிறது.

இதனால், 4 ஆவது டெஸ்ட் போட்டியில் வெற்றி பெற்றுத் தொடரை கைப்பற்றும் முனைப்பில் இந்தியா உள்ளது. இந்திய அணி ஹாட்ரிக் வெற்றி பெறுமா? என்ற ஆவலுடன் இந்திய ரசிகர்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

இங்கிலாந்து அணி வீரர்கள் இந்திய சுழற்பந்து வீச்சைச் சமாளிக்க முடியாமல் திணறி வருகிறார்கள். இதிலிருந்து மீண்டு வர இங்கிலாந்து வீரர்கள் தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார்கள். 4 ஆவது டெஸ்டிலும் தோற்றால் தொடரை இழக்கும் நிலை ஏற்படும். இதனால் இங்கிலாந்து வீரர்கள், வெற்றி பெற கடுமையாக போராடு வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## உயிர்தப்பிய மெஸ்ஸி!

பொயனஸ், டிசெ.08

கடந்த மாதம் விபத்தில் சிக்கிய கொலம்பிய விமானத்தில் ஆர்ஜென்டினா உதைபந்து அணி வீரர்கள் பயணம் செய்து உயிர்தப்பிய சம்பவம் தற்போது தெரியவந்துள்ளது.

கடந்த நவம்பர் 11 ஆம் திகதி மெஸ்ஸி உட்பட ஆர்ஜென்டினா அணி வீரர்கள் இதே விமானத்தில் உலகக்கிண்ணத் தகுதிப் போட்டியை விளையாடி விட்டுப் பிரேசிலில் இருந்து ஆர்ஜென்டினா தலைநகர் பொயனஸ் அரைஸ்க்குப் புறப்பட்டனர்.

விமானத்தில் எரிபொருள் முழுமையாக நிரப்பப்பட்ட பின்னர் விமானத்தால் 4 மணி 22 நிமிடம் மட்டுமே பறக்க முடிந்துள்ளது.

சரியாக விமானம் தரையிறங்கும் போது விமானத்தில் கோளாறு ஏற்பட்டுள்ளது. இருப்பினும் விமானம் பத்திரமாக தரையிறக்கப்பட்டதால் அனைவரும் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பியுள்ளனர். இந்த விமானம் தான் நவம்பர் 28 ஆம் திகதி விபத்தில் சிக்கி 76 பேரின் உயிரைப் பறித்துள்ளது.

## வோர்னர் சாதனை!



கான்பரா, டிசெ.08

ஒருநாள் கிரிக்கெட்டில் ஒரே ஆண்டில் அதிக சதங்கள் அடித்த ஆஸ்திரேலிய வீரர் என்ற சாதனையை டேவிட் வோர்னர் படைத்துள்ளார்.

ஆஸ்திரேலியா- நியூஸிலாந்து அணிகள் மோதிய இரண்டாவது ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதில் 116 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஆஸ்திரேலியா வெற்றிபெற்றது.

இந்தப் போட்டியில், ஆஸ்திரேலிய அணி வீரரான டேவிட் வோர்னர் புதிய சாதனை படைத்துள்ளார்.

இந்த ஆண்டில் மட்டும் 22 போட்டிகளில் விளையாடி 6 சதம், 4 அரைச்சதம் உட்பட 1232 ஓட்டங்களை அவர் எடுத்துள்ளார்.

இதன்மூலம் ஒரே ஆண்டில் ஒருநாள் போட்டிகளில் அதிக ஓட்டங்கள் எடுத்த வீரர் என்ற சாதனையைப் படைத்துள்ளார். இதற்கு முன்பாக ரிக்கி பொண்டிங்(இரண்டு முறை 2003, 2007 ஆம் ஆண்டு), மேத்யூ ஹைடன் (2007) 5 சதங்கள் அடித்ததே சாதனையாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

## விமான விபத்தில் உயிரிழந்த வீரர்களின் செப்போகொன்சே கழகம் சம்பியனானது





பிரேசில், டிசெ.08

தென்னமெரிக்க உதைபந்தாட்ட கூட்டு சம்மேளனத்தினால் பிரேசில் கால்பந்தாட்டக் கழகமான சேப்போகொன்சே கழகத்திற்கு கோபா சுடா வெற்றிக் கிண்ணம் வழங்கப்பட்டுள்ளது.

கொலம்பியாவில் நடைபெறவிருந்த முதலாம் கட்ட இறுதிப் போட்டியில் விளையாடுவதற்காக இக் கழகத்தின் வீரர்கள் பயணித்துக்கொண்டிருந்த விமானம் விபத்திற்குள்ளானதில் அணியின் பெரும்பாலான வீரர்கள் உயிரிழந்தனர்.

இதனை அடுத்து சேப்போகொன்சே கழகத்திற்கு சம்பியன் பட்டத்துடன் வெற்றிக் கிண்ணத்தை வழங்குமாறு அதன் எதிரணியான அத்லெட்டிகோ நெஷனல் விடுத்த கோரிக்கையை தென்னமெரிக்க உதைபந்தாட்ட கூட்டு சம்மேளனம் நிறைவேற்றியது.

அதேவேளை, அத்லெட்டிகோ நெஷனல் கழகத்தின் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையை மதிக்கும் வகையில் அக் கழகத்திற்கு நேர்த்தியான விளையாட்டுக்குரிய விருதை தென்னமெரிக்க உதைபந்தாட்ட கூட்டு சம்மேளனம் வழங்கியது.

சேப்போகொன்சே கழகத்திற்கு 2 மில்லியன் அமெரிக்க டொலர்களும் அத்லெட்டிகோ நெஷனல் கழகத்திற்கு 1 மில்லியன் அமெரிக்க டொலர்களும் பணப்பரிசாக வழங்கப் படவுள்ளது.

இந்த விமான விபத்தில் உயிர்தப்பிய அறுவரில் மூவர் செப்போகொன்சே கழகத்தைச் சேர்ந்த வீரர்களாவர்.

விபத்தில் பலியான வீரர்களது இறுதி ஆராதனைகள் கடந்த சனிக்கிழமை நடைபெற்றபோது ஏராளமானோர் கலந்து கொண்டு தங்களது அனுதாபங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

இதேவேளை, இக்கழகத்தில் உறுப்புரிமை பெறுவதற்காக இரண்டே தினங்களில் 13,000 பேர் விண்ணப்பித்துள்ளனர்.

செப்போகொன்சே கழகத்திற்குத் தங்களது வீரர்களை இரவல் கொடுக்கப் பிரேசிலில் தேசத்தின் முன்னணி உதைபந்தாட்டக் கழகங்கள் உறுதி வழங்கியுள்ளன.

அத்துடன் செப்போகொன்சே கழகம் மூன்று வருடங்களுக்கு தரமிறக்கப் படக்கூடாது என்ற கோரிக்கையையும் அக்கழகங்கள் முன்வைத்துள்ளன.

– வித்தியா கொலை வழக்கு –

# 10 ஆவது சந்தேக நபரின் பிணை மனு நிராகரிப்பு

புங்குடுதீவு மாணவி கொலை வழக்கில் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 10ஆவது சந்தேக நபரின் பிணை விண்ணப்பத்தை நிராகரித்த யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன், அவரைத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

மேற்படி வழக்கின் 10 ஆவது சந்தேக நபரான பி.ராஜ்குமார் கைதுசெய்யப்பட்டு எதிர்வரும் 20ஆம் திகதியுடன் ஒரு வருடம் பூர்த்தியாகின்றது. இதனால், அவரை பிணையில் விடுதலை செய்யுமாறு நேற்று அவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி மன்றில் விண்ணப்பம் செய்திருந்தார்.

அந்த விண்ணப்பத்தை நிராகரித்த நீதிபதி, சந்தேக நபரின் விளக்கமறியல் காலத்தினை ஜனவரி 4 ஆம் திகதி வரை நீடித்து உத்தரவிட்டார். இது தொடர்பில் ஊர்காவற்துறை நீதிமன்றிற்கு அறிவித்தல் அனுப்புமாறும் நீதிமன்றப் பதிவாளருக்கு உத்தரவிடப்பட்டது. (ம-09

## யுத்தம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகப் பேச்சாளராக இருந்த போது யுத்தம் மாவிலாறில் ஆரம்பமாகின்றது என்ற உத்தியோக பூர்வ அறிவிப்பை வெளியிட்டிருந்தேன். என்னை நாடாளுமன்ற விறாந்தையில் சந்தித்த சம்பந்தன் "நாம், நீங்கள் விடுத்த யுத்த அறிவிப்புக் குறித்து மகிழ்ச்சி அடைகின்றோம். விரைவாகத் தமிழீழத்தைப் பெற்று விடுவோம்" என என்னிடம் கூறியிருந்தார். இது உண்மையான விடயம். அவர் அதனை மறுக்க மாட்டார்.

அதேநேரம் மற்றொரு விடயம். 2005 இல் யுத்தம் ஆரம்பிக்கப்பட்டமை குறித்து தமிழினி தனது நூலில், அந்த ஆண்டு நடைபெற்ற தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ வெல்வதற்கு உதவி செய்ய வேண்டும் எனப் பிரதேசத் தலைவர்களுக்குப் பிரபாகரன் உத்தரவிட்டார் எனக் குறிப்பிட்டுள்ளார்.

அதாவது, மஹிந்த ராஜபக்ஷ யுத்த மனநிலையைக் கொண்டவர். ஆகையால், அவரை வெற்றியடையச் செய்யவேண்டும். அப்போதுதான், யுத்தத்துக்கு வருவார். யுத்தத்தில் ஈழத்தைப் பெற்றுவிடலாம் என்ற நோக்கிலேயே அன்று வாக்களிக்க விடாமல் தடுத்தனர்.

நாட்டைப் பிளவுபடுத்த ஆதரவு வழங்கப்போவதில்லையென சுதந்திரக் கட்சி அமைச்சர்கள் மகாநாயக்க தேரர்களிடம் உறுதியளித்திருக்கிறார்கள். ஆனால், அரசமைப்பின் ஊடாக நாட்டைத் துண்டாட முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. அவ்வாறு இல்லையேல் எதற்காக அவசரமாக அரசமைப்பை உருவாக்க முயற்சிக்கின்றார்கள்?

நேர்மையான, உண்மையான நோக்கத்துக்காக அரசமைப்பு உருவாக்கப்படுகின்றது என்றால் அனைவருடனும் கலந்துரையாடுவதற்கு சற்றுக் காலம் எடுத்துக்கொள்ளலாம் அல்லவா? – என்றார் அவர். (உ)

## வடக்கு...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

எது சரி என்பதை ஆராய்ந்து பார்த்து தெளிவுபடுத்த வேண்டியது அவை தலைவருக்கு உண்டு.

இந்த விடயத்தை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தங்களுள்ளேயே தீர்த்துக்கொள்ளாமல் இந்த அவையிலேயே இது தொடர்பாக விவாதிப்பது என்பது பெறுமதி அற்றது.

முன்னர் எதிர்க்கட்சி தலைவர் நியமனத்தின் போது அக்கட்சியாளரே தமக்குள்ள முடிவுகளை எடுத்து இச்சபையிலேயே தெரிவித்தார்கள். அது பிரச்சினை இல்லாமல் இருந்தது.

இம் முறை எதிர்க்கட்சித் தலைவர் தெரிவு தொடர்பில் இச்சபைக்கு விடையம் கொண்டு வரப்பட்ட நிலையில் சூழ்நிலை கருதி பொறுப்புடன் தீர்ப்பு வழங்கி முடிவு எடுக்க வேண்டிய பொறுப்பும் அதிகாரமும் அவைத் தலைவருக்கு உள்ளது. அந்த வகையில் நடு நிலையில் நின்று ஜனநாயக வழியிலே நின்று அந்த தீர்ப்பை நான் வழங்கி இருக்கின்றேன்.

அந்த தீர்ப்பில் இருந்து விலகுவதற்கான எந்த ஒரு காரணத்தையும் நான் பார்க்கவில்லை– என்றார். (உ-10)

## குளத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னரே திருமணம் நடைபெற்றதாகக் கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

உயிரிழந்த கவிப்பிரியா கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரமத்தில் தங்கியிருந்து கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் கல்வி கற்பவர். தற்போது விடுமுறையில் வீட்டுக்குச் சென்ற அவரும் அவரது சகோதரியும் சகோதரியின் கணவனும் ஆனைவிழுந்தான் குளத்தில் நீராடச் சென்றனர் எனக் கூறப்படுகின்றது.

அங்கு நின்ற மீன்பிடிப் படகு ஒன்றில் ஏறி குளத்தைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டபோது படகு கவிழ்ந்து இவர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நீரில் மூழ்கிய இவர்கள் மீட்கப்பட்டு அக்கராயன் பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். அவர்கள் ஏற்கனவே உயிரிழந்துவிட்டனர் என வைத்தியர்களால் தெரிவிக்கப்பட்டது.

இவர்களின் சடலங்கள் பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளின் பொருட்டு அக்கராயன் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக அக்கராயன் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-40-70)

## சோ காலமா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னதாக சோ மூச்சுத் திணறல் காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். பின்னர் ஏற்பட்ட மாரடைப்பால் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார். மறைந்த முதல்வர் ஜெயலலிதாவின் நெருங்கிய நண்பரான சோ ஜெயலலிதாவின் உடல் நேற்றுமுன்தினம் நல்லடக்கம் செய்யப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

சோ .ராமசாமி 1934 ஒக்ரோபர் 5இல் சென்னையில் சிறீநிவாசன்–ராஜம்மாள் தம்பதியிருக்கு மகனாகப் பிறந்தார். இவருக்கு ஒரு மகனும் ஒரு மகளும் உள்ளனர்.

பத்திரிகையாளர், நாடக, சினிமா நடிகர், வழக்கறிஞர், திரைப்பட இயக்குனர் எனப் பன்முகத்துறையில் திறமை பெற்றவராக சோ விளங்கினார். 'துக்ளக்' என்ற பிரபல அரசியல் வார இதழை கடந்த 1970ஆம் ஆண்டிலிருந்து நடத்தி வந்தார். 1999 முதல் 2005 வரை மாநிலங்களவை உறுப்பினராகப் பணியாற்றியிருந்தார்.

பத்திரிகைத் துறையின் சிறந்த சேவைக்காக 1985 இல் 'மஹாரான மேவார்' வழங்கிய ஹால்டி காட்டி விருதும், 1986 இல் வீரகேசரி விருதும், 1994 ஆம் ஆண்டு கோயங்கா விருதும், 1998 இல் நச்சிக்கேதஸ் விருதும் இவருக்குக் கிடைத்தன.

## 5 பிரதம...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதவிகளை அலங்கரித்தோர் தமது பதவிகளைத் துஷ்பிரயோகம் செய்து, அதன் மூலம் நீதித்துறை ஊழல் புரிந்திருக்கின்றனர் என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது எனக் கூறியுள்ள அவர், நீதித்துறையில் ஊழல் புரிவதும் 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க லஞ்சச் சட்டத்தின் கீழ் கிரிமினல் குற்றமாகக் கருதித் தண்டிக்கப்படக்கூடியது என்பதையும் தமது மனுவில் சுட்டிக் காட்டியுள்ளார்.

முன்னாள் பிரதம நீதியரசர்களான சரத் என் சில்வா, ஷிராணி பண்டாரநாயக்கா, மொஹான் பீரிஸ், பாரிந்த ரணசிங்க மற்றும் தற்போதைய பிரதம நீதியரசர் கே.ஸ்ரீபவன் ஆகியோர் மீதே அவர் நீதித்துறை ஊழல் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியிருக்கின்றார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்குச் சார்பாகத் தாம் தீர்ப்பு வழங்கியமை தொடர்பாக தன்னுடைய பொருத்தமற்ற செயற்பாடுகள், நடவடிக்கைகள் மூலம் தாம் நீதித்துறை ஊழல் புரிந்துள்ளமையை சரத் என் சில்வாவே ஒப்புக் கொண்டிருக்கின்றார்.

2005 ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ போட்டியிடக் கூடிய நிலைமையை 'ஹெல்பிங் ஹம்பாந்தோட்டை' விவகாரத்தில் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா வழங்கிய தீர்ப்பே ஏற்படுத்தியது. அந்த விடயத்தில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஒரு சலுகை கிடைக்கும் விதத்தில் தாம் தீர்ப்பு வழங்கினார் என்பதை ஒப்புக் கொள்ளும் வகையில் பி.பி.ஸி. சிங்கள சேவைக்கு சரத் என் சில்வா பேட்டியளித்துள்ளார். அது நீதித்துறை ஊழல் நிகழ்ந்துள்ளது என்பதை ஒப்புவிக்கப் போதுமானது.

2015 தேர்தலின் பின்னர் மஹிந்த ராஜபக்ஷவுக்குச் சார்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் சட்டமுறையற்ற சாதகங்களைப் பெறுவதற்கு அப்போதைய பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் முயன்றிருக்கின்றார்.

நீதிபதிகள் நியமனம் மற்றும் உயர் நீதிமுறைகளைக் கையாளும் விடயங்களைத் தனது கைக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எடுத்துக் கொள்வதற்கு வசதியாக அரசமைப்பு கவுன்ஸிலை ஒழிக்கும் திட்டத்துக்கு இயைந்து செயற்பட்டதன் மூலம் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டார நாயக்கா மக்கள் அவர் மீது நம்பிக்கையைத் தகர்த்து நீதித்துறை ஊழல் புரிந்திருக்கின்றார்.

தேசியப் பட்டியல் எம்.பிக்கள் நியமன விடயத்தில் எழுந்த சட்டச் சிக்கலின் போது தற்போதைய பிரதம நீதியரசர் கே.ஸ்ரீபவன், தற்போதைய அரசுக்குச் சார்பாகத் தமது கருத்தை வெளிப்படுத்தி நீதித்துறை ஊழல் புரிந்திருக்கின்றார்.

தேர்தலில் மக்களால் தோற்கடிக்கப்பட்ட வேட்பாளர் ஒருவர் நாடாளுமன்றத்துக்குள் நுழைய வகை செய்யும் சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கு சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்களின் அனுமதி பெறத் தேவையில்லை என்று 14 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் போது தீர்மானித்ததன் மூலம் உயர்நீதிமன்றம், தன்னிடம் மக்களால் சமர்ப்பிக்கப்பட்ட நீதித்துறை அதிகாரத்தை பொறுப்பின்றி ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவிடம் சரணடைய வைத்தது.

அது மாத்திரமல்ல, 14 ஆவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பில் – அத்தகைய திருத்தம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டும் என்ற அரசமைப்புத் தேவையை அது நிறைவு செய்யாமல் சமர்ப்பிக்கப்பட்ட போதும் – நாடாளுமன்றத் தெரிவுக்குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட சட்டமூலத்தின் வடிவத்துக்கு மேலதிக சில விடயங்களைத் தட்டச்சுச் செய்து சேர்த்துக்கொண்டு "மை டியர் பிரதம நீதியரசர் " என்று விளித்து, ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன கைப்பட எழுதிய கடிதத்துடன் இணைத்து அது வந்ததால் – அதற்குச் சார்பாக நடந்துகொண்டதன் மூலம் அப்போதைய நீதியரசர் பாரிந்த ரணசிங்க நீதித்துறை ஊழல் புரிந்துள்ளார்.

– இவ்வாறு மேற்படி சட்டத்தரணி நாகநந்த கொடித்துவக்கு தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இந்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றமையை லஞ்ச, ஊழல் முறைப்பாடுகள் தொடர்பான விசாரணை ஆணைக்குழு வட்டாரங்கள் உறுதி செய்துள்ளன.

அவர் முறைப்பாடு தொடர்பாக வாக்குமூலம் அளிப்பதற்காக எதிர்வரும் 15 ஆம் திகதி ஆணைக்குழுவுக்கு சமுகம் தரும்படி மேற்படி சட்டத்தரணிக்கு ஆணைக்குழுவின் சார்பில் சிரேஷ்ட இன்ஸ்பெக்டர் ஆனந்த பெரேரவின் ஒப்பத்தோடு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவந்தது.

ஐந்து பிரதம நீதியரசர்களுக்கு எதிராக லஞ்ச, ஊழல் விசாரணைக் குழுவில் தாம் செய்த முறைப்பாட்டை ஒரு மனுவாக உயர்நீதிமன்றத்திலும் சட்டத்தரணி கொடிதுவக்கு தாக்கல் செய்துள்ளார்.

இந்த வழக்கு நீதியரசர் பிரியசத் டெப் தலைமையிலான உயர்நீதிமன்ற ஆயத்தின் முன்னால் எடுத்துக்கொள்ளப்பட்டது.

மனுதாரரின் கோரிக்கையின் பேரில், தற்போதைய பிரதம நீதியரசர் கே.ஸ்ரீபவன் அடுத்த ஆண்டு பெப்ரவரி 29 ஆம் திகதி ஓய்வுபெற்ற பின்னரான ஒரு திகதியில் – அதாவது மார்ச் 2 ஆம் திகதி – இந்த வழக்கை விசாரணைக்கு எடுப்பதற்கு நீதிமன்றம் தீர்மானித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று நாடாளுமன்றத்தில் அவர் கூறிய விடயங்கள் வருமாறு:-

எனது கையடக்கத் தொலைபேசிக்கு செவ்வாயன்று தொலைபேசி அழைப்பு ஒன்று வந்தது. அவ்வாறு அழைப்பை ஏற்படுத்திய நபர் ஒருவர், அரசமைப்பை உருவாக்கும் நடவடிக்கைகளில் எனது வகிபாகத்தைத் தொடர்புபடுத்தித் தகாத வார்த்தைகளால் திட்டினார்.

அதனைத் தொடர்ந்து என்னையும், எனது குடும்பத்தையும் கொலை செய்யப்போகிறார் எனவும் அச்சுறுத்தல் விடுத்தார். ஆகவே அந்த விடயம் குறித்து கவனம் செலுத்துமாறு பிரதி சபாநாயகரிடம் கேட்டுக்கொள்கிறேன். குறித்த சம்பவம் தொடர்பாக நான் வெலிக்கடைப் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளேன்.

கருத்துக்களைக் கருத்துக்களால் எதிர்கொள்ள முடியாதவர்களே இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர். இவ்வாறான அச்சுறுத்தல் மூலம் எமது பயணத்தைத் தடுத்து நிறுத்திவிட முடியாது. – என்றார் அவர்.

அதனையடுத்து பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபால "உங்களுடைய விடயத்தை சிறப்புரிமை பற்றிய குழுவுக்கு ஆற்றல்படுத்துகிறேன். பொலிஸ்மா அதிபர் ஊடாகத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்." – என்று அறிவித்தார்.

## நவீனமாகிறது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வசதிகளுடன் கூடிய விமானங்கள் எம்மிடம் இருக்க வில்லை. உக்ரெய்னில் இருந்து விமானங்கள் என்ற பெயரில் இரும்புகளே கொண்டு வரப்பட்டன. அவை எமக்குத் நன்கு தெரியும்.

நாங்கள் தற்போது பல்பணி யுத்த விமானமொன்றை கொள்வனவு செய்யவுள்ளோம். அவ் விமானத்தைக் கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை முதற்தடவையாக அனுமதியளித்துள்ளது.

அடுத்து நாம் நவீன கப்பல்களையும் கொண்டுவரவுள்ளோம். அக்கப்பல்கள் கடலோர நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக கடல் முழுவதும் பயணித்து நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடியவையாக இருக்கும்.

எமது இராணுவத்தினர் நேபாளத்திற்கு சென்று உதவிச்செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தனர். அதேபோன்று எமது இராணுவத்தினர் ஐ.நா.அமைதி காக்கும் படைகளுடன் இணைந்து தற்போது மாலியில் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த ஆட்சியின் போது ஐ.நா. அலுவலகம் முன்பாக சென்று உண்ணாவிரதம் என்ற பெயரில் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டு இரவில் பொரித்த கோழி சாப்பிட்ட நிகழ்வுகளே இடம்பெற்றிருந்தன. அவை தொடர்பாக நான் பேசவில்லை.

தற்போது ஈராக்கை பாருங்கள். ஈராக்கில் மக்கள் ஆதரவு இன்மையினாலேயே அங்கு தற்போது வரையில் பிரச்சினைகள் நிலவுகின்றன.

பயங்கரவாதிகளிடம் இருந்து மக்களைக் காப்பாற்றுவதற்கே நாம் யாழ்ப்பாணத்திற்கு சென்றிருந்தோம். மக்களின் ஆதரவு எமக்கு இருந்தால்தான் இராணுவத்தினரின் எண்ணிக்கையை எவ்வாறு பயன்படுத்துவது என்பதை தீர்மானிக்கமுடியும். பயங்கரவாதம், மக்கள் ஆதரவுடன் இருந்தால் தான் பிரச்சிணை அவ்வாறான நிலையை மாற்றியமைக்க வேண்டும்.

மக்களின் ஒத்துழைப்புடன் எம்மால் செயற்பட முடிந்துள்ளது. குறிப்பாக அண்மையில் யாழ்ப்பாணத்தில் இரண்டு பல்கலைக்கழக மாணவர்கள் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டின் விளைவாக உயிரிழந்த போது கவலை வெளியிட்டிருந்தோம். அதேநேரம் தெற்கில் இவ்வாறானதொரு சம்பவம் இடம்பெற்றிருந்தால் பெரும் கலவரம் ஏற்பட்டிருக்கும் என்பது எமக்குத் தெரியும்.

அந்தச் சம்பவத்தை அடுத்து இராணுவத்தைக் களமிறக்கி அங்கு குவிப்பதற்கு கோரிக்கை முன்வைக்கப்பட்டது. நான் அதனை நிராகரித்தேன். பொலிஸாரை மட்டும் பயன்படுத்துமாறு நான் உத்திரவிட்டேன்.

யாழ். மாவட்ட கட்டளைத்தளபதியாக மேஜர் ஜெனரல் மகேஷ் சேனாநாயக்கவை நாம் நியமித்துள்ளோம். யுத்தத்தின் போது பெரும் சேவையாற்றிய இவரை மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியின் போது நாட்டைவிட்டு வெளியேற்றினர். ஆப்கானிஸ்தானுக்கு அனுப்பினார். பின்னர் ஈராக்கிற்கான தூதுவராக்கினார். அவர் தற்போது அங்கு அனுபவங்களை பெற்றுவந்துள்ளார். அவர் சிறப்பாக சேவையாற்றுவார். அதே போன்று மேஜர் ஜெனரல் ரணசிங்க தற்போது ஈராக்கின் தூதுவராக நியமிக்கப் பட்டுள்ளார். அவரின் மூலம் இலங்கைக்கு சிறந்த அனுபவங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

ஜகத் டயஸ் போன்ற இராணுவ அதிகாரிகள் யுத்தத்தின் போது பாரிய சேவையாற்றினர் என்பது எமக்கு தெரியும். நாம் அதனை நிராகரிக்கவில்லை. ஆனால் அதற்காக, அனைத்து அதிகாரிகளினதும் பதவிக்

(20 ஆம் பக்கம் பார்க்க...)

காலைக்கதிர்
Kalaikkathir

## பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றும் நட்புணர்வும் முக்கியமாகும். நாட்டை முன்னேற்றும் விடயத்தைப் பொறுத்த வரையில் எம்முடன் நட்பான சக்திகள், பகைமையான சக்திகள் ஆகியவற்றை அடையாளம் காணவேண்டும். எமது நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.

பிரச்சினைகளின் பின்னணியை அடிப்படையாகக் கொண்டு நாட்டில் யுத்தம் ஏன் ஏற்பட்டது என்பதை முதலில் புரிந்துகொள்வதுஅவசியமாகும். எமது நாட்டில் யுத்தமொன்று ஏற்பட்டமைக்கான காரணம் என்ன, யுத்தம் நிலவிய போதான நிலைமைகள், யுத்தம் மீண்டுமொரு தடவை ஏற்படுவதை தடுத்தல்என்பனதொடர்பாக யுத்தத்தின் நிறைவின் பின்னர் ஆராய்ந்து பார்த்திருக்க வேண்டும். ஆனால் கடந்த ஆட்சியின் போது அந்தப் பொறுப்பு தவறவிடப்பட்டுள்ளது.

முப்படையினர் யுத்தம் மற்றும் ஆயுத ரீதியாகப் பணியாற்றியுள்ளனர். அது தேசிய பாதுகாப்பு தொடர்பாக ஒருதுறை சார்ந்த விடயம் மட்டுமே ஆகும். தேசிய பாதுகாப்புக்கு பிரச்சினை வரும் என்ற அபசகுனமான நிலைமையை உணர்ந்தால் அதற்குரிய–முன்கூட்டிய–தீர்வொன்றைக் காண்பது மிகவும் முக்கியமானதாகின்றது.

இங்கு உரையாற்றிய உதய கம்மன்பில உறுப்பினர், எதிர்காலத்தில் மீண்டுமொரு யுத்தம் ஏற்பட்டால் என்றொரு கேள்வியை எழுப்பியிருந்தார். மீண்டும் யுத்தமொன்று ஏற்படக்கூடும் என்ற எண்ணமொன்று ஏற்படுமாயின் அந்த எண்ணத்தை இல்லாதொழிப்பதற்கு நாட்டு மக்களுக்கான அடிப்படை வேலைத் திட்டமொன்றுகாணப்படவேண்டும்.

பல்குழல் பீரங்கிகளை வைத்துக் கொண்டு நவீனத்துவம் அடைந்து வரும் தற்போதைய காலத்தில்படையினரால்பெரிதாக எதனையும் செய்ய முடியாது. சைபர் பயங்கரவாதம் மற்றும் சைபர் குற்றச்செயல்களை நவீன தொழில்நுட்பங்களுடன் முகம் கொடுக்க வேண்டிய நிலைமை உருவாகும் சூழல் உள்ளது. அதற்கு நாம் தயாராக வேண்டும்.

தேசிய பாதுகாப்பு தொடர்பான பொறுப்பை நிறைவேற்ற நாம் உச்சப்பட்சம் செயற்படுவோம். தேசியபாதுகாப்பில்எந்தவிதமான பலவீனப்படுத்தலுக்கும் நாம் இடமளித்திருக்கவில்லை. எதிர்காலத்தில் நாம் இடமளிக்கவும் மாட்டோம். அவ்வாறிருக்கையில் தேசியபாதுகாப்புக்குஅச்சுறுத்தல் ஏற்படுத்தப்படுவதாகத் தவறான தகவல்கள் பிரசாரம் செய்யப்பட்டு வருகின்றமைகலைக்குரியவிடயமாக இருக்கிறது.

தேசிய பாதுகாப்பாக இருக்கட்டும், அரச பாதுகாப்பாக இருக்கட்டும் அவை தொடர்பில் எவ்வாறான விமர்சனங்கள் வெளியிடப்பட்டாலும் கூட அரசாங்கம் என்ற வகையில் இராணுவத்தை பலவீனப்படுத்தும் வகையில் செயற்படமாட்டோம். அதற்கு ஒரு போதும்இடமளிக்கவும்மாட்டோம். மாறாக இராணுவத்தை நாம் பலப்படுத்துவோம்.

### எட்கா ஒப்பந்தம்

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான வர்த்தக உடன்படிக்கை தொடர்பாக நாட்டு மக்களுக்கு தேவையற்ற அச்சத்தை ஏற்படுத்த வேண்டாம். தவறான தகவல்களை வெளியிட்டு குற்றச்சாட்டுக்கள்முன்வைக்கப்பட்டுவருகின்றன. மக்களை தவறாக வழிநடத்தும் கருத்துக்கள் தொடர்பாக நான் கவலையடைகிறேன்.

இந்தியாவுடன் வர்த்தக உடன்பாடான எட்கா ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளது. எனினும் அந்த ஒப்பந்தத்தை கைச்சாத்திடுவதற்கு முன்னதாக அதனை அமைச்சரவைக்கு சமர்ப்பித்து அங்கீகாரம் பெறப்படும். அதன் பின்னர் அந்த ஒப்பந்தம் நாடாளுமன்றத்துக்கு சமர்பிக்கப்படும். அதில் ஏற்றுக்கொள்ள முடியாத விடயங்கள் இருப்பின் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்படும். அதன் பின்னர் அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய எட்கா ஒப்பந்தமொன்றே கைச்சாத்திடப்படும் என்பதை நான் உறுதியாக கூறுகின்றேன்.

எமது பொருளாதார மற்றும் ஏனையஒத்துழைப்புகளின்நிமித்தம்சகலநாடுகளுடனும்ஒப்பந்தங்களையும் ஒத்துழைப்புகளையும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம். எதிர்காலத்தில் பல நாடுகளுடன் ஒப்பந்தங்களை செய்வதற்குஎதிர்பார்த்துள்ளோம்.

### புதிய அரசமைப்பு

புதிய அரசமைப்பை உருவாக்குவது தொடர்பான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் அச்செயற்பாடு தொடர்பாகவும் தவறான கருத்துக்களே மக்கள் மத்தியில்பிரசாரம்செய்யப்படுகின்றன.

புதிய அரசமைப்பை உருவாக்கும் செயற்பாடுகளைப் பொறுத்தவரையில் நாம் எடுத்துள்ள நடவடிக்கைகள் தற்போது வரையில் பேச்சு மட்டத்திலேயே உள்ளன. குழுக்களின்அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அவைஆராயப்பட்டுவருகின்றன. அவ்விடயங்கள் தொடர்பில் எவ்விதமான உடன்பாடும் எட்டப்படவில்லை. குறித்த விடயங்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பேச்சு, யோசனைகளை முன்வைத்தல், திட்டமிடல் மட்டங்களிலேயே உள்ளன.

### அனைவருக்கும் அழைப்பு

எதிர்காலத்துக்கு நாடு தயாராகும் போது புதிய அரசமைப்பு, புதிய வர்த்தக உடன்படிக்கைகள், பொருளாதார திட்டங்கள் என அனைத்தும்அவசியமாகும்.நாம் எதிர்காலத்துக்கென தயாராகும் போதுஇங்குள்ளஅனைவரினதும் ஆதரவு தேவையாகும். வர்த்தக உடன்படிக்கைகள், புதிய அரசமைப்பு மற்றும் கட்டளைச் சட்டங்களைத் தயாரிக்கும் போது மக்களினதும் விடயத்துடன் சம்பந்தப்பட்ட நிபுணர்களினதும் அபிப்பிராயங்களைபெற்றேநாம்செயற்படுவோம். ஆகவே தவறான பிரசாரங்களை முன்னெடுத்து மக்களை தவறாக வழிநடத்த வேண்டாம்.

புதிய அரசமைப்பு தொடர்பாக விமர்சிக்கின்றார்கள். எதிர்காலத்தில் அதிகாரத்திற்குவரும் நோக்கத்துடன் குறுகிய அரசியல் இலக்கோடு செயற்படுவார்களாயின் அதன் பிரதிபலனை எதிர்காலத்தில் சகலரும் அனுபவிக்க வேண்டியநிலைமையேஏற்படும்.

எமது பொறுப்பை நாம் தற்போதைய சூழலில் நிறைவேற்றாவிட்டால்எதிர்காலம் இருள் சூழ்ந்ததாகிவிடும். ஆகவே பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நாம் சகோதரத்துவதுடனும் ஒற்றுமையுடனும் செயற்படுவதற்குஅனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றேன் – என்றார். (உ)

# வடக்கு மாகாண சபைக்கு தனியாக மாகாண கீதம்

யாழ்ப்பாணம், டிசெ.08

வடமாகாண சபைக்கு மாகாணக் கீதம் ஒன்றை உருவாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவடமாகாண சபையின் அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் அறிவித்துள்ளார்.

சபையின் அமர்வு நேற்று புதன்கிழமை சி.வீ.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்றபோதே இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

வடமாகாண சபைக்கு மாகாணக் கீதம் ஒன்றை உருவாக்குவதற்கு சபையின் நடவடிக்கைக் குழுவால் கோரிக்கை விடப்பட்டுள்ளது. இதற்குஅமைவாக இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. பகிரங்கமாக பத்திரிகைகளில் விளம்பரங்களை வெளியிட்டு, அதற்கமைய பொது நபர்களால் உருவாக்கப்பட்டுச் சமர்ப்பிக்கப்படுகின்ற கீதத்தை சபையில் சமர்ப்பித்து, அதனைச் சபை உறுப்பினர்களின் பரிசீலனைக்கு விடலாம்.

மாகாண கீதம் உரிய முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது என்பதை உறுப்பினர்கள் ஆராய்ந்த பின்னர் அதனை அங்கீகரிக்க முடியும். – என்றார் அவர். (உ -10)

# முள்ளிவாய்க்காலில் புதைக்கப்பட்ட இரு இரும்புப் பெட்டகங்கள் மீட்பு

## அவற்றின் உள்ளே எதுவுமில்லை

முல்லைத்தீவு,டிசெ.08

முல்லைத்தீவு – முள்ளிவாய்க்கால் மேற்குப் பகுதியில், இறுதி யுத்த காலத்தில் புதைக்கப்பட்ட இரண்டு இரும்புப் பெட்டகங் கள் மீட்கப்பட்டுள்ளன. கரைத்துறைப்பற்று பிரதேச சபையின் பொதுச்சந்தை அமைந்துள்ள வளாகத்திலேயே இவை மீட்கப்பட்டன.

மேற்படி சந்தை வளாகத்தில் தேவையொன்றின் நிமித்தம் பிரதேச சபைப் பணியாளர்களால் கிடங்கு வெட்டப்பட்டபோதே இந்த பெட்டகங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்தச் சம்பவம் தொடர்பாக முல்லைத்தீவு பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. அங்குசென்று பார்வையிட்ட பொலிஸார், நீதிமன்றஅனுமதியைப்பெற்றபின்னர் நேற்று அந்த இடத்தை அகழ்ந்து இரும்புப் பெட்டகத்தை வெளியே எடுத்தனர். ஆனால், அந்தப் பெட்டகங்களுக்குள் எந்தப் பொருளும் இருக்கவில்லை.

அந்தப்பெட்டகத்தைஏற்கனவே யாராவது கிளறி எடுத்து அதில் உள்ளபொருட்களைக்களவாடிய பின்னர் மீண்டும் புதைத்திருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, தோண்டி எடுக்கப்பட்ட இரு பெட்டகங்களும் நேற்று மாலை முல்லைத்தீவு நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டன. (ம-8)

# இந்துக் குருமார்களின் ஊர்வலத்துக்கு தடை விதிக்க மட்டு. நீதிமன்றம் மறுப்பு

மட்டக்களப்பு மாவட்ட இந்துக் குருமார் ஒன்றியம் ஊர்வலம் மற்றும் ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவற்றினை தடுத்து நிறுத்துமாறும் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட மனுவை நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தப்படாமல்அமைதியான முறையில்ஊர்வலம்செல்லவும் ஆர்ப்பாட்டம் நடத்தவும் அனைவருக்கும் உரிமை யுள்ளது எனவும் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி எம். கணேசராஜா சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பான மனு நேற்று முன்தினம்மட்டக்களப்புபொலிஸ் தலைமையகத்தினால் தாக்கல் செய்யப் பட்ட நிலையில் நேற்று விசா ரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன் பிரகாரம் மட்டக் களப்பு இந்துக்குருமார் ஒன்றிய உறுப்பினர்கள் மட்டக் களப்பு நீதவான் நீதிமன்றில் ஆஜராகினர்.

இதன்போது இந்துக்குருமார்ஒன்றியத்தின்சார்பில்சிரேஷ்ட சட்டத்தரணி கே. பிரேம்நாத் ஆஜரானார். வாதப் பிரதிவாதங்களும் இடம்பெற்றன.

மட்டக்களப்பு நகரில் மங்களராமவிகாராதிபதியினால்நீதிமன்றத்தின்கட்டளையைமீறிஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டதாகவும், அச்சந்தர்ப்பத்தில் பொலிஸார் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லையெனவும் சட்டத் தரணி கே.பிரேம் நாத் சுட்டிக்காட்டினார்.

அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் நடாத்தவோ, ஊர்வலம் நடாத்தவோ மட்டக்களப்பு மாவட்ட இந்துக் குருமார் ஒன்றியத்திற்கு உரிமையுள்ளது என்பதையும் இதன்போதுஅவர்சுட்டிக்காட்டினார்.

இதன்போது, இன்று (நேற்று) புதன்கிழமையோ, வியாழக்கிழமையோ தாங்கள் எந்தவித ஊர்வலத்தையோஆர்ப்பாட்டத்தையோ நடாத்தும் முயற்சியை மேற்கொள்ள வில்லையென மட்டக்களப்பு மாவட்ட இந்துக் குருமார் ஒன்றியம்நீதிமன்றில்தெரிவித்தது.

இதேவேளை நேற்று மட்டக்களப்பு நகரில் பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. மட்டக்களப்பு மங்களராம விகாரையை சுற்றியும் அதிகளவு பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். அத்துடன், நகரின் நுழைவாயில் உட்பட பல்வேறு பகுதிகளிலும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது. (ம)

## சீன முதலீட்டா...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

ளிப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அண்மையில் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

மஹிந்த ராஜபக்ஷ உட்பட ஒன் றிணைந்த எதிர்க்கட்சிகள் இதற்கு எதிர்ப்பை வெளியிட்ட போதிலும் இதிலிருந்து பெறப்படும் பணத் தைக் கொண்டு கடனைச் செலுத்தவுள்ளதாகவும் பிரதமர் கூறியி ருந்தார்.

இதற்கமைய அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை அண்மித்த பகுதி சீன முதலீட்டாளர்களுக்குத் திறக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் சீன முதலீட்டாளர்களுக்குக் குறித்த வலயம் வழங்கப்பட்டால் தமது தொழிலுக்குப் பாதிப்பு ஏற்படும் என்று அம்பாந்தோட்டைத் துறைமுக ஊழியர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குறித்த வலயத்தில் சீனா முதலீடு செய்தால் துறைமுகமும் சீனாவிற்கே சென்று விடும் என்றும், அதனூடாக சீனப் பிரஜைகளுக்குத் தொழில்வாய்ப்பு கொடுக்கப்பட்டுத் தங்களது தொழில் பறிக்கப்பட்டுவிடும் என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

துறைமுகத்தில் பணிபுரிகின்ற அனைத்து ஊழியர்களையும் உடனடியாக நிரந்தரப் பணியாளர்களாக நியமிக்கும்படியும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கை முன்வைத்தனர்.

சீன அரசாங்கத்தின் நிதியுதவியுடனேயே முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை அழைத்து அதனைக்கடந்த 2010 ஆம் ஆண்டு நவம் பர் மாதம் திறந்து வைத்திருந்தார். (உ)

## 48 பயணிக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ணம் கட்டுப்பாட்டு அறையுடனான தொடர்பை இழந்து மாயமானது.

இந்நிலையில் அபோத்தாபாத் அருகே மலைப்பகுதியில் விமானம் நொறுங்கி விழுந்ததாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அபோத்தாபாத் மாவட்டத்தில் உள்ள ஹவேலியன் என்ற ஊரில் விமானம் விழுந்து நொறுங்கியதாகப் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

விமானத்தைக் கண்டுபிடிக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன என பாகிஸ்தான் சர்வதேச விமான நிறுவன செய்தித் தொடர்பாளர் தனியால் கிலானி அறிவித்துள்ளார்.

விமானம் ஒரு கிராமத்தில் விழுந்துநொறுங்கியுள்ளதாகவும், மீட்புக் குழுவினர் விமானம் விழுந்தஇடத்திற்குச்செல்லமுயற்சி செய்து வருகின்றனர் என வும் இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## கிணற்றில் வீழ்ந்த வயோதிபப் பெண் பலி!

அச்சுவேலி,டிசெ.08

நீர் எடுக்கச் சென்ற வயோதிபப் பெண்ணொருவர் தவறுதலாகக் கிணற்றில் வீழ்ந்து உயிரிழந்தார். நேற்று புதன்கிழமை மாலை அச்சுவேலி தோப்பு பகுதியில்இந்தச்சம்பவம்இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த பிறைசூடி மணோன்மணி (வயது –55) என்ற பெண்ணே உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் அச்சுவேலிப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (ம-09)

## பனிக்கன்குளத்தில் கஞ்சாவுடன் 2 இளைஞர்கள் கைது

வவுனியா–பனிக்கன்குளத்தில் நேற்று மாலை 5 மணியளவில் கேரளக் கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டனர் என மாங்குளம் போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர்

கிளிநொச்சியில் இருந்து வவுனியா நோக்கி மோட்டார் சைக்கிளில்சென்றுகொண்டிருந்த இரு இளைஞர்களை பனிக்கன்குளம் பகுதியில் வீதிக் கடமையில் ஈடுபட்டிருந்த மாங்குளம்பொலிஸ் நிலையப் போக்குவரத்து பொலிஸார் மறித்துச் சோத னையிட்டனர். அவர்களிடமிருந்து 30 கிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டது. (ம-81)

## நவீனமாகிறது...

(19ஆம் பக்கத் தொடர்ச்சி)

காலத்தை நீடித்துக் கொண்டிருந்தால் அடுத்தடுத்த கட்டத்திலுள்ள அதிகாரிகளுக்கு உயர் பதவிகளை வழங்க முடியாமல் போய்விடும். நீங்கள் கூறுவது போன்று அவ்வாறானவர்களுக்கு தொடர்ந்தும் பதவிக் காலம் நீடிக்கப்பட்டால் இறுதியில் எமது இராணுவம் வயதான இராணுவம் ஆகிவிடும்.– என்றார். (உ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.12.2016 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.